

KALKI 8.1.95
ரூ. 3.00
கல்கி
பொங்கலை வரவேற்கும்
கிராமச் சிறப்பிதழ்
காகிதப் பூவும்
மணக்கும்!


இன்றைய நாகரீக நங்கையரைப் படைக்கிறது குப்தா புடவைகள்.
Gupta®
Sarees & Dress Materials
பீச் சில்க்
மார்பிள் ஷிஃபான்
மைக்ரோ ஜார்ஜெட்
மார்பிள் ச்செக்ஸ்
க்ரேப் சில்க் ஸாரி
ரீகல் ஜார்ஜெட்
யுரா கிரி புட்டா
மெட்டல் ஷிஃபான்
ஸ்விஸ் சில்க்
நிஷி க்ரேப்
C.D. ஜாக்கார்டு



• ரோஜா, நாற்றுநட ஆசைப்பட்ட இடம்...

மந்திரிகள் இல்லாமல் ஒரு மாண்புமிகு கிராமம்!



• விஜயலட்சுமி

'ரோஜா'வில் பார்த்திருப்பீர்கள், அந்தக் கிராமத்தை. சுந்தரபாண்டியபுரம். திருநெல்வேலியிலிருந்து இரண்டு மணிநேர தூரம். தென்காசியிலிருந்து சுமார் பத்து கிலோமீட்டர். ரூட்டில் மூன்று பஸ்கள் ஓடுகின்றன. கிடைப்பதற்கு நீங்கள் போன ஜென்மத்தில் யாகங்கள் பண்ணியிருக்க வேண்டும். தவிரவும் அந்தத் நகர நெரிசலில் சிக்கிச் சீரழிந்து யாரும் சொர்க்கத்தைச் சுற்றிப் பார்க்க விரும்ப மாட்டார்கள். ஆகவே செலவு பார்க்காமல் ஆட்டோ பிடித்தால் ஒரு மாறுபட்ட உலகத்தை மனம் திறந்து, விழி விரிய, வாய் பிளந்து ரசிக்கலாம்.

பாதையின் இருபுறமும் பச்சைக் கடல். இஸ்திரி போட்டாற்போல் சமஅளவில் வளர்ந்து சிரிக்கும் வயல்வெளிகள். நடுநடுவே வாழைப் புரட்சி. தென்னைப் புரட்சி. சட்சட்டென்று வளைவுகளில் குதித்துப் பெருகும் குற்றாலப் பெருவெள்ளம். தூண்டில் போடும் விடலைகள். துணி துவைக்கும் தேவதைகள். துள்ளி வரும் ஆட்டுக் குட்டிகள். துரத்தி வரும் தென்றல். ஏன் விட்டு வைக்கிறது கோடம்பாக்கம்? செலுலாய்டில் சிறைப்பிடித்துக் கடைவிரிக்கிறார்கள்.



• சுந்தரபாண்டியபுரம்....

ஆனால், இயற்கை அணிவகுப்பு மட்டுமே இக்கிராமத்தின் சிறப்புக்குக் காரணமில்லை என்பதுதான் விஷயம்.

நம் தேசத்தின் ஆத்மா கிராமங்களில் இருக்கிறதென்று காந்தி சொன்னாரா? மெய்ப்பிக்கிறது சுந்தரபாண்டியபுரம்.

"இன்றுவரை சுந்தரபாண்டியபுரத்துக்கென்று ஒரு போலீஸ் ஸ்டேஷன் கிடையாது. ஒரு போலீஸ்காரர் உள்ளே நுழைந்ததும் கிடையாது" என்கிறார் கோபாலசுப்ரமணியன், நாற்பத்தொரு வயதான கிராமக் கமிட்டித் தலைவர். சுந்தரபாண்டியபுரத்தின் பெருமைகளெல்லாம் இந்தக் கமிட்டி தந்த வரம்.

கட்சி, வகுப்பு பேதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு கிராம மக்கள் ஒருங்கிணைந்து அமைத்திருக்கும் இந்தக் கமிட்டி, மத்திய, மாநில அரசாங்கங்களெல்லாம் தலைகுனியும்படி கிராம நிர்வாகத்தைத் திறம்படச் செய்து வருவது நாம் நேரில் கண்ட ஆச்சர்யம்.

இரண்டு உதாரணங்கள். கிராமத்துக்குள் சாராயம் குடிக்கக் கூடாது; சாராயக் கடைகள் கூடாது என்பது கமிட்டியின் ஆணை. ஊர் ஒப்புக் கொண்டது. ஒரு 'குடிமகன்' கூட நாம் தேடியும் கிடைக்கவில்லை!

ஆச்சரியம் இரண்டு :

ஊரில் உள்ள சின்ன சினிமா தியேட்டர் ஒன்றில் ரகளை. காரணமில்லாமல் க்யூவில் நின்ற ஊர்க்காரர்களை அடித்துவிட்டது தியேட்டர் நிர்வாகம். விஷயம் கமிட்டிக்கு வர, நியாயம் மக்கள் புறம் இருப்பது தெரிந்து, 'தியேட்டர்காரர்கள் தம் தவறுக்குக் கிராம மக்களிடம் பொது மன்னிப்புக் கோரி, அபராதத் தொகையாக 4,000 ரூபாய் கட்டினாலொழிய தியேட்டருக்கு யாரும் போவதில்லை' என்று முடிவு செய்தார்கள்.

விளைவு?

இரண்டு நாட்கள் ஒருத்தர் என்றால், ஒருத்தர் கூட தியேட்டர் பக்கம் போகாமல் போகவே, ஓனர் அலறிக் கொண்டுவந்து விழுந்து மன்னிப்புக் கேட்டிருக்கிறார்.

மறுநாள் ஹவுஸ்ஃபுல்!


"நியாயத்தைத் தவிர கமிட்டி, வேறொன்றும் செய்யாது என்று மக்களுக்குத் தெரியும். அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை அப்படி. தவிரவும், கிராமத்தினர் அத்தனை பேரும் படித்தவர்கள். கைநாட்டுப் பேர்வழிகள் இங்கே இல்லை" என்கிறார் கோபாலசுப்ரமணியன்.

அதுவும் உண்மை. டிகிரி படித்து விட்டு ஏர்தூக்கி உழும் இளைஞர்களைத் தெருவுக்குத் தெரு பார்க்க முடிகிறது.

உரக்கடை வைத்திருக்கும் ஒரு பட்டதாரி இளைஞர், "படிச்சிட்டோம்ங்கிறதுனால பரம்பரைத் தொழிலை விட்டுற முடியுங்களா? விவசாயத்தைவிடச் சிறந்த தொழில் இருக்க முடியுங்களா?" என்றபோது புல்லரித்தது.

இது ஒருபுறம் என்றால், இன்று மூலைக்கு மூலை, சந்துக்குச் சந்து, மேடைக்கு மேடை மைக் போட்டு அலறிவரும் குடும்பக் கட்டுப்பாட்டு சமாசாரம் - சுந்தரபாண்டியபுரத்தில் 90 வருஷங்களுக்கு மேலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு சட்டம்.

"முன்னெல்லாம் ரெண்டு பிள்ளைங்க பெத்துக்கலாம்னு ரூல் போட்டிருந்தாங்க.



• பெற்றோருடன் 'பெட்டிப்' பாப்பா வைஷ்ணவி.



• கமிட்டி செயல்படுகிறது....

இப்பம் ஒண்ணுதான். ஒரு காலகட்டத் துக்கப்புறம் ரூலெல்லாம் தேவையில்லைன்னு ஆகி, இயல்பாகவே மக்கள் ஒண்ணோட நிறுத்திக்க ஆரம்பிச்சுட்டாங்க" என்கிறார் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த விஜயலட்சுமி.

பெற்றோரும் சமூகமும் 'நீ ஒரு விசித்திரப் பிறவி' என்று குழந்தை கமலரத்தினத்தைச் சற்று தூரத்தில் நிறுத்திப் பார்க்க, விளைவு - குழந்தைக்கு இனம் புரியாத குழப்பம், பயம். தொடர்வதாக ஒரு விலகல் மனப்பான்மை.

“சினிமாக்காரர்கள் சுத்தக் குறைவாக நடந்து கொள்கிறார்கள்!”

'ரோஜா' வெளிவந்து சுந்தரபாண்டியபுரத்தின் 'ப்யூட்டி' தெரிந்த பிறகு வரிசையாகப் படையெடுக்க ஆரம்பித்து விட்டார்கள். சூரியன் - சந்திரன், கருத்தம்மா, புதுநெல்லு புதுநாத்து, செவத்த பொண்ணு என்று ஏராளப் படங்கள்.

"சினிமாக்காரர்களின் வருகை எங்கள் கிராமக் கட்டுப்பாட்டையும் 'டிஸிப்ளினை'யும் அழித்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது" என்கிறார்கள் இவ்வூர் முக்கியஸ்தர்கள். "குப்பை போடுகிறார்கள். பள்ளி, கோவில் என்றெல்லாம் பார்க்காமல் 'சுத்தக் குறைவா'க நடந்து கொள்கிறார்கள். நாங்கள் படப்பிடிப்புக்காக எந்தக் கட்டணமும் வசூலிப்பதில்லை. எங்கள் உணர்வுகளை அவர்கள் புரிந்து கொள்ளமாட்டேனென்கிறார்கள்" என்கிறார்கள்.



• லாங் ஷாட்டில்....

"இனி படப்பிடிப்புகளுக்கு அனுமதி தரலாமா, வேண்டாமா என்று யோசிக்கிறோம்" என்கிறார்கள் கமிட்டி உறுப்பினர்கள்.

கோலிவுட் கவனிக்கக் கடவது.

இவர் சொன்ன இன்னொரு தகவல் மருத்துவத் துறைக்குச் சவால் விடக் கூடியது.

உறவுக்குள் திருமணம் செய்வது மருத்துவ ரீதியில் பிள்ளை பெறுவதில் சிக்கல் உருவாக்கும் என்கிறார்கள். ஆனால், இங்கே வாழும் மக்களில் 90% உறவினர்கள்தாம்! கிராமத்துக்குள்ளேயே திருமணம் முடித்து பக்கத்து வீட்டில் மாமியார், எதிர் வீட்டில் மைத்துனர், அடுத்த தெருவில் நாத்தனார், சன்னதித் தெருவில் சகலை என்று ஒரு மாறுபட்ட ஆச்சர்யம்!

"இன்றுவரை - உறவுக்குள் திருமணம் செய்ததால் குழந்தை பிறப்பில் பிரச்னை என்பது இங்கே கடந்த 100 வருடங்களாக ஒருதரம் கூட இல்லை" என்கிறார் பெரியவர் சங்கரன்.

திருமணமாகி 32 வருடத்திற்குமேல் குழந்தை இல்லாமல் இருந்த ராமமூர்த்தி - பொன்னாள் தம்பதியினர் கூட ஒரு சரித்திரத்தின் முதல் பக்கமாக அமைந்திருக்கிறார்கள்.

அதாவது தமிழ்நாட்டில் முதல் டெஸ்ட் - ட்யூப் பேபியின் பெற்றோர்கள்!

1990 இல் டாக்டர் கமலா செல்வராஜ் நிகழ்த்திய அந்த மருத்துவச் சாதனைக்கான சாட்சியாக குழந்தை கமலரத்னம் இங்கே இன்று யூனிஃபார்ம் போட்டு, யூ.கே.ஜி. போய்க் கொண்டிருக்கிறது!

ஆனால் ஒரு சோகம். பத்திரிகைகளும் பத்திரிகை, போட்டோ என்றால் ஓவென்று அழுகிறது. "அதீத பப்ளிசிட்டி அவளுக்கு இனம் புரியாத பயத்தைத் தந்திருக்கிறது. தான் எல்லோரைப் போலவும் சாதாரணக் குழந்தை இல்லையோ என்று ஒருவித காம்ப்ளக்ஸ் உருவாகியிருக்கிறது. வயதானால் சரியாகிவிடும் என்று கருதுகிறேன்" என்றார் கமலரத்தினத்தின் பள்ளி ஆசிரியர் ஒருவர்.

நலத்திட்டங்களாகட்டும், நற்பணிகளாகட்டும் - திருட்டு ஒழிப்பிலிருந்து திருவிழா நடத்துவது வரை கிராமக் கமிட்டி பொறுப்பேற்று, தன் செலவில் (ஒரு பெரிய ஏரி இருக்கிறது. குளம் என்கிறார்கள். அதில் மீன் பிடிப்பதைக் குத்தகைவிட்டு, வருட வருமானம் 1½ லட்சம்.) நடத்தி - அரசை எதற்கும் எதிர்பார்க்காததால் சட்டப்படி கிராம நலனுக்காக ஒதுக்கப்பட வேண்டிய தொகை கூட ரொம்ப மெதுவாகவே கிடைக்கிறது என்கிறார்கள் ஊர் மக்கள்.

"எங்கள் முயற்சி இருக்கட்டும் சார்! அரசும் எங்கள் சாதனைகளுக்கு உற்சாகமூட்டும் விதமாக உதவ முன்வந்தால் இன்னும் சிறப்பாகச் செயல்பட முடியுமே!" என்கிறார் கோபால சுப்ரமணியன்.


ரொம்ப நியாயம் என்று உரக்கக் கத்தத் தோன்றுகிறது.

— பா. ராகவன்

படங்கள் : **யோகா**

சென்னைக் குப்பம்-2000

அழகிய சென்னை - 2000 கிடக்கட்டும்; நகரின் பரபரப்பில் சலித்துப் போய், கிராமச் சூழ்நிலைக்கு ஏங்குகிற உள்ளங்களுக்காக அரசு என்ன செய்யப் போகிறது? சில யோசனைகள் :



- எழும்பூர் வந்து இறங்கியதுமே மண் வாசனையுடன் மாட்டு வண்டிகளின் வரவேற்பு.


- ரங்கநாதன் தெரு சந்தையில் கோழிச்சண்டை....





- தமுக்கு அடித்து விளம்பரப் படுத்தலாம்....

● மவுண்ட் ரோடில் மஞ்சுவிரட்டு....






● அடையாறு ஆலமரத்தடியில் பஞ்சாயத்து....

● பீச்சில் உள்ள சிலைகள் சிறுத்துப் போகும்படி மாபெரும் ஐயனார் சிலை நிறுவி, பொங்கல் வைத்து சினிமா டான்ஸ் ஆடலாம்.



கருத்து : அகிலா கார்த்திகேயன்; சித்திரம் : மதி



● கல்லூரிப் பெண்கள் கிராம ஃபேஷனைப் பின்பற்றலாம்....

1% கூடுதல் வட்டி	டெப்பாசிட் சேகரிப்பு மாதம் 25.12.94 முதல் 31.1.95 வரை

உடனடி வட்டி

ரூ. 10,000 /- மும் அதற்கு மேலும் 1 ஆண்டுக்கு டெப்பாசிட் செய்து 1 ஆண்டு வட்டி உடனடியாக பெறுவீர்

18% P.A.

இன்று உங்கள் பணத்தை முதலீடு செய்து

இருமடங்காக

40 மாதங்களில் பெறுவீர்

20% P.A.

ரூ. 5,000/- மும் அதற்கு மேலும் 1 ஆண்டுக்கும் அதற்கு மேலும் டெப்பாசிட் செய்து 6 மாத வட்டி உடனடியாக ரொக்கமாக பெறுவீர்

சசிநாத் சாஸ்வத நிதி லிமிட்டெட்

H.O. 36, ரங்க நாதன் தெரு, சென்னை - 600 017, **Ph** : 4346786

கிளைகள் : 35, M.C. ரோடு சென்னை - 600 021,

34C, ரயில்வே ரோடு, காஞ்சிபுரம்-631 501

56, கடப்பா டிரங் ரோடு, திருத்தணி-631 209.

லேவாதேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும் **ஸ்தாபிதம் - 1978** செவ்வாய் வார விடுமுறை

SOORYA ADVERTISINGS

கிராமச் சுவை...

ஒரே வீட்டில் ரண்டு கம்பெனியா?

"சொக்கலால் பீடி பிடிப்பியா? சொக்கலால் பீடி பிடிப்பியா?" என்று தமது பத்து வயது மகனைப் போட்டு அடித்துக் கொண்டிருந்தார் சுப்பையா என்பவர். எனக்கு வியப்பு. மகன் பீடி பிடிப்பதைக் கண்டிப்பது இயல்புதான் என்றாலும் ஒரு குறிப்பிட்ட கம்பெனி பீடியைப் பிடிக்கக் கூடாது என்றா கண்டிப்பார்கள்! விசாரித்தேன். "பின்ன என்ன சார்... நான் கணேஷ் பீடி பிடிக்கிறேன். இவனுக்கு மட்டும் என்ன சொக்கலால் பீடி கேட்குது? ஒரே வீட்டில் ரண்டு கம்பெனியா? ஒரு ஆத்திரம் அவசரம்னா நான் வெளியில போய்த்தானே யாரையாவது பீடி கேட்க முடியும்? இவனும் கணேஷ் பீடியே பிடித்தால், இவங்கிட்டயே வாங்க வசதியா இருக்குமே!" என்றாரே, பார்க்கலாம்! இது நடந்தது தட்டப்பாறை என்னும் கிராமத்தில்.

தூத்துக்குடி - 3, ஞானசேகரன்.

வித்தியாசமான விரதம்!

எங்கள் கிராமமான கலசப்பாக்கத்தில் நடுநிலைப் பள்ளிக்கான கட்டடம் கட்டுவதற்கான கடகால் பூஜை செய்யப்பட்டது. அப்போது பஞ்சாயத்துத் தலைவரான சின்னத் தம்பி நயினார், "இந்தக் கட்டடம் கட்டி முடிக்கும் வரை யாரேனும் ஒருவர் ஒரு வேளை மட்டுமே சாப்பிட்டு விரதம் இருக்க வேண்டும்!" என்றார். அருகில் இருந்த தியாகி அண்ணாமலை நயினார் தாம் அந்த விரதம் இருப்பதாகக் கூறி, கட்டடம் கட்டி முடிக்கும் ஓராண்டு வரையிலும் விரதம் இருந்ததோடு, இன்றும் அதைத் தொடர்கிறார். கேட்டால், "பழக்கத்திற்கு வந்து விட்டது; இனி மாற்ற முடியாது!" என்கிறார்.



வேலூர் - 6, எ. அருணகிரி ஜவஹர்.

பேர் சொல்லும் நூலகம்!

எஸ். ராமச்சந்திர ஐயர் என்பவர் எங்கள் சிறுமுகை கிராமத்தின் கர்ணமாக வேலை பார்த்தார். எதிர்பாராதவிதமாக மகன் காலமாக, பிறகு அவரது மனைவியும் காலமாகிவிட்டார். இந்த நிலையில் தமது 15 லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையெல்லாம் எங்கள் கிராமத்தின் கிளை நூலகத்துக்குத் தானமாகக் கொடுத்துவிட்டார். சமீபத்தில் அவர் மறைந்து போனாலும், எங்கள் ஊரின் நூலகம், 'அமரர் எஸ். ராமச்சந்திர ஐயர் நினைவு நூலகம்' என்ற பெயரில் இங்கே இயங்கிக் கொண்டிருப்பதால் அவர் இன்னமும் எங்களுடன் இருப்பதைப் போன்றே உணர்கிறோம்.



சிறுமுகை, ஜி. கதிரேசன்.

பயம் தெளிய 'கொழுமோர்!'

என் தம்பி குழந்தைகளுடன் தவிட்டுப் பாளையத்திலுள்ள உறவினர் ஒருவர் வீட்டுக்



குச் சென்றோம். வீட்டருகே செல்லும் போது, கட்டவிழ்த்துக் கொண்ட ஒரு மாடு எங்கள் மேல் மோதுவதுபோல் ஓட, என் தம்பி குழந்தை ரொம்பவும் பயந்துபோய் அழ ஆரம்பித்துவிட்டான். விஷயத்தை அறிந்த அந்த வீட்டுப் பெண்மணி, ஓர் இரும்புக் கம்பியை எடுத்து எரியும் அடுப்பில் வைத்தார். "ஏற்கெனவே குழந்தை பயந்து போயிருக்கிறான். மேலும் அவனைப் பய முறுத்த வேண்டாம்!" என்று நான் பதைத்துக் கூறினேன். அதற்கு அந்த அம்மாள், "இது பயமுறுத்த அல்ல; பயத்தைப் போக்க. பழுக் கக் காய்ச்சிய கம்பியை மோருக்குள்விட்டு எடுத்து, அந்தக் கொழுமோரைக் குடித்தால் பயம் தெளிந்துவிடும். இது எங்கள் கிராம வழக்கம்!" என்றார் சிரித்துக் கொண்டே.

உடுமலை, எஸ். பொன்னுசாமி.

மாயமாய் மறைந்த சாமியார்!

அழகிய கோயில். எங்கள் வேங்கடம் பேட்டை கிராமத்தில் விஜயநகர மன்னர் களால் கட்டப்பட்டது. கோயில் எதிரில் ஐம்ப தடி உயரமுள்ள ஊஞ்சல் மண்டபம். மண்ட பத்தைத் தாங்கும் கருங்கல் தூண்கள் மண் ணில் புதைக்கப்பட்டு நிறுத்தப்படாமல், அப் படியே வெறுந்தளத்தில் நிற்க வைத்திருப்பது, இதன் கட்டடக் கலையின் சிறப்பு. இப்படிப் பட்ட கோயில் சிதிலமடைந்து கிடப்பதா என்று நினைத்துப் புதுப்பிக்கும் வேலை களைத் துவக்கினோம். எங்களுக்கு ஒரு சாமியார் துணை நின்றார். ஆரம்ப முயற்சி யின்போதே ஒருநாள் அந்தச் சாமியார் திடீரென்று மறைந்து போய்விட்டார் - வசூலான சில ஆயிரங்களுடன்தான்! இப் போது பார்த்தால் அவர் எல்.டி.டி.ஈ. சாமி யார்!

சென்னை - 78, ஏ. எஸ். நாகராஜன்.

கரண்டிக்குச் செம்பு ஈடு!

சாதாரணமாக எங்கள் பகுதிக் கிரா மங்களில் ஒரு வழக்கம்.... வாளி கிணற்றில் விழுந்துவிட்டால் அதை எடுக்கப் பாதாள கரண்டி வேண்டும். அது எல்லோர் வீடுகளி லும் இருக்காது. இருப்பவர்களிடம் போய் வாங்கி வரவேண்டும். அதை வெறுமனே போய்க் கேட்டால் தரமாட்டார்கள். அதற்கு ஈடாக நம் வீட்டில் புழக்கத்திலிருக்கும் லாடச் செம்பை (பெரிய செம்பு)க் கொண்டு போய்க் கொடுத்தால்தான் தருவார்கள். பிறகு பாதாளகரண்டியைத் தந்துவிட்டு செம்பை வாங்கி வந்துவிடலாம். எதற்கு இந்த ஈடு? நம்பிக்கையின்மையா? இல்லை. வேலை முடிந்ததும் பாதாளகரண்டியை உடனடி யாகத் திருப்பித்தர பலர் மறந்துவிடுவார்களே, அதற்குத்தான் இந்த ஏற்பாடு!

கமுதி, பி. சுப்புலட்சுமி.

மச்சானும் கீரையும் ஒண்ணுதானே!

முன்பெல்லாம் கிராமங்களில் அதிக பணப்புழக்கம் இருக்காது. அதனால் கீரை வாங்க வேண்டுமானால், நெல், கம்பு என்று ஏதாவது தானியம் கொடுத்துப் பண்டமாற் றாகத்தான் வாங்குவார்கள். இதை மனத்தில்



கொண்ட என் கொழுந்தியாள் (மனைவியின் தங்கை) என் திருமணம் முடிந்த சமயத்தில் தன் அம்மாவிடம் கேட்டாள் : "எம்மா, நெல் கொடுத்துக் கீரை வாங்குற மாதிரிதானே அக்காவையும் இவ்வளவு பாத்திர பண்டங் களையும் கொடுத்து இந்த மச்சானை வாங்கி இருக்கோம்... அப்புறம் ஏம்மா அவர் நம் மோட இருக்காம அக்காவையும் கூட்டிக் கிட்டு அவங்க வீட்டுக்குப் போறார்?"

கமுதி, எஸ். டி. பாலசுப்பிரமணியன்.

Kalki Shopping Page

For Your One-time Investment of Rs. 23,500/- you get



- Land ownership of **6000 Sq.ft.** (Rs. 4/- (er Sq.ft.) Between well developed Melmaruvathur & Madhuranthagam.
- Retistered Land — obsolutely in your Name.
- Your FARM-LAND comes under direct supervision and Lease for 10 Years with the Company.
- Assured Sunflower-Agro Profit **Rs. 4,400/-** on a Average Per Annum (Every year upto 10 years).
- **Agro-Profit Tax Free.** Works out to 24% P.A. **Returns** assured by way of **Post-dated Cheques** in advance.
- Multi-fold land appreciation. Estimated at **Rs. 90.000/-.**
- At the end of the 10th year thus you are getting **Rs. 1,34,000/-** for an investment of Rs. 23,500/-.
- Lumpsum Payment carries 10% Cash Discount.
- Special Attraction for buyers of 7 units. (1 Acre).

For details, contact :

KAMADHENU HOLIDAY RESORTS PRIVATE LIMITED

Kamadhenu

REGD & ADMN. OFF: 3, Basement, HongKong Complex, #9, Ramanathan Street, T. Nagar, Madras - 600 017. Ph: (044) 4343986

பொங்கல் திருநாள் - தள்ளுபடி விற்பனை

5-1-95 முதல் 15-1-95 முடிய
(8-1-95 & 15-1-95 ஞாயிறு கடை உண்டு

10% to 12.5% ராணி சாரீஸ்

மற்றும் தரமான சுங்குடி 9 கெஜம் 6 கெஜம் புடவைகள் புதிய ஸ்டாக் வந்துள்ளது.

குறிப்பிட்ட புடவை ரகங்களுக்கு 15% to 20% வரை தள்ளுபடி உண்டு.

REMEMBER ! DISCOUNT ON FRESH STOCK

மதுரை டெக்ஸ்டைல்ஸ்

2, சிவப்பிரகாசம் ரோடு, பாண்டி பஜார்,
சென்னை – 17
(பிரில்லியண்ட் டுடோரியல் அருகில்)

Kalki Shopping Page

Kalki Shopping Page

IN A FILM WHAT INTERESTS ME IS THE INTERPRETATION OF LIFE BY AN ARTISTE AND NOT THE COLORFUL BACKGROUND OR THE TECHNIQUES.

- JEAN RENOIR.

(ஃபிரெஞ்சுத் திரைப்பட இயக்குநர்.)

நினைவலைகள்

23

எனது நாடகங்கள் வெற்றி பவனி வந்து கொண்டிருந்த நேரம். தெய்வத்தாய் படத்திற்கு நான் வசனம் எழுத அமர்த்தப்பட்டிருந்தேன். சர்வர் சுந்தரம் ஏ.வி.எம். வளாகத்தில் திரைப்படமாகத் தொடங்கியது. அடுத்த மேடை நாடகமாக 'நீர்க்குமிழி' தயாராகிக் கொண்டிருந்தது. ஆனால் இன்னும் மேடையேறவில்லை. அந்த நேரத்தில் ஏ.கே. வேலன் அவர்கள் என்னைச் சந்திக்க விரும்புவதாக எங்கள் நாடகங்களுக்கு இசையமைக்கும் வி. குமார் என்னிடம் வந்து சொன்னார். அருணாசலம் ஸ்டூடியோவிற்குக் குமார் என்னை அழைத்துச் சென்றார்.

ஏ.கே. வேலன் அவர்கள் ஒரு தமிழ்ப் புலவர்; அவர் எழுதி அவரே இயக்கி வெளிவந்து வெற்றி படைத்த படங்கள் அவரை ஒரு ஸ்டூடியோ சொந்தக்காரர் என்கிற நிலைக்கு உயர்த்தியிருந்தன. அதுதான் அருணாசலம் ஸ்டூடியோஸ். அப்பொழுதெல்லாம் அந்த ஸ்டூடியோ இருந்த இடம் வெறும் காட்டுப் பிரதேசம் போல் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரு கட்டடமோ அல்லது ஒரு மின் விளக்கோ கூட இல்லாத அளவுக்கு ஒரே வனாந்திரமாக இருக்கும்.

'ஸ்டார்ட்', 'கட்' என்று இயக்குநர்கள் படப்பிடிப்பின் போது வழக்கமாக உபயோகப் படுத்தும் ஆங்கில வார்த்தைகளைக் கூட மொழி மாற்றம் செய்து, 'முடுக்கு' 'வெட்டு' என்று காமிராவின் ஓட்டத்திற்குத் தமிழ் வார்த்தைகளையே ஆணைகளாக உபயோகப்படுத்திய தனிப் பெரும் இயக்குநர் திரு. ஏ.கே. வேலன்.

நீர்க்குமிழி மேடை நாடகத்தின் கதையை வேலன் அவர்கள் சொல்லச் சொன்னார்கள். விரிவாக நாடகக் கதையை நான் கூறினேன். அவருக்கு அந்தக் கதை மிகவும் பிடித்துப் போய் விட்டது. அதைத் திரைப்படமாகத் தயாரிக்கும் விருப்பத்தை என்னிடம் தெரிவித்தார்.

"நாடக அரங்கேற்றம் நடக்கட்டும்; நாடகத்தைப் பார்த்து விட்டு முடிவெடுங்கள்" என்று நான் எவ்வளவோ சொன்னேன்.

"நீங்கள் சொல்லிக் கொண்டு வரும் போதே முழு நாடகத்தையும் நான் மனக் கண்ணால் பார்த்து விட்டேன்; அதுவே எனக்குப் போதும்" என்று கூறிய வேலன், படத்தை நான் இயக்கித் தர வேண்டும் என்கிற தமது விருப்பத்தையும் வெளியிட்டார்.


ஆம்! திரைப்பட இயக்குனராக என்னை அறிமுகப்படுத்தியது வேலன்; வேலன் அவர்களிடம் என்னை அறிமுகப்படுத்தியது வி. குமார்; அதே படத்தில் குமாரை இசையமைப்பாளராக அறிமுகப்படுத்தியது நான்! இந்த மூவருடைய Combinationதான் நீர்க்குமிழி.

'நீர்க்குமிழி' நாடகத்தை நானே திரைப்படமாக இயக்க வேண்டுமென்று வேலன் என்னிடம் கேட்டுக் கொண்ட போது,

* ஏ. கே. வேலன் : இயக்குநராக அறிமுகப்படுத்தியவர்



* ஏ.வி.எம். : முதல் பாராட்டு



எனக்கு அது மகிழ்ச்சிகரமான அதிர்ச்சியைத் தந்தது. எனினும் திரை நுணுக்கங்கள், திரைப்பட இயக்கம் இவை பற்றிய எந்த விதமான தொழில் துறை நுட்பங்களும் எனக்குப் பழக்கமில்லாத காரணத்தால், "திரைப்படத்தை இயக்குவதற்கு எனக்குப் பயமாக இருக்கிறது; திரைக்கதை, வசனம் மட்டும் நான் எழுதிக் கொடுத்து விடுகிறேன்; நீங்களே டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று நான் சொன்னேன்.



• நீர்க்குமிழி திரைப்படத்தில் ஒரு காட்சி.

வேலன் சொன்னார் :

"திரைப்பட இயக்கம் என்பது ஒன்றும் கம்பசூத்திரமில்லை; நான் எங்கிருந்து கற்றுக் கொண்டேன்? ஒரு தமிழ்ப் புலவன் என்பதைத் தவிர வேறு என்ன தகுதி எனக்கிருந்தது? உங்களைப் பொறுத்தவரை நாடகங்களை வெற்றிகரமாகவும், மக்கள் வெகுவாக ரசிக்கும்படியாகவும் இயக்குகின்றீர்களே! அந்த அனுபவமே திரைப்பட இயக்கத்தில் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். சொல்லப்படுகின்ற கருத்தும், நடிக, நடிகையர் மூலமாக நீங்கள் வெளிக்கொணரும் மனித உணர்வுகளும் மட்டுமே முக்கியமானவை. மற்ற நுணுக்கங்கள் எல்லாம் துணையாகப் பயன்படுபவையே தவிர, உணர்வுகளைக் காட்டிலும் இவைகளுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

"திரை நுணுக்கங்களை மட்டுமே பூரணமாகத் தெரிந்து வைத்துக் கொண்டு, மனித உணர்வுகளைச் சரியாக வெளிப்படுத்தத் தெரியாமல் கோட்டை விடுபவர்கள் நிச்சயமாக நல்ல இயக்குநர்களாக வர முடியாது. ஆகவே தைரியமாக டைரக்ஷனுக்கு ஒப்புக் கொள்ளுங்கள்."

"ஒரு வாரம் கழித்து என் முடிவைச் சொல்கிறேன்" என்று கூறி வந்து விட்டேன்.

எனது நாடக உலக நண்பர்களைக் கலந்து ஆலோசித்தேன். "உடனே சரியென்று ஒப்புக் கொண்டு விட்டு வர வேண்டியது தானே; இதற்குப் போய் யாராவது யோசனை செய்வார்களா?" என்று சிலர் உரிமையுடன் என்னைக் கோபித்துக் கொண்டார்கள்.

"யாராவது நல்ல இயக்குநரிடம் கொஞ்ச காலமாவது உதவியாளராக இருந்து விட்டு பிறகு டைரக்ஷன் ஒப்புக் கொள்ளலாம்" என்கிற எனது கருத்தைத் தெரிவித்தேன்.

ராகினி ரெக்ரியேஷன்ஸ் கோவிந்தராஜன் தைரியம் ஊட்டினான். அவன் எப்பொழுதும் சற்று தமாஷாகப் பேசுவான்.

"If you can kiss the mistress do not kiss the maid! தைரியமாக ஒப்புக் கொள்" என்று புத்திமதி சொன்னான்.

நான் படத்தை இயக்கித் தர ஒப்புக் கொண்டேன்.

அன்று ஏ.கே. வேலன் அவர்கள் சொன்ன அதே கருத்துக்களை ஒட்டித்தான் Jean Renoir என்கிற பிரபல ஃபிரெஞ்சுத் திரைப்பட இயக்குநர் எப்பொழுதோ சொல்லியிருக்கிறார். அவர் கூறுகிறார் :

"எல்லாக் கலை நுணுக்கங்களும் தேவைகளும் என்னிடம் தன்னம்பிக்கை இல்லாத ஒரு நிலையை உண்டுபண்ணி என்னைச் சோர்வடையச் செய்கின்றன. சிறந்த காமிரா நுணுக்கம் பெரிய ஸ்கிரீன் வசதிகள், ஸ்டீரியோ மற்றும் HI-FI ஒலி இவையனைத்தும் இயற்கையை அப்பட்டமாகக் காப்பியடிக்கின்ற, சராசரி திறமையர்களின் தன்னம்பிக்கையின்மையைத்தான் பறைசாற்றுகின்றன. இப்படி காப்பியடிக்கின்ற பணி என்னை சலிப்படையச் செய்கிறது.

கே. பாலசந்தர்

"ஒரு திரைப்படத்தில் என்னை மிகவும் ஆகர்ஷிக்கின்ற சக்தி, வாழ்க்கையின் உட்பொருளை கலைநயத்தோடு கதாபாத்திரங்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்ற உத்தி மட்டுமே தவிர, புறச்சூழ்நிலைகளின் அற்புதங்களோ அல்லது வண்ணமயமான பின்னணிக் காட்சிகளோ, சிறந்த தொழில்துறை நுட்பங்களோ அல்ல."

நீர்க்குமிழி நாடகம் அரங்கேறியது. ஒருவேளை நாடகம் வெற்றி பெறாமல் போய் விட்டால் அது திரைப்படமாகின்ற வாய்ப்பு கைநழுவிப் போய் விடுமோ என்கிற பயம் எனக்கு உள்ளூர இருந்தது.

நல்லவேளை! நாடகம் வெற்றி பெற்றது.

திரைப்படத் தொடக்கமே ஒரு பாடல் ரெக்கார்டிங். வி. குமார் இசையில் உவமைக் கவிஞர் சுரதா எழுதியிருந்த "ஆடியடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா" என்கிற பல்லவியுடன் தொடங்கும் பாடல்.

அருணாசலம் ஸ்டூடியோவில் நாடக நண்பர்கள் எல்லோரும் ஆஜர். பாடல் பதிவு மட்டும் 'டிலே' ஆகிக் கொண்டிருந்தது. காரணம் தெரியவில்லை. சிலர் "கசமுச"வென்று பேசிக் கொண்டார்கள். முன்பணம் கொடுப்பதாகச் சொல்லியிருந்த financier காலை வாரி விட்டு விட்டார். பாடல் பதிவு கான்சல் ஆயிற்று!

நானும் குமாரும் பெரும் அதிர்ச்சிக்குள்ளானோம். நாடக நண்பர்களுக்கு இன்னும் பெருத்த ஏமாற்றம். பாடல் பதிவு தடைபட்டதற்குக் காரணம் "ஆடி அடங்கும் வாழ்க்கையடா" என்று தொடங்குகிற பல்லவிதான் என்று சிலர் காரணம் கற்பித்தார்கள். இன்னும் சிலர் 'நீர்க்குமிழி' என்கிற தலைப்பையே காரணமாகப் பேசினார்கள்.

பின்னால் படம் மீண்டும் ஆரம்பித்த போது அது நிற்கவேயில்லை; தொடர்ந்து நாலு கால் பாய்ச்சல்தான்.

காலை 7 மணியிலிருந்து இரவு 2 மணி வரை படப்பிடிப்பு நடக்கும். முதல் படம்; எக்கச்சக்க டென்ஷன்; நாடக ஒத்திகையின்போதே அடிக்கடி நகத்தைக் கடிப்பவன் நான். படப்பிடிப்பின் போது அது இன்னமும் அதிகமாயிற்று.

ஒருநாள் : படப்பிடிப்பின் ஷாட் இடைவெளியில் I was answering call of nature. பக்கத்தில் இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள் :

"மனசுக்குள்ளே பெரிய ஸ்ரீதர்னு நினைப்பு; நகத்தைக் கடிச்சுக்கிட்டே இருக்கான்ப்பா அந்த ஆளு."

'அந்த ஆளு' என்பது நான்தான் என்று பொட்டில் அறைந்தாற்போல் புரிந்தது எனக்கு.

பிறகு நீர்க்குமிழி படம் முடியும் வரை நான் நகத்தைக் கடித்ததேயில்லை!

படம் எனக்குத் திருப்தியாக அமைந்திருந்தது. வேலன் மகிழ்ச்சியுடன் இருந்தார். இந்தப் படத்தின் commercial வெற்றிதான் என் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறது என்பதால் I was keeping my fingers crossed.

அந்த நேரம் பார்த்து என்னிடம் உதவியாளனாக வேலை கேட்டு ஒரு இளைஞன் வந்தான். ஒரு குறிப்பிட்ட இயக்குநரின் பெயரைச் சொல்லி, "அவரிடம் வேலைக்கிருந்தேன்; ஒரு வெள்ளிக்கிழமை என்னை வேலையில் சேர்த்துக் கொண்டார்; அடுத்த வெள்ளிக் கிழமை என்னை வீட்டுக்கனுப்பி விட்டார். ஒரே ஒரு வாரம்தான் வேலை செய்தேன். ஆனால் அதற்கடுத்த வெள்ளிக் கிழமை அந்த டைரக்டருக்கே வேலை போய் விட்டது! அன்றைக்கு ரிலீஸ் ஆன அவருடைய முதல் படம் 'டப்பா' என்று சொன்னான்.

என் வயிற்றில் புளியைக் கரைத்தது. வருகின்ற வெள்ளிக் கிழமைதானே என் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப் போகிறது!

படம் வெளிவருவதற்கு முதல் நாள்; எனக்கு ஒரு பாராட்டுக் கடிதம் வந்தது. அதுவே சினிமாவில் எனக்குக் கிடைத்த முதல் ரசிகர் கடிதம்.

எனது 'நீர்க்குமிழி' படத்தை பிராசஸிங் ஆகும் அவரது லேபரட்டரியிலேயே பார்த்து விட்டு ஏ.வி. மெய்யப்ப செட்டியார் அவர்கள் பாராட்டி எழுதியிருந்தார்கள்.

நீர்க்குமிழி என்னை வீட்டிற்கு அனுப்பி வைக்கவில்லை; என்னை நிலைக்க வைத்தது.

நான் வேலன் அவர்களுக்காக இன்னொரு படம் இயக்கித் தர வேண்டுமென்கிற அவரது விருப்பமும், எனது நன்றிக் கடனை அவருக்குச் செலுத்துகின்ற வகையில் இன்னொரு படத்தை எப்படியாவது செய்து தர வேண்டுமென்கிற எனது விருப்பமும் ஏனோ நிறைவேறாமலே போய் விட்டது.

(தொடரும்)

படங்கள் உதவி : **பிலிம் நியூஸ் ஆனந்தன்**



"எதுக்குத்தான் ட்ரீட் கேட்கறதுன்னு விவஸ்தையே இல்லாம போச்சு..."


"என்ன ஆச்சு?"

"என் ஒய்ஃப் ஒரு மாசம் ஊருக்குப் போறான்னு சொன்னதும் எங்க ஆபீஸ்ல ட்ரீட் கேட்கறாங்க!"

- ராதா வாசுதேவன்

அகிலத்தையும் மனிதனையும் படைத்தான் ஆண்டவன்.

அழகையும் ஆரோக்யத்தையும் அளிப்பது ராம் தீர்த்®



இயற்கையின் அற்புதம்.
உங்கள் உடலுக்கும்
கேசத்திற்கும் ஒரு வரப்பிரசாதம்
ராம்தீர்த் ப்ரஹ்மி ஆயில்.

22 மூலிகைகளும் சுத்தமான தேங்காய்
எண்ணெயும் கொண்டு ஆயுர்வேத
முறையில் தயாரிக்கப்பட்ட மருந்து.


Ramtirth®
BRAHMI OIL

மூட்டு வலி கண் எரிச்சல் போன்ற உபாதைகளிலிருந்து விடுவிக்கிறது. பொடுகை ஒழித்து முடி கொட்டுதலை தடுக்கிறது. உடல் வெப்பத்தைத் தணித்து, கண்களுக்கும் மூளைக்கும் குளுமை தந்து நிம்மதியான உறக்கத்தை அளிக்கிறது ராம்தீர்த் ப்ரஹ்மி ஆயில். எல்லோருக்கும், எல்லா காலங்களிலும் ...

Manufactured at SHRI RAMTIRTH INTERNATIONAL, Gopalapuram Chungam,
Mannur (PO), Pollachi Tk-642 005 Ph: 04259-87-339
Branch Office: 12/568 Koppam Palakkad-678 001 Ph: 0491-25114



ஓம்
கல்கி



1995
ஜனவரி 8
பவ
மார்கழி 24
மலர் : 53
இதழ் : 23

அர்ஜுன்சிங் ராஜினாமா!

தமது ராஜினாமா மூலம் குறைந்தபட்சம் காங்கிரஸுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்ய அர்ஜுன் சிங் எண்ணியிருந்தால், அதில் கூட அவர் வெற்றி அடையவில்லை என்பதுதான் பரிதாப உண்மை. இந்த காங்கிரஸ் இது போன்ற எத்தனையோ "ஷாக் டிரீட்மெண்ட்" நடந்தும் குணமாகாத கேஸ்! அர்ஜுன்சிங் ஆதரவாளர்கள் ஒருபுறம், ராவ் ஆதரவாளர் மறுபுறம் நின்று "தியாகி – துரோகி" என்ற சொற்களைப் பரிமாறிக் கொண்டு, குடுமிப்பிடி யுத்தம் நடத்துவதோடு சரி.

இந்த ராஜினாமா மூலம் வேறு எதைத்தான் சாதித்தார் அர்ஜுன் சிங்? தமக்குப் பதவி ஆசை இல்லை என்று நிரூபித்தாரா? கிடையாது. இதை விடவும் பெரிய பதவிக்கு ஆசைப்படுவதாகவே நிரூபித்தார். ஊழலை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் தம்மைப் புனிதர் என்று நிரூபித்துக் கொண்டாரா? இல்லை, ராஜினாமாவையொட்டிய பத்திரிகை நிருபர்கள் சந்திப்புக்கு வரும்போதே, "சுர்ஹாட் லாட்டரி ஊழல் நிரூபிக்கப்படவில்லை" என்று சமாதானம் கூறிக் கொண்டே கூட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய நிர்பந்தத்தில்தான் இருந்தார்.

போகட்டும், என்ன காரணங்கள் சொல்லி ராஜினாமா செய்தார்? "புதிய பொருளாதாரக் கொள்கையால் ஏழைகளின் நிலையில் அபிவிருத்தியில்லை; திறந்த கதவுப் பொருளாதாரம் லஞ்ச ஊழலுக்கும் கதவுகளைத் திறந்து விட்டிருக்கிறது" என்கிறார். அப்படியானால் காங்கிரஸின் பழைய பொருளாதாரக் கொள்கை ஏழைகளைக் கடைத்தேற்றி சொர்க்கபுரியில் வைத்திருந்ததா? 42 ஆண்டுகளுக்கு மேலாக "ஏழ்மையை ஒழிப்போம்" என்று சொன்னார்களே தவிர, செய்ய முடிந்ததா? அவ்வாறிருக்க புதிய பொருளாதாரக் கொள்கைக்கு மட்டும் போதிய அவகாசம் அளிக்காமல், அவசரத் தீர்ப்பு வழங்க முற்படுவது ஏன்? லஞ்ச ஊழலுக்கு வித்திட்டு, உரமிட்டு வளர்த்து அதை இந்தியாவின் ஒரு "பண்பாடாகவே" மாற்றிவிட்ட பெருமை, பழைய கட்டுப்பாட்டுப் பொருளாதாரக் கொள்கைக்கே உண்டு. அந்தப் பண்பாடுதான் இன்றும் தொடர்கிறது. இது மாறத்தான் வேண்டும். மாறுவதற்கு புதிய சுதந்திரப் பொருளாதாரக் கொள்கை அனுசரணையாக இருக்குமே தவிர முட்டுக் கட்டை போடாது.

கொள்கையிலும் அதை அமலாக்கும் விதத்திலும் சில மாற்றங்கள் தேவைப்படலாம். அவற்றை கட்சிக் கூட்டங்களில் நடைமுறைப் படுத்தக் கூடிய ஆக்க பூர்வ யோசனையாக வெளியிட்டால், நிதி அமைச்சரோ பிரதமரோ "ஏற்க மாட்டோம்" என்று கூறி விட முடியாது. ஆனால் திட்ட வட்ட யோசனையாய் இராமல் ஒட்டு மொத்த குறை கூறலால் ஒரு பயனும் இல்லை.

"தேர்தல் தோல்விக்கு பிரதமர் பொறுப்பு ஏற்க வேண்டும்" என்கிறார் அர்ஜுனர். பொறுப்பு ஏற்று பிரதமர் ராஜினாமா செய்து விடுவதால் நாட்டின் பிரச்னைகள் தீர்ந்து விடுமா? அல்லது அடுத்து வரும் தேர்தலில் காங்கிரஸின் மதிப்பு உயர்ந்து விடுமா? இரண்டுமில்லை. இன்றைய சூழலில் இத்தகைய நடவடிக்கை தேசப் பொருளாதாரத்தில் குழப்பத்தையும் காங்கிரஸுக்கு மேலும் பின்னடைவையும்தான் உண்டாக்கும்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு மன்னிப்புக் கோர வேண்டியவர்களைத் தட்டிக் கேட்காமல், "காங்கிரஸ் மன்னிப்புக் கோரவேண்டும்" என்று அர்ஜுன் சிங் வாதாடுவது ஹிந்துக்கள், முஸ்லிம்கள் இருசாராரிடமுமே காங்கிரஸ் மேலும் மதிப்பிழப்பதில்தான் முடியும்.

"ராஜீவ் காந்தி கொலை பற்றிய நீதி விசாரணைக் கமிஷன்கள் அமைத்தும் உண்மைகள் வெளிவரவில்லை" என்கிறார். அதே சமயம், பங்கு பத்திர ஊழலுக்கும் சர்க்கரை ஊழலுக்கும் மேலும் இரு புதிய விசாரணைக் கமிஷன்கள் கோருகிறார்! அர்ஜுனர் ரொம்பக் குழம்பிப் போயிருக்கிறார். அவருக்குத் தெளிவு பிறக்க ஒரு கிருஷ்ணபரமாத்மாவா வரப்போகிறார்? 'மனித வள மேம்பாட்டு அமைச்சர் என்ற முறையில் இங்கு மனித வளம் மேம்பாடு அடையுமாறு உருப்படியான எந்த ஒரு திட்டத்தை உருவாக்கி அமுல்படுத்தியிருக்கிறோம்' என்று அர்ஜுன்சிங் தன்னைத்தானே கேட்டுக் கொள்ளட்டும். 'ஆந்திராவிலும் கர்நாடகாவிலும் காங்கிரஸின் வெற்றிக்கும் பிரதமருக்குப் பக்கபலமாகவும் எந்த அளவுக்குப் பாடுபட்டோம்' என்று ஆத்ம பரிசோதனையில் ஈடுபடட்டும். பாரதி வாக்கு புரியும்:

செப்பித் திரிவாரடி – கிளியே
செய்வ தறியாரடி!

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.



கவலைப்படாதீங்க.. அப்படியே காரை தூக்கி லாரியில வச்சிக்கிட்டு ஓட்டிட்டு போயிடலாம்...
ஆளுநர், சு.சுவாமியுடன் மோதல்
தேசிய முன்னணி
இந்திய தூதரகம்
புகை வாசனை பிடிச்சுட்டேன்: அங்கேயிருந்து தான் வருது...
பெனசிர் புட்டோ
கராச்சி கலவரங்கள்
பிரதமர்
அர்ஜுன் சிங்

துகருடன்

பொங்கலோ பொங்கல்

என்பீர்

துகரில் பொங்கலுக்கு முன்பு ஏதேனும் ஒரு டெபாசிட் திட்டத்தில் உங்கள் பணத்தை டெபாசிட் செய்திடுங்கள். உங்கள் மன நிம்மதிக்கான ஒரு நல்ல அறுவடையை நீங்கள் நிச்சயம் பெறுவீர்கள் மற்றும் பொங்குபானையிலிருந்து வழிந்தோடும் இன்பத்தை அடைவீர்கள். அதனால் துகருடன் பொங்கலோ பொங்கல் என்று கூறிக் கொண்டாடுங்கள்.

வழங்குகிறோம்

DUGAR



பொங்கல்

-ஓ-

பொங்கல்

டெபாஸிட்

DUGAR
FINANCE INDIA LTD

HIRE PURCHASE ➲ LEASING ➲ MERCHANT BANKING ➲ PROPERTY DEVELOPMENT ➲ PUBLIC DEPOSITS ➲ FOREIGN EXCHANGE

REGD. OFFICE: DUGAR TOWERS, 123 MARSHALLS ROAD, MADRAS 600 008 ☎ 8283535 (10 LINES) FAX: 8281122

ADYAR	☎ 4917705	JAYANAGAR	☎	ERNAKULAM	☎ 369515	SECUNDERABAD	☎ 846006
MOUNTROAD	☎ 8521888	MALLESWARAM	☎ 365276	GUDUR	☎ 21830	TIRUPATI	☎ 21977
T.NAGAR	☎ 4341541	BOMBAY	☎ 2846233	MADURAI	☎ 36106	TRICHY	
MYLAPORE	☎ 4942256	CALICUT	☎ 63344	NELLORE	☎ 27576	VISHAKAPATNAM	☎ 546581
BANGALORE	☎ 5565599	COIMBATORE	☎ 231867	SALEM	☎ 66760	VIJAYAWADA	☎ 476512

Particulars required to be specified as per Non-Banking Financial Companies and Miscellaneous Non-Banking Companies (Advertisement) Rules, 1977.

(a) Name of the Company: DUGAR FINANCE (INDIA) LIMITED (b) Date of incorporation: 20th May 1981 (c) Business: Hire Purchase, Leasing, Property Development, Merchant Banking, Foreign Exchange & Portfolio Management, Share Ports, OTC(E) Dealership. (d) Branches: Mount Road, Mylapore, T.Nagar, Adyar (Madras), Bangalore, Malleswaram, Calicut, Coimbatore, Ernakulam, Gudur, Madurai, Nellore, Salem, Secunderabad, Tirupati, Trichy, Visakhapatnam, Vijayawada (e) Management: The Company is managed by its Managing Director under the supervision of the Board (Subsidiaries) 1) Dugar Funds Management (INDIA) Limited: Funds Management Services. 2) Dugar Financial Services Ltd: Stock Broking, Capital Operation, Investment & Other financial services (f) Names, Addresses, and occupation of the Directors: DR. C. ANNA RAO (Chairman) Former Chairman, Board of Trustees, TTD. Chelsam Anna Rao Road, Sriperam Colony, Tirupati -517 507 • Shri. B. LALCHAND NARLECHA (Vice-Chairman) Merchant & Banker 20, Mannarswami Koil Street, Royapuram, Madras -600 013 • Shri. C.R. RAO Company Director White House, Gudur -524 101 (A.P.) • Shri. V. RAMACHANDRAN Senior Advocate 24, Nungambakkam High Road, Madras -600 034 • Shri. R. RAMAKRISHNAN Industrialist & Former Member Rajya Sabha "Yasi", 14, Boothamma Road, Madras -600 018 • Shri. M.K. PANDURANGA SETTY Industrialist & Company Director "Prasanam", 27, Bull Temple Road, Bangalore -560 004 • Shri. K.S.T. PANI Chief General Manager (Retd) SBI & company Director "Susanam", 45, Mandapam Road, Kilpauk, Madras -600 010 • Shri. T. PADAM DUGAR Company Director 21, Commander-in-chief Road, Madras - 600 105 • Shri T. Ramesh Dugar Company Director 21, Commander-in-chief Road, Madras - 600 105 • Shri. N. TARACHAND DUGAR (Managing Director) Industrialist & Banker 21, Commander-in-chief Road, Madras - 600 105

(g) & (h): Profits of the Company, before and after making provision for Tax and Dividends, declared by the Company for the three financial years immediately preceding the date of advertisement.

Year ended	Profit before provision for tax (Rs. in Lakhs)	Profit after provision tax (Rs. in Lakhs)	Dividend declared
30-06-1992	81.56	79.26	25%
30-06-1993	92.95	91.90	25%
30-06-1994	130.42	130.42	25%

(i) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets

Liabilities	30-06-94 (Rs in Lakhs)	30-06-93 (Rs in Lakhs)	Assets	30-06-94 (Rs in Lakhs)	30-06-93 (Rs in Lakhs)
Share Capital	441.05	300.00	Fixed Assets	1225.30	580.77
Reserves & Surplus	283.30	111.59	Investment	134.74	84.69
Secured Loans	862.97	625.77	Current Assets	2786.66	1656.32
Unsecured Loans	259.36	1303.37	Loans & Advances	328.56	312.74
Current Liabilities & Provisions	736.99	442.60	Miscellaneous Expenditure	138.13	59.61

(j) Contingent liabilities	30-06-94 (in Lakhs)	30-06-93 (in Lakhs)
(a) Estimated amount of contracts remaining to be executed on capital account and not provided for	3.00	1.00
(b) Counter guarantees to Bankers	11.00	5.00
The Company can raise by way of deposits under the directions	5682.20	3517.80
Aggregate of deposits actually held	2758.36	1303.37
(c) Regarding recoveries against debtors securitised in respect of Property Development scheme.	300.00	
(d) In respect of underwriting of capital issues	284.20	
(e) Liability in respect of Income Tax	13.87	13.87

(k) The Company has no overdue deposits other than unclaimed deposits (l) The Company hereby declares (i) that the company has complied with the applicable provisions of the directions of Reserve Bank of India (ii) that the compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the RBI and (iii) that the deposits accepted by the Company will be unsecured and rank pari passu with other unsecured liabilities. This advertisement is issued on the authority and in the name of the Board of Directors of the Company. The text was approved by the Board of Directors on 23rd December 1993 and a copy duly signed by a majority of the Directors has been filed with the Regional Office of Reserve Bank of India, Department of Financial Companies, Bangalore.

Madras: 7th November 1994

BY ORDER OF THE BOARD FOR DUGAR FINANCE (INDIA) LIMITED N.TARACHAND DUGAR MANAGING DIRECTOR

TAAL [illegible] - TM - KA - 70



காகிதப்



விதை :

நடராஜன். முக்கிய உயர் பதவிகள் வகித்து ஓய்வு பெற்ற பிறகு, புதிய சுறுசுறுப்புடன் தொழில் தொடங்கத் துடித்தார். காஞ்சி முனிவரின் ஆசி பெறச் சென்று தமது திட்டத்தை வெளிப்படுத்தினார். ''தொழில்னா இரும்பும், இஞ்சினியரிங்கும்தானா...? பழம், காய், புஷ்பம் (பூ) இப்படி ஏதாவது செய்யேன், நடராஜா!'' என்று பெரியவர் சொல்லியனுப்பி விட்டார்.


அதே நாளில்....

சென்னைக்கு நாற்பது கிலோ மீட்டர் தொலைவில், வீராபுரம் கிராமம். வனத் துறையின் வறண்ட நிலப்பரப்பின் மத்தியில் கொஞ்சமாகப் பசுமை போர்த்தி நின்றது. நெல், நிலக்கடலை என்று அளவாகப் பயிரிட்ட நேரம் போக, ஏரிக்கரைக் காற்றில், சுகமான சோம்பலில் கருண்டது. தங்கள் வளமைக்கும் புகழுக்கும் அன்று காஞ்சியில் ஒரு விதை ஊன்றப்பட்டதென்பது வீராபுரத்தவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை! -

முளை :

அமெரிக்காவில் ஒரு பூச் சந்தைக்குப் போனார் நடராஜன். அதிகாலை நாலு மணி. பூக்கடைகள் மட்டுமே கொண்ட அந்தத் தெருவில் பொள்ளாச்சி சந்தையைப் போல் கூட்டம்! எல்லாம் ஒருசில மணி நேரத்துக்குத்தான். ஒன்பது மணிக்குள் அத்தனை கடைகளிலிருந்த அத்தனை வகைப் பூக்களும் விற்றுப் போயிருந்தன. விலை விசாரித்தார் நடராஜன். "ஒரு ரோஜாப் பூ ஒரு டாலர்!"

"அடேயப்பா!"



• வீராபுரம் : உலக வரைபடத்தில் இடம் கொடுங்கள்!

ஆனால் ரோஜா சீக்கிரம் வாடி விடும். இந்தியாவில் வளர்த்து அமெரிக்காவுக்கு அனுப்பும் வரை அன்றலர்ந்த மாதிரி இருக்கக் கூடியது...?

"ஆர்கிட்ஸ்" என்றார்கள்.

"அதை வளர்ப்பது மிகவும் கஷ்டமாச்சே. இந்திய கிளைமேட் ஒத்து வருமா?"

"தாய்லாந்து கிளைமேட்டில் ஆர்கிட் அட்டகாசமாக வளரும் போது, கிட்டத்தட்ட அதே கிளைமேட் இருக்கும் உங்க நாட்டிலே வளராதா...?"

முடிவு செய்து விட்டார் நடராஜன். காஞ்சியில் போட்ட விதை கடல் கடந்து முளை விட்டிருந்தது.

செடி :

பாங்காங்கிலிருந்த நண்பர் உதவியுடன் ஆர்கிட் வளர்க்கும் பயிர் நுட்பங்கள் அறிந்து கொண்டார் நடராஜன். வல்லுனர்கள் இருவருடன் இந்தியா திரும்பினார். ஆர்கிட் - பரிணாம வளர்ச்சியில் உச்சத்தை அடைந்த பூ. எனவே

பூவும் மணக்கும்!

பூப் பண்ணை நிறுவும் வரை வல்லுனர்கள் உடனிருந்து உதவ வேண்டும். உதவினார்கள். முதலில் தகுந்த நிலம் தேடும் படலம். தென்னிந்தியா முழுதும் சல்லடை போட்டுத் தேடியும் உகந்த இடம் கிடைக்காமல் சோர்வுடன் சென்னையை நெருங்குகையில் நிபுணர்கள் கண்ணில் பட்டது செங்கல்பட்டு ஏரி. "இங்கே பக்கத்தில் நிலம் கிடைக்குமா..?"

''முயன்று பார்க்கலாம்'' என்றார் நடராஜன்.

செங்கல்பட்டு ஏரியின் ஒரு விரல் நீண்டு வீராபுரத்தை வருடியது.

புழுதி பறக்க வந்து நின்ற கார்களை வீராபுரத்தினர் அதிசயத்துடன் பார்த்தார்கள். பூப் பண்ணைக்குத் தங்கள் ஊரில் நிலம் விற்கப்பட்ட பிறகு மண் சாலை போடப்பட்டிருந்தது. இதுபோன்ற அனுகூலங்களை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

"இன்னும் என்னென்ன அதிசயங்கள் நடக்குமோ? பூச்செடி வெளிநாட்டிலிருந்து வரப் போகுதாம். அதை முதல்ல கொஞ்ச நாள் தனியறையிலே வைச்சிருந்து, நோவு நொடி இல்லாம இருந்தாத்தான் பண்ணைக்குள்ள சேர்ப்பாங்களாம். அதோ ஒதுக்குப்புறமா தெரியுது பாருங்க... அதான் தனியறை..." எட்ட நின்று சுட்டிக்காட்டிப் பேசிக் கொண்டார்கள் வீராபுரம் வாசிகள்.

உரம் :

"ஆர்கிட் தாவரங்களுக்கு மிதமான வெப்பமும் ஜிலுஜிலுவென்ற ஈரப்பதமும் வேண்டும். அது இங்கே அற்புதமாக அமைந்திருக்கு" என்றார்கள் தாய்லாந்து நிபுணர்கள். ''அது மட்டுமில்லை; எங்களூரில் இல்லாத தூய்மையான காற்று மண்டலம், தூய்மையான தண்ணீர் இங்கே கிடைக்கிறது'' என்றார்கள். உற்சாகத்துடன் பண்ணை நிறுவ உதவினார்கள். உயரமான கழிகள் நட்டு, அவற்றின் மேல் நைலான் வலை பரப்பி காற்றோட்டமான நிழல் பரப்புகளை உருவாக்கினார்கள். அங்கே வரிசை வரிசையாய்த் திண்ணைகள் எழுப்பப்பட்டன.

உடனிருந்து உழைத்தார்கள் நடராஜனும்

• 'கொசுவலை' போன்ற கூரைக்குக் கீழ்



• நடராஜன் : "உதவியாளர்களின் ஈடுபாடே வெற்றிக்குக் காரணம்"



• தாய்லாந்து நிபுணர்கள்



அவர் குடும்பத்தினரும். திட்டம் தீட்டி நிதி பெற்று, ICICI நிறுவனத்தின் (Industrial Credit and Investment Corporation of India) பங்கு மூலதனமும் பெற்றார்கள்.

இறக்குமதி செய்த ஆர்கிட் செடிகளை தனியறையிலிருந்து வெளியே எடுத்தாயிற்று. இனி அவற்றுக்கென ஸ்பெஷலாக வடிவமைத்த தொட்டிகளில 'நட' வேண்டும். பராமரிக்க வேண்டும். வீராபுரவாசிகளுக்கு வேலை தரலாம்.

வீராபுரத்துப் பெண்கள் :

முந்தானையால் வாய் மூடிச் சிரித்தார்கள். ஆண்கள் வெளிப்படையாகவே கேலி செய்தார்கள். "நாலு பக்கமும் துளை போட்ட கையகலத் தொட்டியிலே கருங்கல் ஜல்லி போடறதாம்! அதுலே தேங்கா நாரைப் புதைச்சு நாத்து நடறதாம்! ஐயா, மண்ணில்லாம செடி வளருமா? ஊத்தற தண்ணி பூரா நிலத்துல போகுதே இந்தச் செடி பிழைக்குமா?" - அவநம்பிக்கையுடன் தான் வேலை செய்தார்கள்.

அரும்பு :

Natural Synergies Limited - இதுதான் நடராஜனுடைய பூப்பண்ணை முயற்சியின் பெயர். நூறு சதவிகித ஏற்றுமதி நிறுவனம் என்ற சான்றிதழ் வாங்கி விட்டது. சென்னை சாந்தோமிலிருந்த தமது வீட்டிலிருந்து தினமும் அதிகாலை புறப்பட்டு விடுவார் நடராஜன். ஆர்கிட் குழந்தைகளைப் பார்க்காமல் ஒருவேளை சாப்பாடு கூட இறங்காது. ஒவ்வொரு நாளின் வளர்ச்சியையும் உன்னிப்பாய் கவனித்து, செடிகள் மொட்டுக் கட்ட ஆரம்பித்ததும் பூரித்துப் போனார்.

வீராபுரவாசிகளுக்கும் இந்த உற்சாகம் தொற்றிக் கொண்டது. 'ஐயரே சொந்தப் புள்ளைங்களைப் போல செடிகளை கவனிச்சுக்க ஓடி வராரு. நாமும் வந்துடணும். ஒழுங்காய் வேலை செய்துடணும்...'

பெண்கள் ஆறு மணிக்கெல்லாம் தண்ணீர் ஊற்ற வந்தார்கள். காய்ந்த சருகுகளை கவனமாக அகற்றினார்கள். மீன் நாற்றத்தைச் சகித்துக் கொண்டு உரமிட்டார்கள்.

மலர் :

வெற்றி! வெற்றி! ஆர்கிட்கள் பூக்க ஆரம்பித்து விட்டன. பனி போன்ற வெள்ளையில், பெயின்ட் அடித்து வைத்தது போல் அடர்ந்த மெஜந்தா கலரில்... மிருதுவான இதழ்கள். ஆனால் செடியிலிருந்து அகற்றிய பிறகும் ஃப்ளவர் வாஸில் வைத்தால் முப்பது நாட்களுக்கு வாடாது! நடராஜன் அயல்நாடுகளுக்கு சாம்பிள் பூக்கள் அனுப்பினார். "எங்கள் நாட்டுப் பூக்களை விட வீராபுரம் பூக்கள் தரமானவை" என்று தாய்லாந்துக்காரர்களே ஒப்புக் கொண்டார்கள்!



வீராபுரத்தாரின் முகங்களும் மலர்ந்தன! கடந்த சில மாதங்களாக ஊர்ப் பெண்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கிறது. மாதம் நானூற்றைம்பது பார்க்க முடிகிறது. பூ கம்பெனியில் காலை வயிறு நிறையச் சாப்பாடு போட்டு விடுகிறார்கள். 'சேற்றில் இறங்க வேண்டாம்; இருட்டில் நடக்க வேண்டாம்; இது கௌரவமான வேலைங்க..' பெண்கள் திருப்தியடைந்திருக்கிறார்கள். 'எங்க ஊருக்கு இப்படியொரு வாழ்வு வரும்னு நாங்க நினைக்கலைங்க' - ஆண்கள் பெருமைப்படுகிறார்கள். அவர்களுக்கும் அவ்வப்போது வேலை கிடைக்கிறது.

அது மட்டுமல்ல, சப்பை மூக்கும் பரட்டைத் தலையுமாய் வந்த தாய்லாந்து நிபுணர்களையும், காலேஜ் படிப்பு படித்து விட்டு வந்த மெட்ராஸ் பையன்களையும் கண்டு இப்போது வீராபுரத்தவர்கள் பயப்படுவதில்லை; கூச்சப்படுவதில்லை. அவர்களது மேற்பார்வையில் பண்ணை விஸ்தரிப்புக்காக நிலத்தைச் சீர்செய்கிறார்கள் ஆண்கள். சிரித்தபடி 'குட்மார்னிங்' வைத்து விட்டு காகிதப் பூக்களைப் பறிக்கப் போகிறார்கள் பெண்கள். 'காயிதப் பூ' - இப்படித்தான் செல்லமாக ஆர்கிட்களை அழைக்கிறார்கள் இந்த ஊரில்.

மணம் :

இந்தக் காகிதப் பூவுக்கு அற்புதமான மணம் உண்டு! பணத்தின் மணம்; புகழின் மணம். ஏற்றுமதியை ஜனவரி '95 மத்தியில் தொடங்க இருக்கிறார் நடராஜன். ஆண்டுதோறும் நூறு மில்லியன் டாலர் மதிப்புள்ள ஆர்கிட் பூக்கள் உலகச் சந்தையில் விற்கப்படுகின்றன. இந்தப் பூக்களுக்கு demand அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. வீராபுரத்துப் பூக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்கா, ஜப்பானுக்கும் பறக்கும்.

வீராபுரத்தவர்களுக்கும் விவரம் தெரிந்திருக்கிறது. "எங்க ஊரு பூ வெளிநாட்டுக்குப் போகும் - அங்க அலங்காரமா வைக்கத்தான் வாங்கறாங்க."

"எங்களுக்கு இந்தப் பூவுல ஆசை கிடையாது. நாங்க தலையிலெல்லாம் வைக்க மாட்டோம்... விலை அதிகமாச்சே! ஒரு பூ மூணு ரூபாய்!" - பெண்கள் விளக்கம் தருகிறார்கள்.

"எங்க ஊரைப் பத்தி அங்க பேசிக்குவாங்க இல்லை... எங்களுக்குப் பெருமை தானே...?" என்கிறார்கள் ஆண்கள்.

உலக வரை படத்தில், மக்கள் வீராபுரத்தைத் தேட ஆரம்பிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

— சீதா ரவி

அட்டை வண்ணப்படம், படங்கள் : **யோகா**

Kalki Shopping Page



RANI.V.SUNDAR RAO
FOUNDER OF
"RANEE SAREES"

RANEE SAREES

J.S.V. TEX
HL SUNGUDI SAREES
MADURAI - 12

Our Stockist :

வைத்தியம்

பர்வதா சாரீஸ்,

1, வடக்கு மாடவீதி,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.

பொங்கல் தள்ளுபடி விற்பனை
நாள் : 1.1.95 முதல் 15.1.95 வரை

மங்களம் பொங்கும்
வைத்தியம்

பர்வதா சாரீஸ்

ஜரிகை சுங்கிடி புடவைகள்
6 முதல் 10 கெஜம் வரை

எங்களிடம் ..."RANEE SAREES"
புடவைகளும் கிடைக்கும்

ஷோரூம் :- வைத்தியம்
பர்வதா சாரீஸ்
எண்: 1, வடக்கு மாடவீதி
மைலாப்பூர்,
சென்னை - 600 004.
(மயிலை மாங்கொல்லை
அருகில்)

மனோஜ் கலர் ஜெராக்ஸ்

போஸ்ட் கார்டு சைஸ்
கலர் போட்டோக்களை
A4, A3 சைசுக்கு
என்லார்ஜ் செய்து
எங்கள் செலவில்
கொரியர் மூலம்
அனுப்பி வைக்கப்படும்

A4 - Rs. 75/= A3 - Rs. 125/=

கலர் போட்டோ, M.O. D.D.,
அனுப்ப வேண்டிய முகவரி

மனோஜ் ஜெராக்ஸ்
4, குமரன் ரோடு, திருப்பூர் - 641 601.
போன் : 700306,701304. பேக்ஸ் : 701004.

அருமையான டிசைன்களில்
Madurai sungudi sarees ரூ. 110/-
விலையில் வழங்கும் ஒரே
நிறுவனம்

RAMACHANDRA SAREES,



(மதுரை சுங்குடி
புடவைகளின்
உலகம்)

37-B, Arya Gowder Road,
Postal Colony Bus Stop :
West Mambalam, Madras - 33.
Bus Route : 11R: 11J; 11E; 11D; 12G;
49J; 49;51; J13; 9A


Ramachandra Sungudi Sarees
No.1 தரம் எங்களின் விலாசத்தில்
மட்டுமே கிடைக்கும்.
இன்னும் பிற: தரமான
Venkatakiri, Bengal & கோரா
Cottons புடவைகளும் கிடைக்கும்.

Kachchi Moodoor Archakas Welfare Trust (Regd.)

Regd. Office : No. 1, Salai Street, Kancheepuram - 631 502

Admn. Office : No. 10, II Main Road, Kotturpuram, Madras - 600 085. Phone : 411936





APPEAL

Temples and Archakas in many villages have become indigent due to the deprivation of subsistence provided to them, from their age-old endowments. In 1986, Poojyasri Chandrasekharendra Saraswathi Swamigal of Kamakoti Peetam, ordained a detailed Scheme involving prescribing of suitable sylabi, holding of oral examinations etc., for selecting deserving Archakas and aid them on a continuable basis for performing daily poojas in the respective temples. To implement the scheme, His Holiness formed this trust and designated it as above, praying to Sri Kanchi Kamakshi, to shower Her Blessings on the Donors and Beneficiaries.

This trust started assisting five Archakas each with Rs. 100/- per mensem from June '87 and by the Grace of the Jagadguru is helping now, each of the 202 beneficiaries - 25 Bhattacharyas + 93 Sivachariars + 84 Hereditary Poojaris - with Rs. 225/- per month. Eligible beneficiaries are also provided with an Insurance coverage of Rs. 10,000/- each. The expenses are met from the interest earnings on the present investments of Rs. 51 lakhs.

In order to serve additionally new batches selected every year and to raise the quantum of aid periodically, the Corpus Fund has to keep on increasing. According to Mahaperiyava, this should be achieved solely through donations - offerings from Devotees and contributions from interested organisations. Hence this appeal for donations.

The Great Sage of Kanchi has also given the Guidance that while Devotees with a monthly gross income of less than Rs. 4,000/- can contribute any amount, the other Devotees are required to offer their one month's gross income, at least once in their life-time, either in one lumpsum or in two or three convenient instalments. Otherwise, they can themselves save small amounts periodically and send the said consolidated amount, later to this Trust. Exemption under Section 80G of Income-tax Act is available. This Trust is registered also uncer FCRA to receive donations from abroad.

Donations may kindly be sent to the Administrative Office at the address given above, by Mondy Order / Crossed Cheque / Demand Draft drawn in favour of 'Kachchi Moodoor Archakas Welfare Trust'. Instruments like Indira Vikas Pathras and legacies to this Trust are also accepted. Donations to this Trust may be made at Srimatam, Kancheepuram, also.

May I, on behalf of the Trust, once again appeal to all Devotees and Organisations, interested in helping to preserve our rich Heritage, to donate for this noble cause espoused by this Great Avatar.

N. Krishnaswamy Reddy

January 1995

Justice N. Krishnaswamy Reddy (Retd.)
Chairman of the Trust

தமிழக அரசு தமிழுக்குத் தரும் மரியாதை!


உலகத் தமிழ் மாநாடு நடக்கும் இந்த நேரத்தில், தமிழக அரசு தமிழுக்கு எந்த அளவுக்கு மரியாதை கொடுக்கிறது, பார்ப்போமா?

"தமிழ் நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழி என்று சட்டம் போட்டு ஒரு வெள்ளி விழாக் காலம் ஆகிறது. ஆனால் தமிழக அரசுப் பணிகளில் இன்னமும் ஆங்கிலமே ஆட்சி புரிகிறது. இதுவரை 29 அரசாணைகள் போடப்பட்டும், அரசுப் பணியில் கோப்புகளில் குறிப்புகள் எழுதுவதற்கும், தமிழ் நாட்டிற்குள்ளேயே செய்யப்படும் கடிதப் போக்குவரத்திற்கும் பெரும்பாலும் ஆங்கிலமே பயன்படுத்தப் படுகிறது. ஆட்சி மொழியை அமுல் படுத்தும் பொறுப்பில் உள்ள தமிழ் வளர்ச்சி இயக்குனரகம் (Directorate of Tamil Development) சரியான நிதி ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தாலும், அதிகாரிகளுக்குள் நடக்கும் உட்பூசலாலும் ஸ்தம்பித்துப்போய் இருக்கிறது. இந்த நிலையில் கோடிக் கணக்கில் செலவழித்து, உலகத் தமிழ் மாநாடு தேவைதானா?" என்று எரிச்சலுடன் குமுறினார் தமிழக அரசின் உயர் அதிகாரி ஒருவர். 'அரசாணைகள் தமிழில்தான் போட வேண்டும்' என்ற ஓர் அரசாணை கூட ஆங்கிலத்தில் போடப்பட்டதாம்!

ஓர் இயக்குனர், இரண்டு துணை இயக்குனர்கள், உதவி தமிழ் ஆய்வு அலுவலர்கள் என்று ஏராளமான அதிகாரிகளைக் கொண்ட இந்த இலாகாவில் இப்போது இரண்டாவது நிலையில் இருக்கும் துணை இயக்குனருக்கும், இயக்குனருக்கும் இடையே குடுமிப்பிடி சண்டை. துணை இயக்குனர் யார் தெரியுமா? தமிழக அரசியலில் எப்போதுமே இரண்டாம் இடத்திலிருப்பவரின் மருமகன். தோழியின் தயவைப் பெற்ற ஒருவர் உதவி இயக்குனர்.

இந்தத் துறையில் உள்ள தமிழ் ஆய்வு அலுவலர்கள் மாவட்டத் தலைநகர்களில் பொறுப்பு வகிக்கிறார்கள். டெபுடி கலெக்டர் அந்தஸ்தில் உள்ள இவர்களுக்கு உதவி புரிய, அலுவலர்களோ, ஏன் ஒரு பியூனோகூடக் கிடையாது. டெலிபோன் கிடையாது. வாகன வசதி இல்லை. பல மாவட்டங்களில் இந்த அலுவலர்களுக்குக் கடிதம் எழுத பேப்பர் கூடக் கிடையாது. கைக்காசு போட்டு பேப்பர் வாங்கிக் கொள்கிறார்கள். போக்குவரத்துப் படியும் அடிப்படைச் சம்பளத்தில் 40 சதவீதத்திற்குப் பதிலாக மொத்தமாக மாதத்திற்கு 500 ரூபாய் என்று மிகத் தாமதப் படுத்திக் கொடுக்கிறார்கள். இந்த நிலையில் மாதம் நாற்பது அலுவலகங்களை ஆய்வு செய்து இவர்கள் தமிழ் வளர்ச்சியைக் கண்காணிக்க வேண்டுமாம்!

இது ஒருபக்கம் இருக்க, ஆய்வு நடத்தப் படும் அலுவலகங்களில் தமிழ் ஆய்வு அலுவலர்



களுக்கு உரிய மரியாதை கிடையாது. "நாங்கள் ஏதாவது கண்டனக் குறிப்புகள் எழுதுவோம் என்று சொன்னால்கூட ஊழியர்கள் கவலைப்பட மாட்டேன்கிறார்கள். 'அட! போங்க! தமிழைப் பற்றி யார் கவலைப் படறாங்க' என்று கிண்டல் செய்கிறார்கள்" என்கிறார் ஆய்வு அலுவலர் ஒருவர்.

இந்த தமிழ் வளர்ச்சித் துறை பல அலுவலகங்களை ஆய்வு(!) செய்தாலும் கோட்டையில் தமிழ் பயன்படுத்துவது குறித்து இன்னமும் ஆய்வு செய்யவில்லையாம்.

"தலைமைச் செயலகத்திலிருந்து ஆங்கிலத்தில்தான் கடிதங்கள் வருகின்றன. முதலில் அங்கே தமிழைப் பயன்படுத்துங்கள், கீழ் மட்டங்களில் உபயோகிப்பது அதிகரிக்கும்" என்று மாவட்ட அலுவலர்கள் சொல்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் ஊழியர்களுக்கு ஆட்சி மொழி அறிவை ஊட்டிட மாதம் இரண்டு வகுப்புகள் எடுக்கப்பட வேண்டுமென்று அரசு கட்டளையிட்டுள்ளது. ஆனால் ஆய்வு அலுவலர்கள் நடத்தும் வகுப்புகளுக்கு வெற்றிலைப் பாக்கு வைத்து அழைத்தாலும் ஊழியர்கள் வராமல் டபாய்த்து விடுகிறார்கள்.

"தமிழ் வளர்ச்சித்துறை என்று மட்டுமல்ல; தமிழுக்காக உருவாக்கப்பட்ட அமைப்புகள் எல்லாமே கவனிப்பாரற்றுத்தான் இருக்கின்றன. உதாரணமாக உலகத் தமிழாராய்ச்சி நிறுனத்தில் கடந்த ஒரு வருடமாய் இயக்குனர் பதவி காலியாக இருக்கிறது. மறைந்த கி.ஆ.பெ. தலைமையில் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்று அமைத்தார்கள். அதற்கும் அலுவலகம் கிடையாது. அகர முதலி திட்டம் என்ற ஒன்று ஆரம்பித்த வேகத்திலேயே முடக்கப்பட்டிருக்கிறது. ஆட்சியிலிருப்பவர்கள் தமிழ் மொழியை வளர்ப்பதாக நாடகமாடி தங்களைத்தான் வளர்த்துக் கொள்கிறார்களே தவிர, உண்மையான மொழி ஆர்வம் கிடையாது. இந்த நிலையில் ஊதாரித்தனமான விழாக்கள் நடப்பதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது?" என்று புலம்பினார் ஓர் அதிகாரி.

தமிழ் மாநாட்டுப் பணிகளில் கூட தமிழ் வளர்ச்சித் துறை புறக்கணிக்கப்பட்டு விட்டதாம். "எங்களில் யாருக்கும் எந்தப் பொறுப்பும் கிடையாது. மற்ற மாவட்டத்தில் இருப்பவர்களை விடுங்கள். தஞ்சாவூரில் இருக்கும் எங்கள் தமிழ் ஆய்வு அலுவலருக்கே எந்தப் பணியும் கொடுக்கப்படவில்லையே" என்றார் இளம் ஆய்வு அலுவலர் ஒருவர்!

- ஸ்ரீநிவாசன்

மோட்டார் சைக்கிள் பரிசுப் போட்டி - 18

ஞ	ற	ப	ழ	ள	வ	க	ன	எ	ஏ	த
பி	ம	ரு	ய	ற	ந	த	யி	உ	மி	லி
ஏ	ம	ட	த	ப	யி	கு	வி	ழ்	ண	பி
வி	மு	லி	கு	ஹ	ஏ	ஓ	த	பி	பா	லி
ஜி	ழி	ய	வி	கு	ரு	ப்	ழி	ம	வி	ரா
ஏ	மி	பு	ழி	ட	பி	டா	பி	மு	ணி	எ
ஓ	ன்	ண்	றே	க்	ட	ட்	ஆ	அ	ய	ண
ன்	ஆ	எ	க	மா	ப	பு	வி	உ	யு	மி
வ	னா	ட்	வா	பா	ர்	டி	ரி	எ	வா	கு
அ	டு	ம்	ட்	ய்	த்	ண்	மு	ஓ	ன்	ங்
ம்	ல்	ணு	டா	சா	தி	யா	னி	ஃ	பு	தி

இது தமிழ் மாநாடு சீசன். தமிழுக்காக யார் என்ன செய்கிறார்களோ, நம்மாலான ஒரு சின்ன வேண்டுதலை இங்கே கட்டங்களில் ஒரே ஒரு வரிசையில் ஒளித்து வைத்திருக்கிறோம். வேண்டுதலுக்கு வேண்டுதலாச்சு; போட்டிக்குப் போட்டியாச்சு! வேண்டுதல் வாசகத்தைக் கீழே நிரப்பி 26 வார முடிவில் மொத்தமாகக் கூப்பன்களை அனுப்புங்கள். மற்ற விதிமுறைகள் வழக்கம் போலத்தான்!

நமது வேண்டுதல்:..

பெயர்:..

விலாசம்: ....

....

பதிவு எண்: 26383 போன்: 583241

கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்

காலம்	46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
வருட வட்டி வீதம்	14%	15%	16%	17.5%	18.5%	19%	19.5%	20% *



மகளிர் ஆண்டு திட்டம்

1994 சர்வதேச மகளிர் ஆண்டை முன்னிட்டு பெண்கள் பெயரில் செலுத்தப்படும் பிக்சட் டிபாசிட்டுகளுக்கு 1% அதிக வட்டி வழங்கப்படும்.
குறைந்த அளவு டிபாசிட் ரூ. 5000/- காலம்: 1 ஆண்டு



பிறந்த நாள் பரிசு திட்டம்

ஆண்டுக்கு ரூ. 920/- வீதம் 4 ஆண்டுகள் செலுத்தி 5ஆம் ஆண்டு முதல் ரூ. 1000/- ஆண்டுதோறும் தொடர்ந்து பெறுவீர்!!



கல்பதரு மணிபேக் திட்டம்

அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தொகை	காலம்	வட்டிவீதம்
ரூ. 10,000	12 மாதங்கள்	20%
ரூ. 10,000 கீழ்		19%

சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்




கடன்

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும்
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்

வட்டி விகிதம் ரூ.1.95

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்

எப்படி இராமாயணம் இடிப்பது...?

♦ "இது ஜனநாயக சர்வாதிகாரம்" என்ற தங்களின் தலையங்கம் தற்போதைய ஆட்சியின் ஆணவப் போக்கை நன்றாகக் கண்டித்துள்ளது.
வடகரை, பாலு.

♦ "சுற்றுச் சூழலைக் காப்போம்" என்கிற முழக்கத்தை முழங்கிக் கொண்டே இயற்கை எழிலை அழித்துப் பல மாடிக் கட்டடங்கள் கட்டவும் அரசு அனுமதி அளிப்பது வியப்புக்குரியது.
திருவண்ணாமலை,
என். சண்முகம்.

♦ கல்கி தலையங்கம் ஒவ்வொன்றுமே மிகவும் உண்மையோடு எழுதப்படுகிறது. இவ்வளவு தெளிவாக இந்த ஆட்சி பற்றி எழுதுகிறீர்கள். மக்களின் மனம் இன்னும் மாற்றம் ஏற்படாமல் உள்ளதே, அதுதான் வருத்தம்!
திருத்தங்கல், ஈ. சிதம்பரம்.

♦ மூதறிஞர் ராஜாஜிதான் எப்பேர்ப்பட்ட தீர்க்கதரிசி! அபரிமிதமான மெஜாரிட்டி, உண்மையான சர்வாதிகாரத்தை விடவும் அபாயமானது என்பதை அன்றாடம் நாம் அனுபவிக்கிறோமே!
திருவண்ணாதபுரம்,
தி. சு. பாலசுப்பிரமணியன்.

♦ மூன்று கார்ட்டூன்களும் மூன்று பக்க தலையங்கத்திற்குச் சமம்; அதிலும் வீரப்பன் குறித்த கார்ட்டூன் வேதனைப்பட வேண்டிய விஷயம் என்றாலும், பார்த்தவுடனேயே சிரிக்க வைத்தது.
திருச்சி - 20, ச. நாகராஜன்.

♦ கொஞ்ச நாளாகவே அட்டைப் படத்தில் கலக்குகிறீர்கள் ஐயா! இந்த வாரமும் பிரமாதம் போங்கள். ராக்கெட் சதி பற்றி பல விவரங்களைப் படித்திருந்தாலும் எந்தப் பாமரனும் இந்த விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் அளவுக்கு கவர் ஸ்டோரி அமைந்திருந்தது!
பொன்மலை,
ஜென்மா.

♦ கவர் ஸ்டோரி மிக சூப்பர். மர்மக் கதை படிப்பது போன்ற உணர்வு.
மூலக்குப்பம், ஆர். தமிழரசி தேவசேனாபதி.

♦ "கவர் ஸ்டோரி" நன்றாகவே இருந்தது. ஆனால் நாட்டின் அதிமுக்கியமான ஓர் இடத்தை குறைந்த தட்சணையில் எட்டிப் பார்த்தது உங்கள் திறமையா? அல்லது அந்த முகம் தெரியாத காவலாளியின் காசாசையா? தங்களைப் போன்ற பொறுப்பானவர்கள் முறையாக அனுமதி பெற்றுச் சென்று பார்த்திருக்க முடியாதா? ஏன் அப்படிச் செய்யவில்லை?
சீர்காழி,
ஜெய். சிராஜுத்தீன்.

(புரியவில்லை? செக்யூரிட்டி - பாதுகாப்பு - ரொம்பக் குறைவாக இருப்பதை எடுத்துக்காட்டத்தான். - ஆர்.)

♦ 'வீரசுவல்' சினிமா வந்துவிட்டால், வீரப்பனையே கதாநாயகனாகப் போட்டு படம் எடுத்தாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை.
பூண்டி,
பி. எஸ். தயாநிதி.

♦ ராஜகுருவின் 'நிவாரணம்' சிறுகதை படித்தேன். அரசு நிவாரணங்களை நம்புவோர்க்கு இக்கதை நல்ல நிவாரணம். கதையைப் படிக்கும் நபர்கள் அவசியம் இக் கதையைப் படிக்காத பாமரர்களுக்குப் புரியும்படி சொல்ல வேண்டும்.
இலால்குடி,
ஆங்கரை பைரவி.

♦ 'சினி சிப்ஸ்' வழங்கிய விதமிருக்கே விதம்... அதற்கு நாடே கூடிப் பாராட்டு விழா எடுக்கலாம்!
மதுரை - 16, சீதாமகன்.

♦ மூதறிஞர் ராஜாஜியைப் பற்றிய செய்திகள் ஆச்சரியத்தைக் கொடுத்தன. அந்த மகத்தான மாமனிதர் எங்கே, இன்றைய அரசியல்வாதிகள் எங்கே?
கும்பகோணம்,
எஸ். கே. மூர்த்தி.

வட்டமேஜை

"எதையும் சாதிக்கும் எந்திரங்கள்"

அன்றைய கால அருந்தவத்தோர் அள்ளிவைத்த - அரிய சாதனங்கள் இன்று ரகசியப் போர்வையில் மறைக்கப்பட்டு, அல்லலும் தொல்லையும் ஆளுகின்ற நிலையை நாகரீக வரலாறு பறைசாற்றுகின்ற பரிதவிப்பில் - எங்கு திரும்பினும் இன்னல் - இடர்ப்பாடு - இடுக்கண் என்ற தோரணங்களே தொங்கலாயின. இந்நிலை களைய, எண்ணியவை வெல்ல - இடர்ப்பாடு துண்டுபட இணையற்ற சக்திபெற்ற சாதனங்களை அறிமுகம் செய்கின்றோம். 24 ஆண்டுகளாக ஒரு நாளேனும் விடுபடாது ப்ரம்மமுகூர்த்த காலவேளையில் - 3 மணி நேரம் பூஜை செய்துவரும் தபஸ்வி ஒருவரால் ஓராண்டு பூஜையில் வைத்து 15 லக்ஷம் உருவேற்றி ஆக்கப்பட்ட ஒப்புயர்வற்ற சக்கரங்கள் - சாஸ்திர சம்பிரதாயப்படி வேதவழி நீதிப்படி அக்ஷரங்கள் தொடுக்கப்பட்டவை. அதிசய சக்தி தரும் - வலியவை - தொட்டெடுத்துத் தொழுவோர்க்குத் துன்பங்கள் நிச்சயம் நீங்கிவிடுகின்ற உறுதி பெற்றவை - மிக எளிய காணிக்கையில் தருகின்றோம். பெற்றிடுங்கள், பெரும் வாழ்வு பற்றிடுங்கள்!

1. கடன்வழி தீர்ந்து சுபிட்ச செல்வப் பெருக்கடைய, தொழில் வழியில், தொல்லைகளைக் களைந்து, தூயதான வரவுகள் பெருக்கடைந்து பெருஞ்செல்வந்தனாகிடவும் - வீடு, வாகனம், வசதி, மேன்மை என்று, கையில் ரொக்கப்பணம் மிகுந்து நிற்க - குபேர செல்வம் குவிய -

"ஸ்ரீ குபேர ஸ்தாபித சக்கரம்".

2. பில்லி - சூனியம், ஏவல், செய்வினை வழியாக ஏற்பட்ட துயரங்கள் நீங்கி எடுத்த காரிய வெற்றியும், எதிரிகளின் எதிர்ப்பு நீங்கி எதிலும் ஜெயம் பெறுகின்ற நிலையும், அனைவரின் அன்புக்குப் பாத்திரமாகிடுவதும், காசுவழி உதவிகள் கிட்டவும், எவரும் மதிக்கின்ற கௌரவம் சூழ்ந்து வரவும் உரியது -

"ஸ்ரீ பார்வதி மதலை சக்கரம்".

3. வழக்காடு நிலையில் நிச்சய வெற்றி பெறவும், ஆஸ்தி-பூஸ்தி, நிலபுலன்கள் வழியான விக்கினங்களில் நிச்சய வெற்றி பெறவும், எண்ணிய பெரிய காரியங்களைச் செய்து முடிக்கின்ற மனவலிமை, ஆட்பலம் அடையவும், வீட்டில் தடைப்பட்ட விவாகங்கள், பிள்ளைப் பேறு ஏற்படவும், எண்ணியவை இனிது கைகூடவும், உரிய

"ஸ்ரீ விநாயக சக்கரம்".

மேற்சொன்ன மூன்றினையும் எளிய காணிக்கையில் தருகின்றோம். இது வீடு வந்தடைந்தாலே விசனங்கள் விலகும். விக்கினங்கள் - மாயும், வெற்றிகள் தோன்றும். இது எதுவோ வார்த்தைக்காக வடித்து வைக்கவில்லை. எவர் ஒருவர் இனிவரும் காலத்தில் இனிதுவாழ வேண்டுமென்று இருக்கின்றதோ, அவருக்குத்தான் இதனை வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

விரும்புவோர் - தெளிவான முகவரியுடன் 14.2.1995 ஆம் தேதிக்குள் மனுச் செய்து கொள்ளுங்கள். விவரப்படிவம் அனுப்புகின்றோம்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி,

ராஜ யோகப் பயிற்சியாளர்,

204, அண்ணாநகர்,

மதுரை - 625 020.

தொலைபேசி - 43412, 46634.

"குருஜி வந்தார்; கிராமமே ஜொலிப்பாயிடுச்சுடுங்க" என்று சொல்கிறார் மாணிக்கம்.

அந்தச் சம்பவம் நடந்து ஏழு வருடங்களாகி இருக்கும் என்கின்றனர் கிராம மக்கள். "நாம சங்கீர்த்தனம் (பஜனை) மூலமே கடவுளை அடைய ணும்" என்ற தத்துவத்தை பிரபலப்படுத்திய பல பெரிய மகான்களின் வழியில் வந்தவர் ஸ்வாமி ஹரிதாஸ்கிரி. அவருடைய பூர்வீகம் தென்னாங்

இங்கே பக்திப் பயிர் செழிக்கிறது!

கூர். ஒருநாள் தமது தோழர் நாமாஜியுடன் சொந்த கிராமத்திற்கு வருகிறார். ஊரிலுள்ள சிவா-விஷ்ணு ஆலயம் பாழடைந்து கிடக்கிறது.

"ஐயா நீங்கதான் ஏதாவது செய்யணும்" என்ற மக்களின் வேண்டுகோள் அவர் மனத்தைத் தொடுகிறது. நினைத்தால் உடனே முடித்து விட வேண்டுமென்ற வேட்கை அவருக்குள்.

"ஸ்தபதியைக் கூப்பிட்டு வாருங்கள்" என்று கட்டளையிடுகிறார்.

பிறகு நடந்தவற்றை நாமாஜி சுருக்கமாக விவரிக்கிறார் :

"அப்போது ஆரம்பித்த தொடர்புதான் இந்தக் கிராமத்தையே மாற்றி அமைத்து விட்டது. அந்த கோயில் தொடர்பாக அடிக்கடி இந்த கிராமத்துக்கு வர வேண்டி இருந்தது. ஏற்கெனவே நாங்கள் குருநாதர் ஞானானந்தருக்கு மடம் கட்ட நல்ல இடமாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். 'இங்கேயே மடத்தைக் கட்டிவிடலாம்' என்று குருஜி முடிவு செய்து விட்டார். முதலில் பெரிய பஜனை மண்டபம் கட்டினோம். அதையொட்டி அன்னதானக் கட்டடமும் உருவாகிற்று. பண்டரீபுரம் பாண்டுரங்கர் கோயில் கட்ட வேண்டுமென்பது குருஜியின் கனவு. பூரி கோயில் கோபுரத்தைப் போன்று பாண்டுரங்கன் கோயிலை அமைத்தார்." இக்கோவிலின் உட்புறச் சுவர்கள், மேற்கூரை முழுதும் வண்ண ஓவியங்களால் - இந்தி



• சுவாமி ஹரிதாஸ்கிரி



• பாண்டுரங்கர் ஆலயம் உருவாகிறது...




• நாமாஜி



• புஷ்கலவனம்

அடுத்த இதழில்....

- **பொங்கல் ரிலீஸ் படங்கள் :**
  - ஒரு பம்பர் கவர் ஸ்டோரி
- **வெற்றிமணி ஒலிக்கும் வீரமணி**
  - சிறப்புக் கட்டுரை



யாவிலேயே முதன் முறையாக முழுவதும் ஃபைபர் கிளாஸில் அலங்கரிக்கிறார்கள்.

"இன்னும் இரண்டு மாதத்தில் ஓவியப் பணிகள் முடிந்து விடும். குருநாதரின் அருளால் தொடங்கப்பட்ட இப் புனிதப் பணியில் என் பங்கும் சிறிது இருப்பதில் பெரிதும் மகிழ் கிறேன்!" என்கிறார் ஹரிதாஸ் கிரியின் தீவிர பக்தரான ஓவியர் நடனம்.

"குருநாதருக்கு மடமும் எழுந்து கொண்டு வருகிறது. இந்த நிலையில் செப்டம்பர் மாதம் ருத்ர பிரயாகையில் ஜலசமாதி அடைந்து விட்டார் குருஜி. ஆனால் எங்களைப் பொறுத்த மட்டில் உடனிருந்து வழிநடத்திச் செல்கிறார்" என்று முடிக்கிறார் ஹரிதாஸ் கிரி ஸ்வாமி களின் வழித்தோன்றலான நாமாஜி ஸ்வாமி கள்.

ஹரிதாஸ்கிரி அவர்களுக்கு உள்நாட்டி லும், வெளிநாட்டிலும் லட்சக்கணக்கில் பக்தர்கள் இருக்கின்றபடியால், பணத்துக்கு ஒன்றும் குறைவில்லை. இரவும் பகலும், சிற்றுளி கல்லுடன் மோதும் சப்தம் கேட்டுக் கொண்டே இருந்தது.

"எங்க விவசாயம் கோரைதான். வந்தவாசி 'பாய்'மாருங்க, கோரையைப் பாய் நெய்ய வாங்கிட்டுப் போவாங்க. ஏரிலே தண்ணி இருந்தா ஒரு போகம் நெல்லு போடுவோம். எங்க பசங்க, பொதுவா வெளியூருக்குத்தான் வேலை தேடிப் போயிட்டு இருந்தாங்க! இப்ப இங்க நடக்கற கட்டுமானப் பணிகள் காரண மாக பசங்களுக்கெல்லாம் வேலை கெடச் சிருக்கு. இதுவரைக்கும் 50 கோடி ரூபாய் வேலை நடந்திருக்கும்! ஒண்ணுமே படிக்காத பசங்க கூட இப்போ மின்சார வேலை, சிற்ப வேலையெல்லாம் கத்துக்கிட்டாங்க!" என்று சொல்கிறார் ஆசிரியரான பூங்காவனம்.

நாம சங்கீர்த்தனத்தில் ராதே - கிருஷ் ணன் வழிபாடு மிகவும் முக்கியம்.

"அது ஏன் இரட்டை விரலைக் காட்டி "ராதே - கிருஷ்ணா" என்று சொல்கிறார்கள்?" என்று நாமாஜியிடம் கேட்ட போது ஒரு விரல் ராதையையும், மற்றொரு விரல் கிருஷ்ணரையும் குறிப்பதாகச் சொன்னார் அவர்.

முதியோர் இல்லம் ஒன்று சிறிய அளவில் இயங்கி வருகிறது.

"கோயில் கும்பாபிஷேகம் நடக்கணும். மடம் கட்டி முடிக்கணும். இந்த கிராமத்துக்கு, ஒரு நல்ல ஆஸ்பத்திரியையும் கல்வி நிலை யங்களையும் கொண்டு வருவது குருஜியின் திட்டம். அவருடைய பக்தர்கள், அவரது எண் ணங்களைச் செயலாக்கிக் காட்டுவார்கள்" என் கிறார் நாமாஜி.

- ப்ரியன்

படங்கள் : ராஜன்



அம்மா இத்தனை வருடங்களாக
மறைத்து வைத்திருந்த ரகசியம்
அப்பா முதன்முதலில் பார்த்தபொழுது அம்மாவின் கூந்தலழகில்தான் மனத்தை பறிகொடுத்தாராம். ரகசியம்....?
செம்பருத்தி கலந்த மூலிகையின் கலவை. அறிமுகப்படுத்துகிறோம்...! புதிய மீரா ஹெர்பல் செம்பருத்தி பவுடர். இதில் செம்பருத்தியுடன் ஆவாரம்பூ, உசிலம் மற்றும் பல அரிய மூலிகைகள் அடங்கியுள்ளது.
கூந்தலின் வேர் பாகத்தை உறுதியாக்கி முடி உதிர்வதைத் தடுக்கிறது.
O&M/6554/TM
மீரா
செம்பருத்தி பவுடர்

வாழ்க்கையை ஜெயிக்கலாம் வாருங்கள்!



வாழ்க்கை என்பது வெறும் சம்பவங்களின் தொகுப்பு அல்ல. அது உண்மையைத் தேடும் முயற்சி. அறியாமையில் இருந்து அறிவை நோக்கிய பயணம். ஆனால் அது எல்லோருக்கும் ஒரே மாதிரி வாய்ப்பதில்லை. சிலருக்குப் பாதை கரடுமுரடானது. சிலருக்கோ பாதையே இல்லாத காடுமேடானது. மிகச் சிலருக்கே அது விமானப் பயணம். இந்த அவசியமான பயணத்துக்கு ஒரு கைகாட்டி அல்லது வழி காட்டி கிடைத்தால் ஒரு நிம்மதி இருக்கும். இந்த வழிகாட்டுதலைத்தான் கீதை செய்கிறது.

கீதையின் முதல் அத்தியாயத்தில் கிருஷ்ணனை அர்ச்சுனன் ஏவல் கொள்கிறான். நிறைவான பதினெட்டாம் அத்தியாயத்தில் 'கண்ணா உம்முடைய ஏவலை நான் பணிந்து செய்வேன்' என்று நிறைவு செய்கிறான். தன் விருப்பப்படி இறைவன் (உலகம்) இருக்க வேண்டும் என்கிற அகங்காரத்தில் கீதை தொடங்கியது. அவனது விருப்பப்படி நாம் வாழ்வதே வழிமுறை என்கிற தெளிவில் கீதை நிறைவடைகிறது. நம் விருப்பப்படியே எல்லாம் நடக்க வேண்டும் என்று சிறுபிள்ளைத்தனமாக ஆசைப்படுகிறோம். தினம் தோறும் தீபாவளியாக இருந்தால் குழந்தைகட்கு மகிழ்ச்சிதான். அது சாத்தியம் இல்லை. தகப்பனாலும் தாங்க முடியாது.

அலுவலகத்திற்குப் போகாமலேயே சம்பளம் வீட்டுக்கு வந்து விட்டால் பல பேருக்கு மகிழ்ச்சிதான். அது நியாயம் இல்லை. ஒரு தேசம் அதைத் தாங்காது. நாம் நினைக்கிறபடியே எல்லாம் நடக்காதா என்ற சிறுபிள்ளைத்தனமான ஆசையோடு வாழ்வில் அடி எடுத்து வைக்கிறோம். அது சாத்தியமில்லை. இறைவன் வகுத்துக் கொடுத்தபடி வாழ்வதுதான் சாத்தியம் - சரி - சத்தியம் என்று இறுதியில் தெளிவு பெறுகிறோம்.

"அச்யுதா... இருவர் படைகளுக்கு இடையில் என் தேரை நிறுத்து. யான் யாரோடு யுத்தம் செய்ய வேண்டும் என்பதையும், போரை விரும்பி நிற்பவர் யார் என்பதையும் கவனிக்கிறேன்" என்று இறைவன், தன் விருப்பப்படி நடக்க வேண்டும் என்ற அர்ச்சுனன் கூற்றோடு (அத். 1 சுலோ. 22) தொடங்கிய கீதை. "அச்யுதா... மயக்கம் ஒழிந்தது. உம் அருளால் தெளிவு பிறந்தது. ஐயம் இல்லை. உறுதி பெற்றேன். உமது சொற்படி (தவ வசனம்) செய்வேன்" என்ற கூற்றோடு (அத் 18. சுலோ 13) கீதை ஏறத்தாழ நிறைவுற்றது. இயற்கையின் ஏற்பாட்டுக்கும் நமது விருப்பத்துக்கும் உள்ள இடைவெளியைச் சிக்கல் இன்றி நிரப்ப கீதை கற்றுக் கொடுக்கிறது.

'கடவுளின் விருப்பப்படி நடப்பது' என்றதும் கையில் பிரம்புடன் நிற்கிற ஆசிரியருக்குப் பயப்படும் சிறுபிள்ளைத்தனமாக நட என்று கீதை மிரட்டவில்லை. இயற்கை ஒழுங்கைப் புரிந்து கொண்டு, தன்னைத் தானே கட்டுப் படுத்தி, நிறைவான மனோநிலையில் வாழும் உயர்ந்த வாழ்க்கை முறையே கடவுளின் விருப்பப்படி நடத்தல் என்பதைக் கீதை புரிய வைக்கிறது. கடவுளைப் பற்றிய சிந்தனை தன்னம்பிக்கை, சுய முயற்சி ஏன், சுய மரியாதைக்கே விரோதம் என்பது சிலரது குற்றச்சாட்டு. தவறு...

தவறு... தவறு.

"தன்னைத் தன்னாலே உயர்த்திக் கொள்க. தன்னை இழிவுறுத்தலாகாது. ஏன் என்றால் தானே தனக்குப் பகை; தானே தனக்கு நண்பன்" என்று கீதை (அத்-6 சுலோ 5) முழங்குகிறது. தன் வாழ்வின் ஒவ்வொரு தோல்விக்கும் ஒவ்வொரு தலையைத் தடவுகிற மூடர்களைக் கீதை கண்டிக்கிறது.

என்னை விட எனக்கு இனியவர் யார்? என் முன்னேற்றத்தில் என்னை விட அக்கறை காட்டுவது வேறு யாராக இருக்க முடியும்? பூமி எனக்கு உடம்பைக் கொடுத்தது. ஆகாசம் எனக்கு மூச்சைக் கொடுத்தது. இரண்டும் சேர்ந்து வாழ்க்கை கொடுத்தது. இந்த வாழ்க்கையை மேலும் மேலும் குழப்பிக் கொண்டு, துன்பப்படாது வாழ விரும்புகிறவர்கள் தன்னம்பிக்கையுடன் கீதையின்படி வாழ்வது உத்தமம். 'தான்' என்பது சரீரம் என்கிற வரை அது அகங்காரம். அதுவே ஆன்மா என்று ணர்தல் பெருஞானம்.

எல்லாமே ஆன்ம சொரூபம் என்பதை உணர்ந்து கொண்டால் உயர்வு, தாழ்வு, பகை போன்ற பேதங்கள் இல்லை. ஆனால் ஆன்மாவையும் உடம்பையும் கட்டியிருப்பது குணங்கள். கண், மூக்கு போன்ற கருவிகளால் ஆன மனிதர்களில் ஒருவருக்கும் மற்றொருவருக்கும் என்ன வேறுபாடு? குணங்கள். இவர் கோபக்காரர்... அவர் சோம்பேறி... இவர் சாந்தமானவர் என்று குணங்களைக் கொண்டு தானே மனிதர்களைப் பாகுபடுத்திப் பார்க்கிறோம்?

குணங்களை மூன்றாகப் பிரிக்கிறது கீதை. அசைவின்மை, சோம்பல், தாமதம் என்பதைச் செயல் அற்ற தமோ குணம் என்கிறது. இவர்கள் முயற்சி அற்றவர்கள். புளிப்பான போதை தருகிற உணவை விரும்புகிறவர்கள். அடுத்து சிலர் படபடப்பான, கோபம் கொப்பளிக்கிற, உத்தரவு பிறப்பிக்கிற இயல்புடையவர்கள். இவர்கள் செயலைத் தன் முனைப்புடன் செய்கிற ரஜோ குணத்தவர். வெப்பம், காரம், நெடி மிகுந்த உணவுகளை விரும்புகிறவர்கள். மற்றும் சிலர், அமைதியான, சோம்பலற்ற சுறுசுறுப்புடன், தெளிந்த மனத்துடன் இன்சொல் பேசும் சத்வ குணம் உடையவர்கள். வெள்ளை அன்னம், பால், மோர் போன்ற எளிய உணவினர். இம்மூன்று குணங்களும் தனித்தனியாக நூற்றுக்கு நூறு எவரிடமும் இருப்பது இல்லை. கொஞ்சம் கொஞ்சம் வித விதமான அளவில் கலந்து கிடப்பதே மனித குல பேதங்களுக்கு மூலகாரணம். உணவை மாற்றுவதன் மூலம் உணர்வுகளை மாற்றி அமைக்க முடியும்.

இராமாயணத்தில் கும்பகர்ணன் தமோ குணம். இராவணன் ரஜோகுணம். வீடணன் சத்வகுணம். தமோ குணம் முதலில் அழிக்கப்பட வேண்டியது. அடுத்து ரஜஸ். இறுதியாக சத்வகுணமும் நீங்கி இறை நிலையில் நிற்பதே நிறை வாழ்வு.

கண்ணாடியில் அடிக்கடி முகம் பார்ப்பது போல் ஞான நூல்களில் அகத்தைப் பார்த்துச் சரிசெய்து கொள்பவன் விவேகி. சின்னச் சின்ன மாற்றங்கள் பெரிய பெரிய வெற்றிகளை விளைவித்த வரலாறுகள் உண்டு. முயற்சியும் பயிற்சியுமே நம்மை மாற்றி அமைக்கும். நம் மீது நமக்கே வெறுப்பு வரும் தாழ்வான வாழ்க்கையில் இருந்து வெளியேறுவோம். வெற்றி நடைபயில ஒரு ராஜபாதை நமக்காகக் காத்திருக்கிறது.



கர்மயோகத்தைப் பூமியும் ஞானயோகத்தைச் சூரியனும் பாடம் நடத்துகிறது. படித்துப் பார்க்கலாம் வாருங்கள். வெளியே நடத்தும் வீணான போராட்டங்களைக் குறைத்து உள்ளே நிகழ்த்த வேண்டிய ஞானயுத்தத்தைத் தொடங்குவோம், வாருங்கள்! வாழ்க்கையில் ஜெயிப்பது பெரிதல்ல. வாழ்க்கையை ஜெயிக்கலாம் வாருங்கள்!

(முற்றும்)

சுகிசிவம்

"**பா**த்து, மெதுவா படி ஏறி வாங்க இரண்டு பேரும்." அத்தையின் குரல் எச்சரிக்கையை உதிர்த்தது.

அப்பா ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பியிருக்கிறார். என்னுடன் தடுமாறிப் படியேறி, மேலே வந்தாயிற்று. சமதளத்துக்கு வந்த பிறகும் நடையில் தடுமாற்றம். என் மனைவி மேலே நின்று கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். நான் அவளைப் பார்க்க, என் பார்வையின் அர்த்தம் புரிந்தவளாக மெல்லச் சிரித்தாள். 'இனிமே அப்பாவை வீட்டிலேயே நாம கவனிச்சுக்கலாம்' என்பதில் அவளுக்கு ஒரு திருப்தி.

"டாக்டர் என்ன சொன்னார்?" என்றாள்.

"நல்லா கவனிச்சுக்கச் சொன்னார்; மருந்து, மாத்திரைன்னு ஏதோ எழுதிக் கொடுத்திருக்கார்" என்று ஒரு தாளை நீட்டினேன். அதன் பின்புறம் எழுதியிருந்ததைப் படித்ததும் அவள் முகத்தில் சட்டெனக் கேள்விக் குறி. "மருந்துகள் சரி... ஆனால் இது....?"

"அது நிச்சயம் வாங்கித்தர வேண்டுமாம்" என்றேன்.

'அது' என்றது அப்பாவுக்கு ஒரு கைத்தடி.. இத்தனை காலம் ஏதோ பிடிவாதம்; வரட்டுக் கௌரவமாகக் கூட இருக்கலாம். கைத்தடி இல்லாமலே நடந்தார் - இல்லை, நடக்க முயன்றார். போன வாரம் நடக்கும் போது தெருவில் கீழே விழுந்து விட்டார். உடனே ஆட்டோவில் ஆஸ்பத்திரிதான்.

அப்பா தடுமாறியவாறே அறைக்குள் போனார். அசதி போலிருக்கிறது. படுக்கையில் சாய்ந்தார். அறைக்குள் தயங்கி நின்றேன்.

'ரெஸ்டு எடுக்கட்டும். வாங்க" என்று என்னை அங்கிருந்து வெளியே வருமாறு அழைத்தாள் மனைவி.

"சரி, நான் போய் இதெல்லாம் வாங்கிட்டு வர்றேன்" என்று புறப்பட்டேன்.

இரவு நெடுநேரம் என்னால் தூங்க முடியவில்லை. அப்பா கீழே விழுந்தது, ஆஸ்பத்திரியிலிருந்தது, கைத்தடி வாங்கி வந்ததும் அதை அவர் முதலில் வெறுப்புடன் பார்த்தது, அதைப் பிடித்துக் கொண்டு நடக்க மாட்டேன் என்று சொன்னது, 'உங்கள் உடல் பாரம் வீங்கிய கால் மூட்டுகளில் பதியும் போது, வலி இன்னும் அதிகமாகும்னு டாக்டர் சொன்னதை மறந்துட்டீங்களா?' என்று நான் கத்தியது... இந்நிகழ்ச்சிகள் என்னை வெகுவாகப் பாதித்து விட்டிருந்ததை உணர்ந்தேன்.

தண்ணீர் குடித்துவிட்டு வரலாம் என்று எழுந்தேன்.

அடுத்த அறையிலிருந்து முனகல் சப்தம். எட்டிப் பார்த்தேன். அப்பா இன்னும் தூங்கவில்லையா? படுத்து நிறைய நேரமாகிறதே. உள்ளே நுழைந்தேன். விளக்கைப் போடாமல் படுக்கையின் அருகில் நின்றேன். மெல்லத் தொட்டுப் பார்க்கலாம் என்று கையை நீட்டிய போது படுக்கையைத் தீண்டிய கையில் ஈரம்... என்ன இது?

மீண்டும் அப்பாவின் முனகல். அடடா... படுக்கையிலேயே போயாயிற்றா? சற்றே அருவருப்புடன் விரைந்து போய் என் மனைவியை எழுப்பினேன்.

"அங்கே வந்து பார்... படுக்கையிலேயே போயாச்சு!"

பார்த்துவிட்டு வந்த மனைவி, "சரி... இதுக்கென்ன... படுக்கையை மாத்திடலாம், கொஞ்சம் உதவி பண்ணுங்க" என்று அலுத்துக் கொள்ளாமல் வேலையை முடித்தாள். அவளுடைய பொறுமையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அந்த இரவு மட்டுமில்லை. அடுத்த பல இரவுகளிலும் இந்தப் பிரச்னை தொடர்ந்தது. அவரால் எழுந்து நடந்து போய்... முடியவில்லை. சில நாட்களில் இந்தப் பிரச்னைக்கும் வழி செய்தோம்.

ஒவ்வொரு இரவும் என் மனைவி மனம் கனிக்காமல் கடமையாக ஏற்றுக் கொண்டு செய்தாள். என்னால் ஏன் அவளைப் போல் இருக்க முடியவில்லை? ஒரு பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் அதை மனம் கோணாமல் செய்ய வேண்டாமா? அந்த அளவு மனத் தெளிவு ஏன் எனக்கு இல்லை?

நாட்கள் நகர்ந்தனவே தவிர என் கேள்விகளுக்கு என்னால் பதில் கண்டு கொள்ள முடியவில்லை.


அப்பா எங்களுடன் தங்க வந்து

மாதங்கள் ஓடிவிட்டன. எண்பத்தாறு வருடங்களைப் பார்த்த மனித உடல் எப்படியிருக்கும் என்பதற்கு சாட்சியாக அவர்.

போட்டிக் கதை – 18

மாத்திரைகளும்தான்... தினமும் அப்பா நடப்பதைப் பயிற்சியாக வைத்துக் கொள்ள வேண்டும்... நோய் முற்றிப் போனால் முட்டியில் அறுவைச் சிகிச்சை செய்து பார்க்கலாம் என்கிறார் டாக்டர். அதன் பின்னும் உத்தரவாதமில்லை என்கிறார்.

வாழ்க்கையில் எதுதான் உத்தரவாதம்?



இத்தனை காலம் கிராமத்தில் அத்தையுடன் தான் அப்பா தங்கியிருந்தார். 'உங்களுடன் கொஞ்ச நாள் வந்து இருக்கட்டுமா?' என்று அப்பாவிடமிருந்து கடிதம் வந்தபோது எனக்கு

அத்தனை ஆண்டுகளில் எத்தனை முறை அந்த உடல் நோய்களை எதிர்த்திருக்கும்? எத்தனை முறை வென்றிருக்கும்! இம்முறை முடியவில்லை... வலது கால் முட்டியில் வலி; உட்கார்ந்தால் காலில் வீக்கம், நடந்தால் முட்டியில் வீக்கம்.

இந்த மூட்டுவலி 'ருமடாய்டு ஆர்த்ரைட்டிஸ்' என்ற வகையாம். இந்த நோய் தீர மருந்து இல்லையாம். வலி தெரியாமலிருக்க ஆயின்ட்மெண்டும்,

வாசன்

கம்பனைப்போல் சிறக்க...

எங்கள் நாட்டரசன்கோட்டையில் ஒரு பழக்கம். குழந்தை பிறந்தவுடன், அருகிலுள்ள கவிச்சக்கரவர்த்தி கம்பன் சமாதிக்குச் சென்று மண் எடுத்து வருவார்கள். அதைக் கரைத்து, பிறந்த குழந்தையின் நாக்கில் தடவுவார்கள். குழந்தை கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்கிற நம்பிக்கையில் இன்றும் இதைச் செய்கிறார்கள்.

—என்.ரிஷிகேசன்

கௌரிவாக்கம்,

மகிழ்ச்சி ஒரு பக்கம்; ஏதோ ஒரு கலக்கம் இன்னொரு பக்கம். யோசித்த போது குழப்பம். எப்போதும் போல் மனைவிதான் தெளிவான பதிலைத் தந்தாள்.

"நம்மோடு வந்து இருக்கட்டுமே. குழந்தை இருக்கிறதால தாத்தாவுக்கும் கொஞ்சம் பொழுது போகும்." குழந்தைக்குப் பதினோரு மாசம்.

"அப்பாவுக்கு இங்கே வசதியா இருக்குமா?"

"அவருடைய தேவைகளே குறைச்சல் தானே... எங்கே இருந்தாலும் அவர் தன்னுடைய தேவைகளைப் பாத்துக்குவார். இது உங்களுக்குத் தெரியாதா?"

ஆனால் அப்பா வந்த பிறகுதான் அவருடைய தேவைகளைப் பார்த்துக் கொள்ள மற்றவர் உதவியும் தேவை என்று எங்களுக்குத் தெரிந்தது. என் மனைவி இதை உடனே ஏற்றுக் கொண்டாள். எனக்குத்தான்....

அப்பாவைப் பார்த்து மூன்று வருடங்களுக்கு மேலாகியிருந்தது.

அதற்குள் அவரிடம் அத்தனை மாற்றங்களை நான் எதிர் பார்க்கவில்லை. நடையில் மிகுந்த தடுமாற்றம். பத்தடி நடக்க பத்து நிமிடம், எங்கே விழுந்து விடுவாரோ என்று தோன்றும். உழைத்த காலத்தில் எவ்வளவோ நடந்து நடந்து பழகிய கால்கள்; இப்போது இரண்டடி எடுத்து வைத்தாலே தடுமாறுகிறதே. கிராமத்திலிருந்த போது ஏற்கெனவே சில தடவைகள் விழுந்து தலை, கை, என்று அடிபட்டதாம். அப்படியிருந்தும் தினமும் இரண்டு வேளை நடக்காமல் இருக்கமாட்டாராம். தன்னால் பிறருக்குத் தொல்லை கூடாது என்ற பிடிவாதம் அவருக்கு. மனத்தால் மட்டும் உடலை ஏவ முடியுமென்றால் நோய்களின் தொல்லை குறைந்து போய் விடுமாமே? அதாவது, குறைந்தது போலத் தெரியுமாம் - டாக்டர்தான் சொன்னார்.

குழந்தை அழுதான். அவனை எடுத்து வந்து என்னிடம் கொடுத்து விட்டு, "இவனைக் கொஞ்சம் பாத்துக்குங்க. எனக்குச் சமையல் செய்து முடிக்கணும்" என்று எனக்குப் பதில் சொல்ல வாய்ப்புக் கொடுக்காமல் போய்விட்டாள் மனைவி.

அவனை எடுத்துக் கொண்டு, அப்பாவின் அறையில் எட்டிப் பார்த்தேன். அவர் படுக்கை காலியாக இருந்தது.

எனக்குச் சந்தேகம். குழந்தையைக் கீழே விட்டேன்.

"அப்பா எங்கே போயிட்டார்?" என்று கூவினேன்.

"நானும் கவனிக்கலையே...." என்றாள் என் மனைவி.

"அவர் தெருக்கோடி வரை நடந்து போயிருக்கார்." குறுக்கிட்டது அத்தைதான்.

"அவரை நடக்க வேணாம்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். கைத்தடியை வைச்சுக்கிட்டு நடந்தாலும் கீழே விழறார்... வீட்டிலேயே இருக்க வேண்டியதுதானே... காலையில எழுந்ததுமே ஏன் இப்படி?" எனக்குக் கோபம் தலைக்கேறியது.

அப்போது அப்பா உள்ளே நுழைந்தார். கையில் அன்றைய செய்தித்தாள். தெருக்கோடி வரையில்லை.... கடைவரைக்கும் போய் வந்திருக்கிறார். இரண்டு கி.மீ. இருக்குமே!

"நீங்க ஏன் இப்படி தொல்லைப் படுத்தறீங்க? தெருக்கோடி வரைக்குமே நடந்து வர அரைமணிக்கு மேல ஆகுது... கடைவரைக்கும் நடந்து போய் வந்திருக்கீங்க... நான் தான் பேப்பர் வாங்கி வர்றேன்னு சொல்லியிருக்கேனே...."

"சரிடா... ஏதோ போகணும்னு தோணிச்சு... போய் வந்தேன். விடு, விடு."

"எப்படி விடறது? உங்களுக்குத்தான் உயிர் போற மூட்டுவலி... இரண்டு வேளையும் நடக்கலைன்னா என்ன? நடக்கறப்போ எங்கேயாவது விழுந்து வைச்சா என்ன செய்யறது... அப்புறம் மறுபடி ஆஸ்பத்திரி, அது இதுன்னு...." என்று கடிந்து கொண்டேன்.

அத்தையும் மனைவியும் குறுக்கிட்டு, அவர்கள் பங்குக்கு எதையோ சொல்லி என்னைச் சமாதானப் படுத்திவிட்டுப் போனார்கள்.

"இன்னிக்கு என்ன முக்கிய நியூஸ்?" என்றேன், பேச்சை திசைமாற்ற நினைத்து.

"பி.எம். அமெரிக்கா போய் வந்ததைப் பத்தி நிறைய போட்டிருக்கான்."

"அப்படியா?" என்றவாறு நானும் சில பக்கங்களைப புரட்ட ஆரம்பித்தேன். குழந்தையை ஒரு பக்கமாக விட்டிருந்தேன்.

"டேய், டேய்... அங்க பாருடா... அவன் நடக்கறான்!" அப்பா கூவினார்.

குழந்தை சோபாவை விட்டு நகர்ந்திருந்தான். இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு ஒரு அடி... இரண்டு... மூன்று.

ஸ்ரீ கந்தசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990
பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை- 600 002.
கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569



பிக்சட் டிபாசிட்

46நாள்	3மாதம்	6மாதம்	ஆண்டு	2ஆண்டு	3ஆண்டு	4ஆண்டு	5ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21%


5 வருடங்கள்
ரூ.50,000/-
அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும் தொகை
ரூ. 25,000	60 மாதம்	ரூ. 70,000

சொத்துக்கள் மீது கடன்

- ❑ வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- ❑ மாத வட்டி ரூ.1.85 மட்டுமே
- ❑ விரைந்த சேவை.
- ❑ சென்னை மாநகராட்சி இருக்க வேண்டும்.



நகைக்கடன்

- ❑ குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- ❑ 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- ❑ R.D. கட்டத் தேவையில்லை
- ❑ எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



பென்ஷனர் நலத்திட்டம்

20%P.a ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேர்மன்:
P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
ஸ்ரீகந்தக்கோட்டம்,
சென்னை-600 003.
ஆலோசகர்
பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிட்.



இயக்குநர்கள் குழு
R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

H.O. Friday Holiday — பங்குதாரர்களுக்கு மட்டும் — B.O. Tuesday Holiday



இதை சில்ட்ரன்ஸ் காலேஜ் அண்ட் கேரியர் ஃபண்ட் மூலம் உறுதி செய்திடுவீர்

உங்கள் குழந்தையின் கல்விக்கான செலவுகள் வளர்ந்து வருகின்றன. யூடிஐ வழங்கும் சில்ட்ரன்ஸ் காலேஜ் அண்ட் கேரியர் ஃபண்ட் உங்கள் குழந்தை தொழில் வல்லுநராவதற்கான கனவை நனவாக்க உதவுகிறது.

சிறப்பு அம்சங்கள்

• ஒரு ஓப்பன்-எண்டட் திட்டம் • 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான திட்டம். • ஒவ்வொரு யூனிட்டும் ரூ. 10, குறைந்தபட்ச முதலீடு ரூ. 2000, மற்றும் அதற்கு மேல் ரூ. 1000-ன் மடங்கில். • ஃபண்டில் ஏற்படும் வளர்ச்சி போனஸ் யூனிட்களாக அதற்குரிய காலவரையில் சேர்க்கப்படும். • ஒவ்வொரு ஆண்டும் இருமுறை பகுதியளவு பணத்தைத் திருப்பி எடுத்தல் அனுமதிக்கப்படும் — 18 வயதில் 50%ம் பிறகு ஒவ்வொரு ஆண்டும் அதோடு 10% கூடுதலாக 23 வயதுவரை. • ஒன்றுவிட்ட அடுத்த குழந்தை நியமன வசதி.

அனைத்து மியூச்சுவல் ஃபண்டு மற்றும் செக்யூரிடி முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்க்கிற்கு உட்பட்டவை. செக்யூரிடி மார்க்கெட்டினை பாதிக்கும் காரணங்களால் என்ஏவி திட்டங்களின் மதிப்பு வளர்ச்சி அடையலாம் அல்லது குறையலாம். கடந்தகால செயலாற்றல் எதிர்கால விளைவுகளைக் குறிப்பிடுபவை அல்ல. சில்ட்ரன்ஸ் காலேஜ் அண்ட் கேரியர் ஃபண்ட் திட்டத்தின் பெயரே தவிர திட்டத்தின் தரம், அதன் எதிர்கால ஆதாயம் அல்லது வருவாயைக் குறிப்பிடுபவை அல்ல. முதலீடு செய்யும் முன் ஆஃபர் பத்திரத்தை தயவு செய்து படிக்குமாறும் கோரப்படுகிறார்கள்.


CHILDREN'S COLLEGE AND CAREER FUND
UNIT PLAN-93

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் ஒளிமயமான எதிர்காலத்திற்காக.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.
கிளை அலுவலகங்கள்: • சென்னை. போன்; 517101, 517190 • மதுரை. போன்: 38186 • திருச்சி. போன்: 27060. • கோயம்புத்தூர். போன்: 214973.

UTI-134/94 TM B

ஊரையே சிரிக்க வைத்த வியாபாரி!



கிராமத்தை விட்டுத் தள்ளியிருக்கும் பருத்திக் காட்டில், முத்தம்மா என்கிற பெண்மணி தனியாகப் பருத்தி எடுத்துக் கொண்டிருந்தாள். காதில், கழுத்தில் என்று ஏராள நகைகள். அந்த வழியாகச் சைக்கிளில் சென்ற அலுமினியப் பாத்திர வியாபாரி முத்தம்மாவின் நகைகளைப் பார்த்ததும் சபலம் வந்து விட்டது. கத்தியைக் காட்டி மிரட்டி அனைத்தையும் கழற்றி வாங்கிக் கொண்டான். நகைகள் கிடைத்த சந்தோஷத்தில் சைக்கிளையும் பாத்திரத்தையும் அங்கேயே விட்டுவிட்டுச் சென்று விட்டான். முத்தம்மா, பாத்திரங்களோடு சைக்கிளைத் தள்ளிக் கொண்டு ஊருக்குள் வந்து, "ஐம்பது ரூபாய் கூட மதிப்பில்லாத எனது கவரிங் நகைகளை மிரட்டி வாங்கிக் கொண்டு, ஆயிரம் ரூபாய்க்கு மேலான சைக்கிளையும் பாத்திரங்களையும் விட்டு விட்டுச் சென்று விட்டான்!" என்று நடந்ததைக் கூற, கிராமமே (ரெட்டியபட்டி, காமராஜர் மாவட்டம்) சிரித்தது!

சென்னை - 71, பி.பாஸ்கர்.

சின்னக் கால்கள் தடுமாறின. உடல் அவனை உந்தித்தள்ளியது. முன்னால் சாய்ந்துவிடுவானோ என்று நான் எழுந்தேன்; அவன் விழுவதற்குள் அள்ள நினைத்தேன்.....

அப்பா என்னைத் தடுத்தார். "குழந்தையை நடக்க விடு... இன்னிக்குத்தான் அவன் முதல் தடவையா நடக்கப் பார்க்கறான்....."

என் மனைவியைக் கூவி அழைத்தேன். கைப்பிடித்துணியில் கையைத் துடைத்தவாறு அவள் வந்து நின்றாள். அதற்குள் அத்தையும் வந்து சேர்ந்தாள்.

பதினோரு மாதக் குழந்தை, தான் நடப்பதைப் பார்த்து ஆரவாரம் செய்யும் எங்களைக் கண்டு மேலும் உற்சாகத்துடன் நடந்தது - அறையின் ஒரு பக்கத்திலிருந்து நான் இருந்த மறுபக்கத்துக்கு வந்ததும் என் மேல் சாய்ந்தது. அவனை எடுத்து அணைத்துக் கொண்டு முத்த மழை பொழிந்தேன். அவனுடைய அம்மாவும்தான். பிறகு அத்தை, தாத்தா என்று மாறி மாறி அவனை அணைத்துக் கொண்டார்கள். அவன் திமிறிக் கொண்டு கீழே இறங்கினான். மீண்டும் நடக்க ஆரம்பித்தான். சில முறைகள் கீழே விழுந்தான்; விழுந்த போது எங்களைப் பார்த்தான். நாங்கள் உற்சாகமூட்டினோம். எழுந்து நடந்தான்.

'நடப்பதற்கென்ன இவ்வளவு ஆர்வம்? நடக்க ஆரம்பித்தபின் எவ்வளவோ வருடங்கள் நடக்கப் போகிறானே...' என்று நினைத்த நான் தற்செயலாக அப்பாவைப் பார்த்தேன்.

அவர் கண்கள் பனித்திருந்தன. நான் திடுக்கிட்டேன். அவர் அருகில் போய், "என்னப்பா... ஏன் இப்படி?"

"ஒண்ணுமில்லடா... ஏதோ மனசுலே தோணிச்சு... அதான்."

"நான் கோவிச்சுகிட்டேன்னு வருத்தமா?"

"போடா பைத்தியம்... நீ எதுக்காகக் கோவிச்சுகிட்டேன்னு எனக்குத் தெரியாதா?"

"பின்னே? இப்ப எதுக்குக் கண் கலங்குது?"

"அது புரிஞ்சா நீ இனிமே என்னை கோவிச்சுக்கவே மாட்டே."

"சொல்லுங்கப்பா....."

"உன் குழந்தை நடக்கறப்போ அவன் குட்டி முகத்துலே எவ்வளவு பெருமை தெரிஞ்சுது, பாத்தியா? அவனுக்குப் புரியுமா என்ன? இன்னும் எத்தனையோ வருஷம் அவன் நடந்து, ஆடி, ஓடி வாழ்க்கை நடத்தப் போறான்னு? ஆனால் என் வயசை எட்டற போது என்ன ஆகும்னு யாருக்குத் தெரியும்? இரண்டடி நடக்கவே தடுமாறிப் போறேன். குழந்தை முதல் அடி நடக்கறப்போ தடுமாறுதே அதே மாதிரி நான் - எண்பத்தாறு வயசுலே தடுமாறி நடக்கறேன். குழந்தைக்கு மனசிலே இருக்கிற அதே பெருமைதான் எனக்கும் - என்னாலேயும் நடக்க முடியுதேன்னு ஒரு பெருமை. அது ஒண்ணுதான்டா என்னை இன்னும் உசிரோட வைச்சிருக்கு. இது புரியலையா உனக்கு?"

நான் அசையாமல் நின்றேன். எனக்கு எரிச்சல் ஊட்ட அவர் நடக்கவில்லை. ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் இருக்கும் சாதாரண உள்ளுணர்வுதான் அவருடைய நடைக்குக் காரணம். வாழ்க்கையில் இருக்கும் பிடிப்பின் செயல்களில் ஒன்றுதான் இதுவோ.....?

"அப்பா, சாயங்காலம் நீங்க நடக்கறப்போ நானும் உங்களுக்குத் துணையா வரட்டுமா?" என்றேன்.

"உன் குழந்தை தடுமாறி விழுந்த போது நீ பிடிச்சிக்கிட்டியே அது போல நான் எங்கேயாவது விழுந்தா என்னைப் பிடிக்கவா...?" என்று சிரித்தார் அப்பா.

நானும் சிரித்தேன். என் மனத்தில் இப்போது தெளிவிருந்தது.



• குக்கிராமம் (?)



• நஸீமா : கல்லூரிக்குச் சென்ற முதல் பெண்...

டாலர் கிராமம்!

இராமநாதபுரம் மாவட்டம்- பளிச்சென்று நினைவுக்கு வருவது வறட்சி + வறுமை.

'அதுதான் இல்லை' என்று அடித்துச் சொல்கிற மாதிரி ஒரு வித்தியாச கடலோரக் குக்கிராமம்.

மொத்தம் சுமார் இருநூறு முஸ்லீம் குடும்பங்கள். சராசரி, வீட்டுக்கு இரண்டு பேர் வெளிநாட்டில். (பெரும்பாலும் சிங்கப்பூர்)

குடிசைகளை விரல் விட்டு எண்ணி விடலாம். வறுமைக் கோட்டுக்குக் கீழ் - லேசர் கண்கொண்டு கணக்கெடுத்தால் ஒன்றிரண்டு தேறலாம்.

'மிட்டாய்'ப் பருவ விடலைகளின் கையில் வீடியோ கேசட்டும் நூறு ரூபாய் நோட்டுப் புழக்கமும் சர்வ அலட்சியம்.

இந்த மாவட்டத்துக்குச் சம்பந்தமே இல்லாத ருசியான வளமான தண்ணீர்.

போதும்... போதும். ஊரைச் சொல்லுங்கள் என்கிறீர்களா?

டி. மாரியூர்!

சாயல்குடியிலிருந்து தென்கிழக்கு திசையில் இரண்டு ரூபாய் டிக்கெட்.

போஷாக்கான இந்த ஊரின் ஐம்பது தாண்டு பின்நகர்ந்த மலரும் நினைவுகள் கசப்பானவை.

● மருந்துக்குக் கூட காரை வீடே இல்லாத கூரை வீடுகள்.

● கடல் தொழில் மூலம் கிடைக்கும் மிகக் குறைந்த வருவாயில் கால் வயிற்றுக் கஞ்சி.

● மற்ற கிராமத்தாரின் 'ஐயோ பாவம்' பார்வை.

● 'பொழப்புக்கு வேற வழியப் பாருங்க பாவா! இங்க இருந்தா நம்ம பாடு திண்டாட்டந்தான்.'

இது நேற்று.

இன்று?

எல்லாம் தலைகீழாய் மாறியிருக்கிறது. 'டாலர் புரட்சி' நிகழ்ந்திருக்கிறது.

"மாமா உங்க பேரு?"

"கெண்டார்... வயசு 64."

"என்ன... கெண்டாரா? முஸ்லீம் பெயர் மாதிரி தெரியலியே..."

சிரிக்கிறார்.

"அது ஒரு கதை... மலேசியாவில் நான் வேலை பார்த்த போது என் மேலதிகாரியால, 'சிக்கந்தர்' என்ற பேரை உச்சரிக்க முடியல..! சிக்கந்தர் - ஸிகண்டா - ஸ்கண்டா ராகி கடைசியில் கெண்டாராக நிலைத்து விட்டது!"

"வேலை தேடி வெளிநாட்டுக்குப் போறது இங்க எப்போ ஆரம்பிச்சிது?"

"அம்பது வருஷத்துக்கு முன்னால! வெளிநாடுன்னுதான் பேரு. நாங்க அங்க பட்டிருக்கிற கஷ்டம்... அப்பப்பா சொல்லி முடியாது."

"அப்படி என்ன வேலை?"

"கப்பல்லதான்! உழைப்புக்கு ஏத்த கூலி கெடையாது."

"அப்ப ஏன் போனீங்க?"

"அந்த வருமானத்துக்குக் கூட இங்க வழியில்லையே. எப்படியோ இங்கிருந்து ஓடினா போதும்கிற மோசமான நிலைமை!"

"எந்த வயசுல நீங்க கப்பல் ஏறினீங்க?"

''பதினைஞ்சு வயசு...! மலேசியா, சிலோன்னு போனாலும் சிங்கப்பூருலதான் ரொம்ப வருஷம் இருந்தேன். ஆரம்பத்துல நாங்க பட்ட சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் கடந்த பத்து வருஷமாத்தான் ஓரளவு பலன் கிடைச்சிருக்கு." -பெருமிதம் முகத்தில் பொங்குகிறது.

கெண்டாரின் மூன்று பையன்களும் வெளிநாட்டில் வளமாய் இருக்கிறார்கள். யார் கையையும் இவர் எதிர்பாராமல் மனைவியுடன் கடந்த கால அனுபவங்களை ஆனந்தமாய் அசைபோட்டு, அமைதியாய் வாழ்கிறார். இங்கே இன்னும் பல கெண்டார்கள் முதுமையின் பளு தெரியாமல் முகம் மலர்ந்து முடிவுரை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

கிராமத்துக்குப் பொருந்தாத அட்டகாசமான வீடுகள்...

ஊரை ஒட்டிய பனங்காடு சமச் சீராக்கப்பட்டு, புதிய வீடுகள் வேகவேகமாய் வளர்ந்து வருகின்றன.

வர்ணம் தீட்டுவதற்கு மட்டும் கணிசமான தொகையைச் செலவழிக்கிறார்கள். கட்டட வேலை செய்யும் பணியாளர்களுக்கு சம்பளத்தோடு, சாப்பாடும் ஆக்கிப் போடுவது உண்டு.

பெரிய பெரிய நகரங்களில் உயர்தர பங்களாவில் என்னென்ன நுகர்பொருட்கள் இருக்கிறதோ அத்தனையும் இங்கே பிரசன்னம்.

கணவர் வெளிநாட்டில் இருப்பதால் குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் பெண்களே கவனிக்கிறார்கள்.

மெஜாரிட்டி கைநாட்டு கேஸ்தான்... ஆனாலும் வங்கியில் கணக்கு வைப்பது, வீட்டுக்குத் தேவையான பொருட்களை கொள்முதல் செய்வது, சிங்கப்பூருக்குத் தன்னந்தனியாகவே அடிக்கடி சென்று வருவது போன்ற காரியங்களில், படித்த நகரப் பெண்மணிகளே இவர்களிடம் படிக்க வேண்டும்.

இங்கு செயல்படும் அரசுடைமை வங்கியான பாண்டியன் கிராம பேங்க் மானேஜர் தாமஸ் மெர்வின் சொல்கிறார்:

''டி. மாரியூரைப் பொறுத்தவரை பெரும்பாலும் பெண்கள்தான் எங்கள் வங்கியின் வாடிக்



• கெண்டார்



• முத்து முகம்மது

கையாளர்கள். 'படிப்பறிவு இல்லை' என்ற தாழ்வுமனப்பான்மை சிறிதுமின்றி தெளிவாக, தைரியமாகப் பேசுவார்கள். நகைக் கடனுக்கு வரும் போது, கைரேகை போடும் மாமி கூட, 'AJLல்ல (Agri Jewel Loan - குறைந்தவட்டி) போட்டுத் தாங்க மாமா'ன்னு சொல்வாங்க! இன்னொரு விஷயம் : கணவர் வெளிநாட்டில் கஷ்டப்பட்டு சம்பாதித்து அனுப்பி வைக்கிற பணத்தை வீண் விரயம் செய்யாம சேமிக்கணும்கிற எண்ணம் எல்லாப் பெண்களிடையேயும் இருக்கு."

ஆனால், இங்குள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் சக்கரபாணியோ பாசத்துடன் பெண்கள் மீது ஆவேசமாய்க் குற்றம் சுமத்துகிறார்.

"குழந்தைகளை எப்படி வளர்க்கணும்னே இவங்களுக்குத் தெரியலை. ஆரம்ப வகுப்பு படிக்கிற பிள்ளைக்கு பாக்கெட் மணியா தினசரி பத்து, இருபதுன்னு தாராளமா கொடுக்கிறாங்க. இதனால பிள்ளைங்களுக்கு பணத்தோட அருமை தெரியாம போவுது. படிப்புக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது இல்லே!

"ஒரு சம்பவம் சொல்றேன். என்கிட்டே



●● தலையால் நடந்தான், குத்தப்பாஞ்சான், இரண்டும் சொல்லான், ஊர் மேல் அழகியான், பத்தினிப் பாறை, அழவந்தான் குளம், எப்போதும் வென்றான், இடிந்தகரை, சாத்தான் குளம், காவல் கிணறு, கத்தமல்லி, குருவிகுளம் இவையெல்லாம் என்ன என்கிறீர்களா? நெல்லை மாவட்டத்திலுள்ள சில கிராமங்களின் பெயர்கள்தான்!

திருநெல்வேலி - 1. எஸ். முகம்மது யூசுப்

படிக்கிற மாணவன் வெளிய வச்சி சிகரெட் பிடிக்கிறதை ஒருநாள் நான் பார்த்துட்டேன். கிளாஸ்ல அவனை கண்டிச்சேன். அவ்வளவுதான்! ஸ்கூலுக்கு முழுக்குப் போட்டுட்டான். இப்போ என் முகத்துக்கு நேரா புகைய விட்டுட்டு, 'ஐ.ஏ.எஸ். கலெக்டரை விட நான் அதிகமா சம்பாதிப்பேன். எனக்கு எதுக்குப் படிப்புன்'னு ஜாடையில சொல்றான்! இதுக்குக் காரணம் பெத்தவங்க. குறிப்பா தாய் காட்டுற பாமரத்தனமான செல்லம். நீண்ட இடைவெளியில வந்து போகிற தகப்பனாருக்கும் பையனைக் கண்டிக்கிறதுக்கு மனசு வரது இல்லே. இந்த நிலை மாறினா இந்த ஊரு எதிர்காலத்துல ஒரு மாதிரி கிராமமா நிச்சயமா பேரெடுக்கும்!"

பொருளாதார வளர்ச்சி ஜெட் வேகம் என்றால் கல்வி வளர்ச்சி ஆமை வேகம்தான் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

பாஸ்போர்ட் எடுக்கத் தேவையான பிறந்த நாள் சான்றிதழுக்காகத்தான் பள்ளிக்குச் செல்கிறோம் என்ற உணர்வே பெரும்பாலான மாணவர்களிடம் மேலோங்கி இருக்கிறது.

மாணவிகள் நிலையோ, 'வீட்டில் சும்மா இருந்தால் நேரம் போகாதே' என்பதற்காகத்தான் வகுப்புக்கு வருகை. பருவமெய்திய தினத்திலிருந்து பள்ளிக்கு குட் பை!

அத்தி பூத்தாற்போல் இந்த ஊரில் ஒரே ஒரு மாணவி - நஸீமா - கல்லூரியில் காலடி எடுத்து வைத்திருக்கிறார். பி.காம். முதலாண்டு.

நீர் வளத்தில், மாரியூர் அதிர்ஷ்டம் செய்திருக்கிறது. "இந்த ஊரைப் போல ருசியான தண்ணீரை ராமநாதபுரம் மாவட்டத்தில் வேற எங்கேயும் பார்க்க முடியாது. பதினைந்து வருஷமா முணுமுணுப்போ, வருத்தமோ இல்லாம குடும்பத்தோட இங்கேயே செட்டில் ஆயிருக்கேன்னா... அதுக்குக் காரணமே இந்த தண்ணீர் வசதிதான்!" என்கிறார் உள்ளூர்வாசியான ஹைஸ்கூல் தமிழ் அய்யா!

சுற்று வட்டாரத்திலுள்ள பதினைந்து கிராமங்களுக்குக் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இங்கிருந்துதான் சப்ளை!

இன்னொரு விஷயத்தையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

வசதி குறைந்தவர் - நிறைந்தவர் என்ற வேறுபாடான பார்வை கிஞ்சித்தும் கிடையாது.

"சாச்சி! பையன் விசாவுக்கு எழுபது ரூபா (70,000) தேவைப்படுது. நாளைக்குக் கட்டியாகணும். உங்களைத்தான் நம்பி இருக்கேன்!"

"அதுக்கென்ன ஜிக்கி! லட்ச ரூவா பேங்கு ஃபுறா (டெபாசிட் பத்திரம்) இருக்கு. அதுல லோன் போட்டுத் தாரேன். பணம் வந்ததும் மீட்டுக் கொடேன்!"

- இந்த மாதிரி அதிநம்பிக்கையான கொடுக்கல் - வாங்கல் இங்கே சர்வ சாதாரணம்.

ராணுவ ஒழுங்கில் இயங்கும் உள்ளூர் ஜமாத்தின் தலைவர் முத்து முகம்மதுவை இறுதியாகச் சந்திக்கிறோம்.

"இங்கேருந்து சிங்கப்பூர் போறவங்க, அங்க என்ன வேலை பாக்குறாங்க?"

"பெரும்பாலும் புரோட்டா தட்டுறாங்க. சில பேரு புரோட்டா ஸ்டால் சொந்தமா நடத்துறாங்க. சில பேரு துறைமுகத்துல வேலை பாக்குறாங்க."

"பொருளாதாரத்துல உயர்ந்த அளவுக்குக் கல்வித் துறையில வளரலியே... ஏன்?"

"அதுதானே எங்களோட பரிதாப நிலைமை! தகப்பனோட நேரடிக் கவனம் இருந்தாத்தானே சார் பிள்ளைங்க ஒழுங்கா படிக்கும்! ஒழுங்கா வளரும்" - சொல்லும் போது சோகம் அவர் முகத்தில் பொங்குகிறது.

"சமுதாயப் பொறுப்புள்ள உங்க ஜமாத் மூலமா கட்டாயப் படிப்புக்கு நடவடிக்கை எடுக்கலாமே?"

"அப்படி எடுத்தால் அவங்க தனி மனித உரிமையில ஜமாத் தலையிடுறதா ஆயிடும். தங்கள் பிள்ளைங்க நல்லா படிக்கணும்கிற விழிப்புணர்வு எங்க பெண்கள்ட இப்போ கொஞ்சம் கொஞ்சமா வந்திட்டிருக்கு."

"பெண்கள் பருவத்துக்கு வந்தவுடன் பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விடுகிறார்களாமே. இது ஜமாத் கட்டளையா?"

"இல்லவே இல்லை... இங்க அப்படி ஒரு வழக்கம் ரொம்ப நாளா இருந்திட்டிருக்கு. காலப்போக்கில் இது நிச்சயம் மாறும்!" நம்பிக்கையுடன் பேசுகிறார் டாலர் கிராமத் தலைவர்!

— நெல்லை குர்லோன்

படங்கள் : குமரன் ஸ்டுடியோ, சாயல்குடி.

Kartik Fine Arts (Regd.)

39 Bheemanna Garden Street, Madras - 600 018.
Phone: 4997788

wishes the members, artistes and patrons

A HAPPY AND PROSPEROUS NEW YEAR

and cordially invite you with your family and friends
for the inauguration of 20th **YEAR DANCE FESTIVAL - '95**
at 6.05 p.m. on Thursday, the 5th Jan. '95
at **Bharathiya Vidya Bhavan,** Mylapore, Madras-4.



Sri C. Subramaniam
former Governor of Maharashtra

Presides and Confers the title
"NADANA MAMANI" நடன மாமணி
(Shriram Award of Excellence*)

on Smt. **Revathi Ramachandran**

Sri **H. Krishnamurthi**
President & Whole Time Director
ATV Petrochem, New Delhi
inaugurates

Dr. **Balamurali Krishna**
has consented to unveil the portrait of
Late S.K. Rajarathnam

Sri **C. Ramachandran,** IAS.,
Principal Secretary to Govt. of Tamilnadu,Industries Dept.
will felicitate

(*The Award carries a purse of Rs. 10,000/-, A Scroll, a Golden Medallion)

7-15 p.m. Bharathanatyam by
Ms **Vidya (Subramanian) Sridhar**
(Disciple of Late S.K. Rajarathnam)

A.V.S. RAJA President	T.V. VENKATRAMAN, IAS (Retd.) Chairman Art Festival Committee	R. RAJAGOPAL M.R. KRISHNAMURTHY Secretaries

11. பொன்னனின் சந்தேகம்

பொன்னி ஆற்றின் வெள்ளத்தின் மீது மற்றொரு நாள் பால சூரியனின் பொற் கிரணங்கள் படிய, நதிப் பிரவாகமானது தங்கம் உருகி வெள்ளமாய்ப் பெருகுவது போல காட்சி தந்தது. அந்த பிரவாகத்தைக் குறுக்கே கிழித்துக் கொண்டும், வைரம், வைடூரியம் முதலிய நவரத்தினங்களை வாரித் தெளித்துக் கொண்டும், பொன்னனுடைய படகு தோணித் துறையிலிருந்து கிளம்பி, வசந்த மாளிகையை நோக்கிச் செல்லலாயிற்று. படகில் ஜடா மகுடதாரியான சிவனடியார் வீற்றிருந்தார்.

பார்த்திபன் கனவு

கரையில் பொன்னனுடைய மனைவி நின்று, படகு போகும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நதியில் படகு போய்க் கொண்டிருந்த போது, பொன்னனுக்கும் சிவனடியாருக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

"பொன்னா! கடைசியில் இளவரசருடன் எவ்வளவு பேர்தான் சேர்ந்தார்கள்?" என்று சிவனடியார் கேட்டார்.

"அந்த அவமானத்தை ஏன் கேட்கிறீர்கள், சுவாமி! ஆகா! அந்தக் கடைசி நேரத்தில் மகாராணிக்குச் செய்தி சொல்லும்படி மட்டும் இளவரசர் எனக்குக் கட்டளையிடாமற் போயிருந்தால்....."

"என்ன செய்து விட்டிருப்பாய், பொன்னா? பல்லவ சைன்யத்தை நீ ஒருவனாகவே துவம்சம் செய்திருப்பாயோ?"

"ஆமாம், ஆமாம். நீங்கள் என்னைப் பரிகாசம் செய்ய வேண்டியதுதான். நானும் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான். இந்த உயிரை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறேனல்லவா? ஆனால், சுவாமி! என்னத்துக்காக நான் உயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன் தெரியுமா? மகாராணியின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு உடம்பைச் சுமக்கிறேன்...."

"மகாராணியின் வார்த்தைக்காக மட்டுந்தானா பொன்னா? நன்றாக யோசித்துப் பார், வள்ளிக்காகக் கொஞ்சங்கூட இல்லையா?"

"வள்ளி அப்படிப்பட்டவள் இல்லை, சுவாமி! எப்படியாவது உயிரைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று நினைக்கிறவள் அவள் இல்லை. வீரபத்திர ஆச்சாரியின் பேத்தி அல்லவா வள்ளி? ஆகா! அந்தக் கிழவனின் வீரத்தைத்தான் என்னவென்று சொல்வேன்!"

"வீரபத்திர ஆச்சாரி இதில் எப்படி வந்து சேர்ந்தான், பொன்னா?"

"கிழவனார் சண்டை போடும் உத்தேசத்துடனேயே வரவில்லை. என்ன நடக்கிறதென்று தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், அந்தச் சமயத்தில் இளவரசர் அநாதை போல் நிற்பதைப் பார்த்ததும் அவருக்கு ஆவேசம் வந்து விட்டது. இளவரசருடைய கட்சியில் நின்று போரிடுவதற்கு ஆயிரம் பதினாயிரம் வீரர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். உண்மையில் வந்து சேர்ந்தவர்கள் என்னைத் தவிர ஐந்தே பேர்தான். அவர்கள் கிராமங்களிலிருந்து வந்த குடியானவர்கள். திடீரென்று நாலா புறத்திலிருந்தும் வீர கோஷத்துடன் வந்த பல்லவ வீரர்களைப் பார்த்ததும், அந்தக் குடியானவர்கள் கையிலிருந்த கத்திகளைக் கீழே போட்டுவிட்டுத் திகைத்துப் போய் நின்றார்கள். இதையெல்

லாம் பார்த்தார் வீரபத்திர ஆச்சாரி. ஒரு பெரிய கர்ஜனை செய்து கொண்டு, கண் மூடித் திறக்கும் நேரத்தில் இளவரசர் நின்ற இடத்துக்கு வந்துவிட்டார். கீழே கிடந்த கத்திகளில் ஒன்றை எடுத்துச் சுழற்றத் தொடங்கினார். 'வீர வேல்! வெற்றி வேல்! விக்கிரம சோழ மகாராஜா வாழ்க!' என்று அவர் போட்ட சத்தம் நெடுந்தூரத்திற்கு எதிரொலி செய்தது. அடுத்த கணத்தில் பல்லவ வீரர்கள் வந்து எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். ஆகா! அப்போது நடந்த ஆச்சரியத்தை நான் என்னவென்று சொல்வேன், சுவாமி? கிழவனாரின் கைகளில்தான் அவ்வளவு பலம் எப்படி வந்ததோ, தெரியவில்லை! கொல்லுப் பட்டறையில் சம்மட்டி அடித்த கையல்லவா? வாளை வீசிக் கொண்டு இடசாரி வலசாரியாகச் சுற்றிச் சுற்றி வந்தார். தொப்புத் தொப்பென்று பல்லவ வீரர்கள் மண் மேல் சாய்ந்தார்கள். ஏழெட்டு வீரர்களை யமலோகத்துக்கு அனுப்பிவிட்டுக் கடைசியாக அவரும் விழுந்து விட்டார். இதையெல்லாம் தூரத்தில் நின்று தளபதி அச்சுத வர்மர் பார்த்துக் கொண்டிருந்தாராம். கிழவனாரின் வீரத்தைக் கண்டு அவர் பிரமித்துப் போய் விட்டாராம். அதனாலேதான் அந்தத் தீரக் கிழவருடைய உடலைச் சகல மரியாதைகளுடன் எடுத்துப் போய்த் தகனம் செய்யும்படியாகக் கட்டளை விட்டாராம்."

"அதில் ஆச்சரியம் என்ன பொன்னா! வள்ளியின் பாட்டனுடைய வீர மரணத்தைக் கேட்டு உலக வாழ்க்கையை வெறுத்த எனக்குக்கூட உடம்பு சிலிர்க்கிறது. ஒரு தேசமானது எவ்வளவுதான் எல்லா விதங்களிலும் தாழ்வு அடைந்திருக்கட்டும்; இப்படிப் பட்ட ஒரு வீரபுருஷனுக்குப் பிறப்பளித்திருக்கும்போது, அந்தத் தேசத்துக்கு இன்னும் ஜீவசக்தி இருக்கிறது என்று சொல்வதில் தடை என்ன? சோழநாடு நிச்சயம் மேன்மையடையப் போகிறது என்ற நம்பிக்கை எனக்கு இப்போது உண்டாகிறது" என்றார் சிவனடியார்.

சற்றுப் பொறுத்து, "அப்புறம் என்ன நடந்தது?" என்று கேட்டார்.

"அப்புறம் என்ன? இளவரசரும் நானும் கிழவருடைய ஆச்சரியமான பராக்கிரமச் செயல்களைப் பார்த்துக் கொண்டே திகைத்து நின்றுவிட்டோம். அவர் விழுந்ததும் நாங்கள் இருவரும் ஏக காலத்தில் 'ஆகா' என்று கதறிக் கொண்டு அவர் விழுந்த திசையை நோக்கி ஓடினோம். உடனே, இளவரசரை அநேக பல்லவ வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள். நான் வெறி கொண்டவனைப் போல் என் கையிலிருந்த வாளை வீசிப் போரிட ஆரம்பித்தேன். அப்போது, "நிறுத்து பொன்னா!" என்று இளவரசரின் குரல் கேட்டது. குரல் கேட்ட பக்கம் பார்த்தேன். இளவரசரைச் சங்கிலியால் பிணைத்திருந்தார்கள். அவர் 'இனிமேல் சண்டையிடுவதில் பிரயோஜனமில்லை. பொன்னா! எனக்காக நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். மகாராணியிடம் போய் நடந்ததைச் சொல்ல வேண்டும். மேற் கொண்டு என்ன நடந்த போதிலும், என் தந்தையின் பெயருக்கு அவமானம் வரும்படியான காரியம் மட்டும் செய்யமாட்டேன் என்று நான் சபதம் செய்ததாய்த் தெரியப்படுத்த வேண்டும்' என்றார். எனக்குப் பிரமாதமான ஆத்திரம் வந்தது. 'மகாராஜா! உங்களைப் பகைவர்களிடம் விட்டுவிட்டு நான் போகவா?' என்று கத்திக் கொண்டு, என் வாளை வீசினேன். பின்புறமிருந்து என் மண்டையில் பலமான அடி விழுந்தது. உடனே நினைவு தவறிவிட்டது. அப்புறம் காராக்கிரகத்திலே தான் கண்ணை விழித்தேன்."

"ஓகோ! காராக்கிரகத்தில் வேறு இருந்தாயா? அப்புறம் எப்படி விடுதலை கிடைத்து?"

"மறுநாளே விடுதலை செய்து விட்டார்கள். இளவரசரைத் தவிர மற்றவர்களையெல்லாம் மன்னித்து விட்டு விடும்படி மாமல்ல சக்கரவர்த்தியிடமிருந்து கட்டளை வந்ததாம்" என்றான் பொன்னன்.

"சக்கரவர்த்தி எவ்வளவு நல்லவர் பார்த்தாயா பொன்னா? உங்கள் இளவரசர் எதற்காக இவ்வளவு பிடிவாதம் பிடிக்க வேண்டும்? அதனால்தானே அவரை சக்கரவர்த்தி தேசப்பிரஷ்டம் செய்ய நேர்ந்தது" என்றார் சிவனடியார்.

"ஆமாம்; நரசிம்ம சக்கரவர்த்தி ரொம்ப நல்லவர்தான்; பார்த்திப மகாராஜாவும், விக்கிரம மகாராஜாவுந்தான் பொல்லாதவர்கள்!" என்றான் பொன்னன்.

பிறகு, "நான் சக்கரவர்த்தியைப் பார்த்ததேயில்லை. பார்க்க வேண்டுமென்று ரொம்ப ஆசையாயிருக்கிறது. உறையூருக்கு எப்போதாவது வருவாரா, சுவாமி?" என்றான்.

"ஆமாம்; சீக்கிரத்திலேயே வரப்போகி

நார் என்றுதான் பிரஸ்தாபம். ஏது, பொன்னா! சக்கரவர்த்தியிடம் திடீரென்று உனக்கு அபார பக்தி உண்டாகி விட்டது போல் தெரிகிறதே! சண்டையில் செத்துப் போகவில்லையென்று கவலைப்பட்டாயே! இப்போது பார்த்தாயா? உயிரோடு இருந்த தனால்தானே உனக்குச் சக்கரவர்த்தியைப் பற்றிய உண்மை தெரிந்து அவரிடம் பக்தி உண்டாகியிருக்கிறது!"

"ஆமாம்; சக்கரவர்த்தியிடம் எனக்கு ரொம்ப பக்தி உண்டாகியிருக்கிறது. எனக்கு



மட்டுமில்லை; இதோ என்னுடைய வேலுக்கும் பக்தி உண்டாகியிருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே பொன்னன் படகின் அடியில் கிடந்த வேலை ஒரு கையால் எடுத்தான்.

"இந்த வேலுக்குச் சக்கரவர்த்தியிடம் சொல்ல முடியாத பக்தி; அவருடைய மார்பை எப்போது தழுவப் போகிறோம் என்று தவம் கிடக்கிறது!" என்று சொல்லிப் பொன்னன் சிவனடியாரின் மார்புக்கு நேரே வேலை நீட்டினான்.

சிவனடியார் முகத்தில் அப்போது புன்சிரிப்புத் தவழ்ந்தது. "பொன்னா! நான்தான் சக்கரவர்த்தி என்று எண்ணி விட்டாயா, என்ன?" என்றார்.

பொன்னன் வேலைக் கீழே போட்டான்.

"சுவாமி! சக்கரவர்த்தி எவ்வளவுதான் நல்லவராயிருக்கட்டும்; மகா வீரராயிருக்கட்டும்; தெய்வாம்சம் உடையவராகவே இருக்கட்டும். அவர் எனக்குப் பரம சத்துரு! ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் அவரை நான் நேருக்கு நேர் காண்பேன். அப்போது..." என்று பொன்னன் பல்லை நற நறவென்று கடித்தான்.

சிவனடியார் பேச்சை மாற்ற விரும்பியவராய், "ஏன் பொன்னா! அன்றைய தினம் மாரப்ப பூபதி உங்களுக்கு அருகில் வரவேயில்லையோ?" என்று கேட்டார்.

"அந்தச் சண்டாளன் பேச்சை ஏன் எடுக்கிறீர்கள்? அவன் இளவரசரையும் தூண்டி விட்டுவிட்டு, அச்சுதவர்மரிடம் போய்ச் சகல விவரங்களையும் தெரிவித்து விட்டான். அப்படிப்பட்ட துரோகி அன்றைக்கு ஏன் கிட்ட வரப்போகிறான்? ஆனால், சுவாமி! அவனுடைய வஞ்சகப் பேச்சில் நாங்கள் எல்லாருமே ஏமாந்து போய் விட்டோம். வள்ளி ஒருத்தி மட்டும், 'பூபதி பொல்லாத வஞ்சகன்; அவனை நம்பக் கூடாது' என்று சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் சொன்னதுதான் கடைசியில் சரியாப் போச்சு" என்றான் பொன்னன்.

"வள்ளி ரொம்பவும் புத்திசாலி, பொன்னா! சந்தேகமேயில்லை. அவள் ஒரு பெரிய தளபதியின் மனைவியாயிருக்கத் தகுந்தவள்...."

"என்ன சொன்னீர்கள், சுவாமி?"

"வள்ளி ஒரு பெரிய சேனாதிபதியின் மனைவியாயிருக்கத் தகுந்தவள் என்றேன்."

"நீங்கள் சொன்ன இதே வார்த்தையை இதற்கு முன்னாலும் ஒருவன் சொன்னதுண்டு."

"யார் அது?"

"மாரப்ப பூபதிதான்; அவன் சோழ சேனாதிபதியாயிருந்த காலத்தில் அப்படிச் சொன்னான்."

"ஓகோ!"

"எனக்கு ஒவ்வொரு சமயம் என்ன தோன்றுகிறது, தெரியுமா? தாங்கள் கோபித்துக் கொள்ளாமலிருந்தால் சொல்லுகிறேன்."

"தாராளமாய்ச் சொல்லு, பொன்னா! நான் சந்நியாசி; ஐம்புலன்களையும் அடக்

யிக் காமக் குரோதங்களை வென்றவன்."

"நீங்கள் கூட மாரப்ப பூபதியின் ஆளோ, அவனுடைய தூண்டுதலினால்தான் இப்படி வேஷம் போட்டுக் கொண்டு வஞ்சகம் செய்கிறீர்களோ - என்று தோன்றுகிறது."

சிவனடியார் கலகலவென்று சிரித்து விட்டு, "இதைப் பற்றி வள்ளியின் அபிப்பிராயம் என்ன என்று அவளை எப்போதாவது கேட்டாயா?" என்றார்.

"வள்ளிக்கு உங்களிடம் ஒரே பக்தி. 'நய வஞ்சகனை நம்பி மோசம் போவாய், உத்தம புருஷரைச் சந்தேகிப்பாய்!' என்று என்னை ஏசுகிறாள். மாரப்ப பூபதி இப்படிப்பட்ட பாதகன் என்று தெரிந்த பிறகு அவளுடைய கை ஓங்கிவிட்டது. என்னைப் பரிகாசம் பண்ணிக் கொண்டேயிருக்கிறாள்."

"நான்தான் சொன்னேனே பொன்னா, வள்ளி புத்திசாலி என்று. அவள் புத்தி மதியை எப்போதும் கேளு. வள்ளி தளபதியின் மனைவியாயிருக்கத் தகுந்தவள் என்று நான் சொன்னது மாரப்ப பூபதி சொன்ன மாதிரி அல்ல; நீயும் தளபதியாகத் தகுந்தவன்தான்!"

"ஆமாம் யார் கண்டது? விக்கிரம மகாராஜா சோழ நாட்டின் சிம்மாசனம் ஏறும் போது, ஒருவேளை நான் தளபதியானாலும் ஆவேன்."

"இரண்டும் நடக்கக் கூடியதுதான்."

"ஆகா! இந்தப் பெரிய பாரத பூமியில் எங்கள் இளவரசருக்கு இருக்க இடமில்லையென்று கப்பலில் ஏற்றி அனுப்பிவிட்டாரே, சக்கரவர்த்தி! அவருடைய நெஞ்சு எப்படிப்பட்ட கல் நெஞ்சு! அதைக் காட்டிலும் ஒரே அடியாக உயிரை வாங்கியிருந்தாலும் பாதகமில்லை..."



"நீ சொல்வது தவறு, பொன்னா! உயிர் உள்ளவரையில் எப்படியும் நம்பிக்கைக்கும் இடமுண்டு. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நம்முடைய மனோரதங்கள் நிறைவேறும். நீ வேணுமானால் மகாராணியைக் கேட்டுப் பார். மகன் இந்த மட்டும் உயிரோடு இருக்கிறானே என்று மகாராணிக்குச் சந்தோஷமாய்த்தானிருக்கும்... அதோ மகாராணி போலிருக்கிறதே!" என்று சிவனடியார் வியப்புடன் சொன்னார்.

அப்போது படகு வசந்த மாளிகைத் தீவின் கரைக்குச் சமீபமாக வந்து கொண்டிருந்தது. கரையில் அருள்மொழித் தேவியும் ஒரு தாதியும் வந்து தோணித் துறையின் அருகில் நின்றார்கள். அருள்மொழித் தேவி படகிலிருந்த சிவனடியாரை நோக்கிப் பக்தியுடன் கை கூப்பிக் கொண்டு நிற்பதைப் பொன்னன் பார்த்தான். உடனே சிவனடியாரை நோக்கி, "சுவாமி! ஏதோ நான் தெரியாத்தனமாக உளறிவிட்டேன்; அதையெல்லாம் மன்னிக்க வேண்டும்" என்று உண்மையான பச்சாதாபத்துடனும் பக்தியுடனும் கூறினான்.

12. ராணியின் துயரம்

சிவனடியார் படகிலிருந்து இறங்கியதும் அருள்மொழி அவரை நமஸ்கரித்து விட்டு நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய கண்களில் நீர் ததும்பிற்று.

"சுவாமி! விக்கிரமன் எங்கே?" என்று சோகம் நிறைந்த குரலில் அவள் கதறி விம்மியபோது, சிவனடியாருக்கு மெய் சிலிர்த்தது. பொன்னன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். மரங்களின் மீதிருந்த பறவை இனங்களும் அந்தச் சோகக் குரலைக் கேட்கச் சகிக்காதவை போல் சிறகுகளை அடித்துக் கொண்டு பறந்து சென்றன.

"அருள்மொழி! இது என்ன பைத்தியம்? உன்னுடைய பதி உனக்கு என்ன சொல்லி விட்டுப் போனார்? நீ வீரத் தாயாக இருக்க வேண்டுமென்று அவர் சொன்ன கடைசி வார்த்தையை மறந்துவிட்டாயா? இப்படியும் தைரியத்தை இழக்கலாமா? வா, அரண்மனைக்குப் போய்ச் சாவகாசமாகப் பேசலாம்" என்றார் சிவனடியார்.

மாஞ்சோலைக்கிடையே அமைந்திருந்த அழகிய பாதை வழியாக எல்லாரும் வசந்த மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஒரு காலத்தில் எவ்வளவோ குதூகலமும் கொண்டாட்டமுமாயிருந்த வசந்த மாளிகை இப்போது பொலிவிழந்து சூனியமாகக் காணப்பட்டது. அரண்மனை ஊழியர்களின் முகங்களும் களையின்றிச் சோகம் நிறைந்து தோன்றின.

மாளிகை முன் மண்டபத்திலே புலித்தோல் விரித்திருந்த உயரமான பீடத்தில் சிவனடியார் அமர்ந்தார். அருள்மொழி கீழே வெறுந் தரையில் உட்கார்ந்தாள்.

"அம்மா! உன் மனத்தைக் கலங்க விடக் கூடாது...." என்று சிவனடியார் ஆரம்பித்த போது, அருள்மொழி அவரைத் தடுத்து துக்கம் பொங்கும் குரலில் கூறினாள்:

"ஐயோ! மனத்தைக் கலங்கவிடக் கூடாது என்கிறீர்களே? மனத்தைத்தான் நான் கல்லாகச் செய்து கொண்டு விட்டேனே? என் தேகமல்லவா கலங்குகிறது? குழந்தையை நினைத்தால் வயிறு பகீரென்கிறதே! குடல் எல்லாம் நோகிறதே! நெஞ்சை இறுக்கிப் பிழிவது போல் இருக்கிறதே! நான் என்ன செய்வேன்? - சுவாமி! விக்கிரமனைக் காப்பாற்றுகிறேன் என்று வாக்குக் கொடுத்தீர்களே, அந்த வாக்கை நிறைவேற்றினீர்களா?"

"ஏன் நிறைவேற்றவில்லை, அருள்மொழி? நிறைவேற்றித்தான் இருக்கிறேன். விக்கிரமனுடைய உயிரைக் காப்பாற்றுவதாக உனக்கு வாக்குக் கொடுத்தேன். அவனுடைய உயிரைக் காப்பாற்றித்தான் இருக்கிறேன். விக்கிரமனை வீரமகனாகச் செய்வதாக அவனுடைய தந்தைக்கு வாக்களித்திருந்தேன். அதையும் நிறைவேற்றியே இருக்கிறேன். அம்மா! நீ மட்டும் அன்று காஞ்சியில் பல்லவ சக்கரவர்த்தியின் நீதி சபையில் இருந்திருந்தாயானால், உடல் பூரித்திருப்பாய்! பொய்யாமொழிப் பெருமான்,

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்'

என்று சொன்னது உன் விஷயத்தில் மட்

அருள்வாக்கு

இந்த லோகத்தில், நாம் சரீரத்தில் இருப்பதாகத் தோன்றும் இப்போதே, இந்த சரீரத்தை 'நானல்ல, என்னுடையதல்ல' என்று பண்ணிக் கொள்ள வேண்டும். அப்போது செத்துப் போன பின்தான் வேறு ஏதோ கைலாஸ வைகுண்டாதி லோகங்களுக்குப் போய் மோக்ஷம் அடையலாம் என்று இல்லாமல், இங்கேயே மோக்ஷமாகி விடும். மோக்ஷம் என்றால், எந்தப் பாரமும் இல்லாமல் விடுபட்ட ஸதானந்தம் என்றே அர்த்தம். அப்படி இந்த லோகத்திலேயே சரீரப் பிரக்ஞையை விட்டு, ஆத்மா ராமனாக இருப்பவனைத்தான் ஜீவன் முக்தன் என்பது. வேத வேதாந்தங்களின் பரம தாத்பரியம், ஒருத்தனை



இப்படி ஜீவன் முக்தனாக்குவது தான். கீதையில், பகவான் ப்ராக் சரீர விமோக்ஷணாத் (சரீரத்திலிருந்து உயிர் வெளியே போகிறதற்கு முந்தியே) இந்த லோகத்தில் இருக்கும் போதே இஹைவ-எவன் காம க்ரோத வேகங்களை அடக்கிவிடுகிறானோ அவனே யோகத்தில் நிலைத்து நித்ய ஸுகத்தை அநுபவிக்கிறவன் என்று, இதே கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார். இஹைவ-இஹ-ஏவ- அதாவது இங்கே இந்த பூலோகத்தில் இருக்கிற போதே, இப்படி ஆத்மாவைத் தெரிந்து கொண்டு விட்டால் (அதாவது அநுபவித்து விட்டால்), சரீரம் போனாலும் அது தெரியாது. சரீரம் இருக்கிறபோதேதான் அது தன்னுடையதல்ல என்று போக்கிக் கொண்டாகி விட்டதே! ஆகையால், சாவு என்று ஒன்று வந்து சரீரத்தைப் போக்கடிக்க வேண்டுமா என்ன? சரீரம் (சரீரம் என்கிறபோது மனஸையும் சேர்த்துத் தான் சொல்வதாக அர்த்தம்) தனதல்ல என்றாக்கி விட்டால், அப்புறம் சாவே இல்லை. தனதல்லாத சரீரத்துக்கு வருகிற சாவு தன்னை எப்படிப் பாதிக்கும்? ம்ருத்யுவான சாவு இல்லாத தால், இவன் அமிருதமாகி விடுகிறான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

டும் பொய்யாகப் போகுமா? சக்கரவர்த்தி எவ்வளவோ நல்ல வார்த்தை சொன்னார் விக்கிரமனுக்கு. 'பல்லவ சாம்ராஜ்யத்திற்குள் அடங்கிக் கப்பங் கட்டிக் கொண்டு வருவதாயிருந்தால் உன்னுடைய துரோகத்தை மன்னித்து சோழ நாட்டுக்கும் பட்டங் கட்டுகிறேன்!' என்றார். விக்கிரமன் அணுவளவாவது மனம் சலிக்க வேண்டுமே? மலையைப் போல் அசையாமல் நின்றான். அது மட்டுமா? சக்கரவர்த்தியையே தன்னுடன் சண்டைக்கு அழைத்தான். 'நீர் வீரன் என்பது உண்மையானால், என்னுடன் வாட்போர் செய்ய வாரும்; என்னை ஜெயித்துவிட்டுப் பிறகு கப்பம் கேளும்' என்றான். அவனுடைய கண்களிலேதான் அப்போது எப்படித் தீப்பொறி பறந்தது! அருள்மொழி! அதைப் பார்க்க நான் கொடுத்து வைத்திருந்தேன்; நீதான் அந்த பாக்கியத்தைச் செய்யவில்லை!"

ஆவலினால் விரிந்த கண்களில் கண்ணீர் ததும்ப மேற்கூறிய விவரத்தைக் கேட்டுக் கொண்டிருந்த அருள்மொழி கூறினாள்: "நான் பாக்கியமற்றவள்தான். அதற்கும் சந்தேகமா? பதியைப் போர்க்களத்தில் பலி கொடுத்து விட்டு, இந்த உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன்; மகன் தேசப் பிரஷ்டனாகிக் கண் காணாத தேசத்துக்குப் போன பிறகும் உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன். சுவாமி! பல்லவ சக்கரவர்த்தி உறையூருக்கு வரப்போகிறார் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா? அப்படி வந்தால், அவர் காலில் விழுந்து, 'என்னையும் விக்கிரமனை அனுப்பிய இடத்துக்கே அனுப்பி விடுங்கள்!' என்று வேண்டிக் கொள்ளப் போகிறேன்..."

"என்ன சொன்னாய், அருள்மொழி! அழகுதான்! உன் புருஷனுடைய ஜன்ம சத்ருவின் காலில் விழுந்தா கெஞ்சுவாய்! வீர சொர்க்கத்தில் இருக்கும் பார்த்திப மகாராஜா இதை அறிந்தால் சந்தோஷப்படுவாரா? யோசித்துப் பார்!"

"ஆமாம், அவர் சந்தோஷப்பட மாட்டார்; நானும் அவருடைய சத்ருவிடம் பிச்சை கேட்கப் போகமாட்டேன்! ஏதோ ஆத்திரப்பட்டுச் சொல்லிவிட்டேன். ஆகா! அவர்தான் என்னவெல்லாம் ஆகாசக் கோட்டை கட்டினார்? கன்னியாகுமரியிலிருந்து இமய பர்வதம் வரையில் புலிக் கொடி பறக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாரே! அவருடைய பிள்ளைக்கு இந்தப் பெரிய தேசத்தில் இருக்கவும் இடமில்லாமல் போய்விட்டதே!..."

"பார்த்திப மகாராஜா வேறொரு மனக் கோட்டையும் கட்டவில்லையா, அம்மா? சோழ ராஜ்யம் கடல்களுக்கு அப்பாலுள்ள தேசங்களிலும் பரவ வேண்டுமென்று அவர் ஆசைப்படவில்லையா? இரகசிய சித்திர மண்டபத்தில் அவர் எழுதியிருக்கும் சித்திரங்களைக் கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொள்."

"ஐயோ! அவருடைய ஆசை இம்மாதிரியா நிறைவேற வேண்டும்? விக்கிரமன் இன்று கடல்களுக்கப்பாலுள்ள இராஜ்யங்களைப் பிடிப்பதற்காகப் படையெடுத்தா போயிருக்கிறான்? எந்த காட்டுமிராண்டித் தீவில் கொண்டு போய் அவனை விட்டிருக்கிறார்களோ? காட்டிலும் மலையிலும் எப்படி அலைந்து கஷ்டப்படுகிறானோ? ஏன் என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள், சுவாமி!"

"உன்னை நான் ஒருநாளும் ஏமாற்ற மாட்டேன் அம்மா! உன்னை ஏமாற்றி எனக்கு என்ன காரியம் ஆக வேண்டும்?

உன் மகனுக்கு ஒரு குறையும் வராது என்பது என் நம்பிக்கை. விக்கிரமனுக்கு முன்னால் யாரும் தேசப்பிரஷ்டராகிக் காட்டுக்குப் போனதில்லையா? இராமர் போகவில்லையா? பஞ்சபாண்டவர்கள் போகவில்லையா? விக்கிரமன் கடல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளில் அனுபவிக்கும் கஷ்டங்கள் எல்லாம், அவனுடைய வீர பராக்கிரமங்களை இன்னும் அதிகமாக வளர்க்கும்! திரும்பித் தாய் நாட்டுக்கு அவன் வரும்போது....''

"ஐயோ! அவன் வரவேண்டாம், சுவாமி, வரவேண்டாம். தாய்நாட்டில் காலடி வைத்தால் சிரசாக்கினை என்றுதான் சக்கரவர்த்தி விதித்திருக்கிறாரே? எங்கேயாவது கண்காணாத தேசத்திலாவது அவன் உயிரை வைத்துக் கொண்டிருக்கட்டும்; அதுவே போதும்!" என்றாள் அருள்மொழி.

''ஆனால், அப்படி அவன் வராமல் இருக்க முடியாது, அருள்மொழி! என்றைக்காவது ஒரு நாள் அவன் வந்துதான் தீருவான். தாயின் பாசமும் தாய்நாட்டின் பாசமும் அவனைக் கவர்ந்து இழுக்கும். இந்த இரண்டு பாசங்களைக் காட்டிலும் வலிமை பொருந்திய இன்னொரு பாசமும் சேர்ந்திருக்கிறது. உனக்கு அது தெரிந்திருக்க நியாயமில்லை...'' என்று சொல்லிச் சிவனடியார் நிறுத்தினார்.

"என்ன சொல்லுகிறீர்கள், சுவாமி!"

''ஆமாம்; தாயின் அன்பையும் தாய்நாட்டுப் பற்றையுங் காட்டிலும் பெரியதொரு சக்தியும் அவனைத் திரும்பவும் இத்தேசத்துக்கு வரும்படி இழுக்கும். அது ஒரு இளம் பெண்ணின் கருவிழிகளிலுள்ள காந்த சக்திதான். அம்மா! நான் இன்று பற்றை அறுத்த துறவியானாலும் பூர்வாசிரமத்தில் ஸ்திரீ பிரேமையினால் ஏற்படும் இன்ப துன்பங்களை அறிந்தவன்....''

"இது என்ன, சுவாமி! நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே? விக்கிரமனுக்கும் ஸ்திரீ பிரேமைக்கும் என்ன சம்பந்தம்?" என்று வியப்புடன் கேட்டாள் அருள்மொழி.

சிவனடியார் புன்னகையுடன் கூறினார்:-

"ஒவ்வொரு தாயும் தன் மகனைப் பற்றி இப்படித்தான் வெகு காலம் எண்ணிக் கொண்டிருக்கிறாள். கடைசியில் நேருக்கு நேர் உண்மையைக் காணும் போது திடுக்கிடுகிறாள். நீயாவது முன்னாலேயே தெரிந்து கொள் அம்மா! உன் மகன் விக்கிரமன் காஞ்சி நகரின் வீதியில் ஒரு கன்னியைச் சந்தித்தான். அவனைக் குறுக்கும் நெடுக்குமாய்ச் சங்கிலியால் பிணைத்துக் குதிரை மீது கட்டிக் கொண்டு போன போதுதான் அந்தச் சந்திப்பு ஏற்பட்டது. அந்த நிலையிலேயே அந்தப் பெண்ணும் தன்னுடைய உள்ளத்தை அவனுக்குப் பறிகொடுத்து விட்டாள். இது நான் கேட்டும் ஊகித்தும் அறிந்த விஷயம். ஆனால் நேரில் நானே ஒரு அதிசயத்தைப் பார்த்தேன். மாமல்லபுரத்துக் கடற்கரையில் விக்கிரமனை ஏற்றிச் சென்ற கப்பல் கிளம்பக் கரையோரமாய்ச் செல்ல ஆரம்பித்த சமயத்தில், அந்தப் பெண் காஞ்சியிலிருந்து ஓடோடியும் வந்து சேர்ந்தாள். மறுபடியும் அவர்களுடைய கண்கள் சந்தித்தன; உள்ளங்கள் பேசிக் கொண்டன. காதலும் கனிவும் ததும்பிய அந்தப் பெண்ணின் விசால நயனங்களை விக்கிரமனால் ஒருநாளும் மறக்க முடியாது. இரவிலும், பகலிலும் விழித்திருக்கும் நிலையிலும், தூக்கத்திலே கனவிலும், அந்தப் பெண்ணின் மதிவதனம் அவன் முன்னால் தோன்றிக் கொண்டுதானிருக்கும். எங்கே இருந்து எந்தத் தொழில் செய்தாலும், எத்தகைய இன்ப துன்பங்களை அனுபவித்தாலும் விக்கிரமன் அந்தப் பெண்ணை மறக்க மாட்டான். என்றைக்காவது ஒருநாள் அவளைப் பார்க்கும் ஆசையுடன் அவன் தாய்நாட்டுக்குத் திரும்பி வந்தே தீருவான்."

இத்தனை நேரமும் திகைத்து உட்கார்ந்து கொண்டிருந்த அருள்மொழி, ''ஐயோ! எனக்கு மிஞ்சியிருந்த செல்வமெல்லாம் என் பிள்ளையின் அன்பு ஒன்றுதான், அதற்கும் ஆபத்து வந்துவிட்டதா? அந்தப் பெண் யார் சுவாமி!" என்று ஈனக் குரலில் கேட்டாள்.

''பல்லவச் சக்கரவர்த்தியின் மகள் குந்தவி."

"ஆகா! என் பதியினுடைய பரம சத்துருவின் மகளா? சுவாமி! என்னமோ செய்கிறதே! தலையைச் சுற்றுகிறதே!" என்றாள் அருள்மொழி. அடுத்த கணம் தரையில் மூர்ச்சித்து விழுந்தாள்.

(தொடரும்)



மனைவி : பொங்கல் எப்படி இருக்கிறது?

கணவன் : இன்னும் கொஞ்சம் ஊத்து!

- வீ.பெ. கலைவாணன்







AALURI SAREES

The Shop Exclusively for **Karishma** *Churidars & Sarees*

Introductory Offer with this Cutting 10%





AALURI SAREES

(DEALER OF KARISHMA CHURIDARS & SAREES)

WHOLESALE & RETAIL

4/24, R.K. MUTT ROAD, LUZ BAZAAR,

MYLAPORE, MADRAS - 600 004.

PHONE: 4935791



இந்த விளம்பரத்தை கொண்டு

வருபவர்களுக்கு

[illegible]

10%

Komala Ads

அக்கரைப் பச்சை

சோலை சுந்தரபெருமாள்

"அம்மா! நான் படிச்ச படிப்புக்கு வேல வாங்காத வரைக்கும் கல்யாணம்ங்கிற பேச்ச எடுக்காத..."

மகன் தெடலடியாய்க் கண்டிச்சதும் பெத்தவள் வாய் அடைத்துத்தான் போனாள். இருந்தாலும் அவளால் புலம்பாமல் இருக்க முடியவில்லை.

"பரசு! இனிமேலும் என்னால முடியாதுடா. என்னோட கடமைய செஞ்சிட்டா நான் நிம்மதியா இருந்துடுவேன். யாராவது ஒருத்தி, 'குத்து' சோத்தப் போட்டு வச்சா தின்னுட்டு ஒரு மூலையில கெடப்பேன்..."

"அம்மா! உன்னோட தொண தொணப்ப நிறுத்திக்க. நான் எப்ப செய்யச் சொல்லுறேனோ அப்ப செஞ்சி வை. அதுவரைக்கும் சோறு போட முடிஞ்சா போடு; இல்லன்னா சொல்லிடு. நான் பாத்துக்கிறேன்..."

"...இப்ப என்னாடி அவன் கிட்ட கெஞ்சி கூத்தாடிக்கிட்டு நிக்கற? அன்னிக்கு நான் சொன்னதைக் கேட்டுகிட்டு ஹைஸ்கூலோட நிப்பாட்டிப்புட்டு பெரியவன் ரெண்டு பேரப்போல வயக்கண்ணியிலப் போட்டிருந்தா உனக்கு இந்த நெலம வருமா? இப்படி வெள்ளையும் செல்லையுமாய்ப் போட்டுக்கிட்டு ஊரச்சுத்திக்கிட்டு வரமாட்டான். வயவாய்க் காலப் பாத்துக்கிட்டு வந்திருப்பான். நீதான்டி எல்லாத்துக்கும் காரணம்..."

அப்பா! இது மட்டும்தானா பேசினார் அப்பா? பெத்த புள்ளன்னு கூட பாக்காம காது கொடுத்துக் கேக்க முடியாத நாறத்தனமான பேச்சு! இது நாள் வரைக்கும் 'ச்சீ'ன்னு சொல்லிடாத அப்பா...

பரசுராமனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. விடியக் கருக்கலில் இருந்து அம்மாக்காரி சாப்பிடச் சொல்லி கெஞ்சிக் கூத்தாடினாலும் அவன் மனசு தணியவில்லை. அந்தி சாயும் வரையிலும் வாயில் தண்ணிகூட ஊத்தாமல் இருந்தான். ஒரு முடிவுக்கு வந்தவன், சட்டுன்னு குளித்து முழுகி பொறப்பட்டான். அப்பப்ப 'இன்ரி'வுக்குப் போக வரன்னு அவன் சின்ன அண்ணன் வாங்கிக் கொடுத்த வி.ஐ.பி. பொட்டியில் 'பட்டத்தை'யும் துணிமணிகளையும் எடுத்து வைத்துக் கொண்டு கிளம்பினான்.

"ஏன்டா தம்பி! இப்படி செய்யிற? எங்கடா போற? ஏதோ ஆத்திரத்தி ஒப்பாரு பேசிட்டாரு. அதுக்காவ..."

"அம்மா, என்னத் தடுக்காத. நான் ஒரு வேலையோடத்தான் திரும்பி வருவேன்."

பொட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தவனைத் தடுத்து, "ஏய்! உக்காந்து ஒரு புடி சோறு தின்னுப்புட்டுப் போடா. இல்லாட்டா..." அழுகையும் ஆத்திரமும் அவள் நெஞ்சை வந்து அடைத்தது.

தெத்திலிக் கருவாட்டோட மாங்காய் போட்டு வச்சிருந்த குழம்பை அம்மா கையால போட்டுச் சாப்பிட்டான். 'அம்மா! நான் திரும்பி வந்தா வேலையோடத் தான் வருவேன்'ங்கிற வைராக்கியத்தோட பொறப்பட்டு வந்து இன்னியோட தொண்ணூத்தி



மூணு நாள்...

பாண்டி பஜாரிலிருந்து கூப்பிடு

தூரத்தில் சந்துப் பக்கம் இந்த 'மேஷம்' பில்டிங் - பழைய கட்டடம். முன் பக்கம் கடைகள். மேல் மாடிகள் எல்லாத்திலும் ஏஜன்ஸிகள். அதைத் தாண்டி உள்ளுக்குள் பொந்து பொந்தாய்த் தட்டோடு கூரை போட்ட அறைகள்.

இப்ப இருக்கிற ஜனநெரிசலில் இந்த ரூமும் முத்துவேலு மட்டும் இல்லாவிட்டால் அவ்வளவு சுளுவா கிடைச்சா போயிடும்? முத்துவேலு இவன் நண்பன். ஒரு லோக்கல் பெயின்ட் கம்பெனியில் மேனேசர். அதன் ஓனர் அவன் அப்பாவுக்கு ரொம்ப வேண்டப் பட்டவர். அதனால் நல்ல செல்வாக்கோடு நல்ல சம்பளத்தில்...

"பரசு! ரொம்ப அவசரப் பட்டு ஊரவிட்டு வந்துட்ட. அதுக்காவ உன்னோட மனச நோகடிக்க விரும்புல. நீ படிச்சிருக்க படிப்புக்கு ஏத்தாப்பல இங்க வேல வாங்க வாய்ப்பே இல்ல. என்னோட அப்பாவும் கை விரிச்சுட்டாங்க. நான்தான் ரொம்ப 'கம்பல்' பண்ணுனேன். என்னோட ஆபீஸ் எம்.டி. கிட்டக்கப் பேசி ஒரு வாய்ப்ப ஏற்படுத்திக் கொடுக்கச் சொன்னார். தொள்ளாயிரத்துக்கு மேல் தரமுடியாதுன்னு கண்டிச்சுட்டார். அந்தச் சம்பளத்த வச்சிக்கிட்டுதான் சிக்கனமா இருக்கணும். போகப் போக பாத்துக் கொடுக்க ஏற்பாடு பண்ணுறேன்."

பயணம் பண்ண 'புட்போர்டு' கெடைச்சிட்ட சந்தோஷத்தில் தான் அந்த ஆபீஸுக்குள்ளே போனான், பரசுராமன். ரூமுக்கு வல்லிசா எரநூறு போவ எழுநூறுக்குள்...

மூணு வேளைச் சாப்பாட்டை ரெண்டு வேளையா மாத்திக்கிட்டாலும் அதுக்கே பத்தியும் பத்தாமலும் ரொம்ப கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. கைப் பொங்கலா பொங்கிச் சாப்பிடலாம் என்றாலும் ஒண்டியிருக்கும் அறையில் இவனுக்கு முன்னாலேயே மூணு பேர் செய்து கொண்டிருந்தார்கள். அந்த நெருக்கடியில் அவன் வந்து போகவே சங்கையாக உணர்ந்தான். ஒரு வாளித் தண்ணிக்கே இச்சைப் பட்டு காத்துக் கொண்டிருந்து குளித்து முழுகிக் கிளம்பினால் தான் ஒன்பது மணிக்கு ஆபீஸ் போக முடியும்.

வேலையில் சேரும் போதே 'காலையில் ஒன்பது மணிக்கெல்லாம் வந்துடணும். போறதுக்கு நேரகாலம் பாக்க முடியாது, வேலை முடிஞ்சா தான் போவலாம்' -இந்த நிபந்தனையோடு முடித்துக் கொண்டு வர ராத்திரி மணி எட்டாயிடும்.

ஆஞ்சு ஓஞ்சி ரூமுக்கு வந்ததும் அப்பாடின்னு படுத்தால் போதும் என்று மனசும் ஒடம்பும் அடம் பிடிக்கும் போது அவனால் கைப் பொங்கலை நினைத்துக் கூடப் பாக்க முடியாதுதான். ஆறு மாசம் வரைக்கும் லீவு எடுக்கக் கூடாதுன்னு கண்டிப்பு வேற.

ராத்திரி எட்டு மணிக்கு நல்ல பசியோடு தான் அன்னம்மாள் மெஸ்ஸுக்குப் போய் உக்காந்தான். புளிக்குழம்பையும் பீன்ஸ் துவட்டலையும் பாத்ததும் மூஞ்சில் அடிப்பது போல குமட்டிக் கொண்டு வந்தது. என்னா செய்ய முடியும்? ஏதாச்சும் சாப்பிட்டாக வேண்டுமே என்ற கட்டாயத்துக்காவ கர்மமேன்னு ரெண்டுவாய் அள்ளிப் போட்டுக் கொண்டு வந்து படுத்தவன்தான்.

ஊரில் இருந்து பொறப்பட்டு வரும் போது அம்மா கையால் வாய்க்கு ருசியா நெத்திலிக் கருவாட்டுக் கொழம்பு சாப்பிட்டது. மூணு மாசத்திற்குள் நாக்கு ரொம்ப செத்துப் போய் ஏதாவது 'ஒனக்க சனக்க' சாப்பிட்டால் தேவலாம் போல இருந்தது. ஆனா, இங்கத்தி 'ரேட்' கட்டுப்படி ஆவுமா நம்ம சம்பளத்துல?

தென்காசி வழக்கு தெரியுமா?

திருநெல்வேலி, தென்காசிப் பகுதிகளில் நெல் அறுவடைக்கு முன்பே வியாபாரிகள் வந்து விவசாயிகளிடம் பேசி, ரூபாய்க்கு இத்தனைபடி என்று ஒப்பந்தம் செய்து அட்வான்ஸும் கொடுத்துவிட்டுச் செல்வார்கள். இப்படி தென்காசி விவசாயியிடம் ஒரு வியாபாரி ஒப்பந்தப்படி நெல்வாங்க வந்தார். விவசாயி படியைத் திருப்பி நெல்லை அளக்க ஆரம்பித்தார். வியாபாரிக்கு அதிர்ச்சி. கேட்டபோது, ஒப்பந்தத்தில் படியை நேராக வைத்துத்தான் அளக்க வேண்டுமென்று இல்லையே என்று பதிலும் கூற, வியாபாரி வழக்கைப் பஞ்சாயத்துக்குக் கொண்டு போனார். பஞ்சாயத்தார் உள்ளூர் விவசாயியைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. அதே சமயத்தில் வியாபாரிக்கும் விரோதமான தீர்ப்புச் சொல்ல விரும்பவில்லை. எனவே, 'படியை நிமிர்த்தி வைத்தும் அளக்க வேண்டாம்; கவிழ்த்து வைத்தும் அளக்க வேண்டாம். குறுக்காக வைத்து அளந்து போடவும்' என்று தீர்ப்புச் சொன்னார்களாம்! இதுதான் தென்காசி வழக்கு!



மதுரை-6. எம்.பி.துரைஸ்வாமி

"HE PROMISED HE HAD SOMETHING THAT COULD CHANGE OUR LIVES... WE WERE AMAZED WHEN HE SHOWED US HOW!"


The friendly man from Eureka Forbes presented his card. "I would like to demonstrate our Euroclean 2000, a cleaning system you could conveniently use everyday," he said. He began to show us how – patiently and thoroughly. From carpets to sofas, from curtains to ceilings, he made everything spotlessly clean. He even showed us how effectively the Euroclean 2000 could clean delicate audio equipment , spray paint our refrigerator or be used for watering our plants. He offered to drop by at home as often as we liked, to train us on how to use the product.



The friendly man from Eureka Forbes : Part of a successful sales organisation.

"We've helped over one and a half million families discover an easier way to a cleaner home," he said with pride. "Families prefer us because they can contact us directly – with just a phone call ! We have a country-wide service network and offer after-sales service at your doorstep. That's what makes us different from the others".

We were impressed, we bought the Euroclean 2000. And our home has never been cleaner, thanks to the friendly Eureka Forbes man.



TRITON/94/EFL/358

EUREKA FORBES LTD.

Friends for life

***For a visit from the friendly Eureka Forbes man, call or write to:** Bhupesh Gupta Bhuvan, 1st Floor, 85 Sayani Road, Prabhadevi, Bombay 400 025. Tel: 022-4301725/1718.

மேக்சிமா-குருப் நிறுவனங்களின்

பொங்கல் நல்வாழ்த்துக்கள்

MAXIMA

மேக்சிமா பெனிபிட் பண்ட் லிமிடெட்
மேக்சிமா கிரெடிட் லிங்க்ஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா சிட்ஸ் மெட்ராஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி

உங்கள் முதலீட்டிற்கு

25%

வட்டி + 1%
ஊக்கத்தொகை

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக முதலீடு செய்யும் பொழுதே வழங்கப்படும்.

உங்கள் வருங்காலக் கனவுகளை நனவாக்கும் வளமான சேமிப்புத்திட்டங்கள்.

பிக்சட் டெபாசிட்	ஒவ்வொரு மாதம், காலாண்டு, அரையாண்டுகளில் வட்டி வழங்கப்படும்.	குறைந்தபட்ச முதலீடு ரூ.5,000/-
குமுலேட்டிவ் டெபாசிட்	45.60% P.A அதிக பட்ச வட்டியாக பெறுவீர்	ரூ.5,000/-
கோல்டன் டெபாசிட்	முதலீடு 3 வருடங்களில் இருமடங்காகும்	ரூ.7,500/-

மேக்சிமா - உங்கள் முதலீட்டிற்கு முழுப் பாதுகாப்பு அளிக்கக் கூடியது.

காலம்	வட்டி
12 மாதங்கள் + 1 நாள்	26.80 %
24 மாதங்கள்	30.40 %
36 மாதங்கள்	32.66 %
48 மாதங்கள்	39.67 %
60 மாதங்கள்	45.60 %

மேலும் விபரங்களுக்கு
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி
பதிவு அலுவலகம் : 1, வேதாந்த தேசிகர் தெரு, R.K.மடம் சாலை, லஸ் பஜார் அருகில், மயிலாப்பூர், சென்னை - 600 004. தொலைபேசி : 4941849, Fax : 044-4347655. தந்தி : MAXFIN
தலைமை அலுவலகம் : 146, எல்டாம்ஸ் ரோடு, சென்னை - 600 018.
தொலைபேசி : 456950 / 458549 / 452559
கார்ப்பரேட் அலுவலகம் : 'ஜெயம் பில்டிங்' AA-147, 3வது அவின்யூ (அண்ணாநகர் ரவுண்டானா அருகில்) அண்ணா நகர், சென்னை - 600 040
தொலைபேசி : 6280468
கிளை அலுவலகம் : K.R. பில்டிங், 124-A, லேட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை - 600 020.

APARNA/94

மேக்சிமா - அதிகபட்ச நம்பிக்கைக்குரியது.



''உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை... அச்சமென்பதில் லையே'ன்னு அழகா பேசிக்கிட்டிருந்த தலைவர் ஏன் திடீர்னு மயங்கி விழுந்துட்டார்?''

''யாரோ அவர் அருகாமையில போய் பலமா சோடா உடைச்சிருக்காங்க... அந்த அதிர்ச்சிதான்!''

– சி.மயில்வாகனன்

வீட்டில் ஒரு வேளைக்கு ஒன்றும் கெடைக்கிலன்னு மேங்கறி ஆக்காவிட்டால் அவன், அம்மாவை என்னா பாடு படுத்தி விடுவான்? "இது என்னா எளவு வீட்டுச் சோறு. மனுசனா சாப்புடுவான்?" தட்டோடு உதைத்து முத்தத்தில் தள்ளிச் சிதறிய சோத்தைப் பார்த்து.

"ஏய் இந்தா பாருமே! நாம வயவேல பாக்குற செம்மங்க. இவன் இவ்வள 'கொழி கொழிச்சி' ஒதைச்சு தள்ளுறதுக்கு இந்த சோத்துக்குச் சிரிப்பா சிரிச்சு நிக்கல பாரு.. நீ கொடுத்த எடத்தில தான்மே..." இப்படி ஒண்ணு விட்டு ஒண்ணு பேச்சு முத்திப் போய் அப்பாவிடம் அம்மா வாங்கிய அடி கள் இப்பவும் அவன் மனசில்.

பரசுராமன் அப்புடி என்ன கையால ஆகாதவனா? வயகண்ணில எறங்காதவனா? ஹைஸ்கூல்ல படிக்கிற காலத்திலேயே முன் னத்தி ஏர் புடுச்சான்னா பின்னால வர்ற அண்ணன்மார்களின் 'தாவு' தீந்துதான் போயிடும். மோதிப் புடுச்சி தரிசு ஒதுங்காம ஓட்டி 'விலாவ' காலால தட்டி ஓட்டுவதிலும் 'மம்புட்டி' புடிச்சி தரிசு வெட்டுவதிலும் கைகாரன் என்று பேர் எடுத்தவனாச்சே. என்னிக்குக் காலேஜில அடி எடுத்து வைச் சானோ அன்னிக்கு முழுக்கு போட்டவன் தான். அவன் அதுக்கு பொறவு சேத்தில் கால் வைக்கவில்லை.

ஒன்பது வருஷத்திலே அவன் நெனப்பிலும் கனவிலும் இப்புடி மண் விழும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. இன் னிக்கு ஒரு புடிச் சோத்துக்கு லாட்டிரி அடிக்க வேண்டி வந்து விட்டதேன்னு அவன் மனசு கடந்து துடியாய்த் துடித்தது.

"**ப**ரசு! ஆபீஸ் செலவ கொறைக்கச் சொல்லிட்டு, பொடிப்பயல எம்.டி.. நிறுத்தச் சொல்லிட்டாரு. நீ தான் போஸ்டாபீஸ்க்குப் போயிட்டு வரணும்னு. ஒரு வாரமா அனுப் பிக் கொண்டிருந்த முத்துவேலு, 'பரசு ரெண்டு கூல்டிரிங் சொல்லிட்டு வா'ன்னு சொன்னதும் ரெத்தமே கண்டினது போல வெளிறிப் போய் முத்துவேலுவைப் பாத்தான். அவனால் போயிட்டு வான்னு தான் சொல்ல முடிந்தது.

'கழுதைக்கு வாக்கப்பட்டாச்சு. ஒதைக் குதேன்னு சொன்னா முடியுமா?'

"...நம்ம சோத்த நாலு பேரு இங்க இருக்க, நீ என்னடா கண்காணாத தேசாந் திரம் போயி சோத்துக்குக் கஷ்டப்பட்டுக் கிட்டு கெடக்கிற? அப்பா உன்ன அன்னிக்குத் திட்டிட்டாலும் நீ போனதிலிருந்து அவருக்கு நல்ல இருப்பு இல்ல. நல்ல படியா சோறு தண்ணி கூட இல்லாம நடமாட்டமும் இல் லாம கையிலப் புடுச்சிக்கிட்டு நிக்கிறோம்..."

தலைகாணிக்கடியில் இருந்த அம்மா வின் கடுதாசியை ஒண்ணுக்கு ரெண்டு தடவ அரைகுறை இருட்டிலும் படித்தான். மனசு ஈரத்தால் கனத்துக் கொண்டது.

கடேசியில ஒரு முடிவெடுத்து, ஊருக்கு டிக்கெட் வாங்கிவிட்டான்.

ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் தாம்பரம் தாண்டும் வரையிலும் எதையோ பறி கொடுத்தவன் போலத்தான் உக்காந்திருந் தான். மூணு மாச காலத்தில் மெட்ராஸ் கொடுத்திருக்கும் அனுபவம் அவன் நெஞ்சை விட்டு, அவ்வளவு லேசில் போயிடுமா என்ன?

சிலீர்ன்னு குளிர்க்காத்து மூஞ்சில் அப்பியதும் முழிப்புத் தட்டியது. சற்று நிதானமாய்த் தான் உணர்ந்து கொண்டான். 'ஸிலிப்பரை' விட்டு இறங்கும் போது மனசுக் குள் குதூகலம். இருள் இன்னும் முற்றிலும் விலகி விடவில்லை. 'மம்மலாய்' இருந்தது. ரயில் பூந்தோட்டம் முடிகொண்டான் ஆத்துப் பாலத்தைக் கடந்தது.

ஆத்தில் நீச்சல் நிலை கொள்ளா அளவுக்குத் தண்ணி. அப்புடியே குதித்து, நீச்சல் அடித்து அக்கரைக்கு கடந்து போவ வேணும் போல உந்தல்.

ரயில் பாதையை ஒட்டியது போல வயலில், வயசான ஆள் ஒருத்தன் அடங்காத காளை மாட்டை கொண்டையைப் பிடித்து மடக்கிப் போட்டு நுகத்தடியிட்டுக் கட்டி னான். ஏர் கலப்பையை இழுத்துப் பூட்டி மாட்டின் தலைகயித்தை தளர்த்தி 'ஹேய்' என்று ஒரு அடி கொடுத்தான். அந்த மாடு நிதானமாய் முண்டி கலப்பையை இழுத்த படி? ரெண்டாம் 'திலா' திரும்புவதை புள்ளி யாய் தெரிந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றான்.

அவன் மனசுக்குள், 'நாளைக்கு இந்நேரம் நம்பளும்...'

புண்ணிய காரியங்களை ஸங்கிராந்தியில் ஏன் அனுஷ்டிக்க வேண்டும் ?



மேஷம் முதலிய பன்னிரெண்டு ராசிகளில் கிரமமாக மாதந்தோறும் சஞ்சரிக்கும் சூரிய பகவான்.

ஒரு ராசியிலிருந்து வேறு ராசிக்கு பிரவேசிக்கின்ற சமயம் ஸங்கரமணம் ஸங்கிராந்தி என்று சொல்லப்படுகிறது. அந்தப் புண்ணிய காலங்களில் செய்கிற ஸ்நானம், தானம், ஹவ்யம், கவ்யம், முதலிய புண்ணிய காரியங்களுக்கு ஏழு வருஷம் சூரியன் நல்ல பலன்களைக் கொடுக்கிறார். ஆகையால் புண்ணிய காரியங்களை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

தேவலர் : ஸங்கராந்தி சமயம் சூட்க்ஷமமானது. நம்மால் அறிய முடியாதது. ஆகையால் ஸங்கரமணத்திற்கு முன்பு முப்பது பின்பு முப்பது நாழிகைகள் புண்ணிய காலமாகும்.

ராசி	ஸங்கிரமணத்தின் நாமதேயம்	(ப்ருஹஸ்பதி வாக்குப்பலன்) புண்ணிய காலம்	புண்ணிய பலன்
மகரம்	உத்திராயணம்	பின் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
கும்பம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மீனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மேஷம்	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
ரிஷபம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மிதுனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கர்கடகம்	தக்ஷிணாயனம்	முன் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
சிம்மம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கன்னி	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
துலா	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
விருச்சிகம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
தனுசு	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்

- ஸம்க்ஷேப தர்மசாஸ்திரம்

ஹலோ பிரதர்!



ஆந்திராவில் தலைதெறிக்க நூறு நாள் ஓடிய தைரியத்தில் தமிழாக்கப்பட்டு வந்திருக்கும் டிபிகல் தெலுங்கு மசாலா. பாடகர் எஸ்.பி.பி., தயாரிப்பாளராகியிருக்கிறார்.

முதலுக்கு மோசமிருக்காது. ஃபார்முலா அப்படி!

போலீஸிலிருந்து தப்பிச் செல்லும் வில்லன், ஒரு போலீஸ் அதிகாரியின் இரண்டு குழந்தைகளுள் ஒன்றைக் கடத்திப் போய் தண்டவாளத்தில் போட்டு, தான் மண்டையைப் போட, அக் குழந்தை உயிர் பிழைக்க, லோ இரண்டு நாகார்ஜுன்ஸ். திருடனாக ஒரு ரோல். அமெரிக்க மாப் பிள்ளையாகப் பிறி தொன்று.

இரண்டுக்கும் பெரிய வித்தி யாசம் ஒன்று மில்லை - நடிப்பைப் பொறுத்த வரை. வழக்கமான பிளாஸ்டிக் முகபாவம். பாடல் காட்சிகளில் கொஞ்சம் தேவலாம்.

ரம்யாகிருஷ்ணனின் நடிப்புத் திறனை ஏன் யாரும் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை? ஒரு கனமான ரோல் யாரும் தந்தால் பிரகாசிக்கக்கூடியவர் என்றே தோன்றுகிறது.

இன்னொரு ஹீரோயின் சௌந்தர்யா. 'பொன்னுமணி'யில் என்னமாய் செய்திருந்தார்! இதில் பொம்மை.

மனம் விட்டுப் பாராட்ட ஒரு நெப்போலியன். அந்தப் பார்வையில் என்ன ஒரு கவித்துவமான கொடூரம்! ஹீரோ ஆசையை மறந்து விட மாட்டாரா என்று மனம் ஏங்குகிறது. இதுபோன்ற ஐ.எஸ்.ஐ. வில லத்தனம் சமீப காலத்தில் வேறு எந்த நடிகருக் கும் கைவராதது கவனிக்க.


'டப்பர்' மருத பரணியின் வசனங்களில் ஆங்காங்கே சில நட் சத்திரத் தெறிப்புகள்.

தெலுங்கு உதட்டசைவுக்கு 99% பொருந்துவது சாதனை. (சில டைட் குளோசப் ஷீன்கள் தவிர்த்து.)

ஒரு பாடகரின் தயாரிப்பில் பாடல்கள் பட்டொளி வீசிப் பறக்க வேண்டாமோ? சைபர்.

மசாலாப் பிரியர்களுக்கு விருந்து.

— ஆர்.பி.ஆர்.



• வள்ளலார் உயர்நிலைப்பள்ளி

இரண்டரை வருடங்களாக சம்பளமே இல்லாமல் வேலை பார்க்கும் பள்ளி ஆசிரியர்களை எங்காவது சந்தித்திருக்கிறீர்களா? விருப்பமிருந்தால் கடலூரை அடுத்த குறிஞ்சிப்பாடிக்குப் போங்கள். அங்கே, வேல வினாயகர் குப்பம் என்கிற டிபிகல் கிராமத்தில் இயங்கும் வள்ளலார் உயர்நிலைப் பள்ளியில் மேற்படி ஆசிரியர்களைப் பார்க்கலாம்.

தனியார் நடுநிலைப் பள்ளியாகத் தொடங்கப்பட்டு, 1989-முதல் உயர்நிலைப் பள்ளியாக மாற்றப் பட்டு அரசு மானியம் கோரிக் கோரி... இன்று வரை கோரிக் கொண்டிருக்கிறார்கள்.

சுயநிதிப் பள்ளிகளை Government aided பள்ளிகளாக மாற்றும் அரசு ஆணைப்படி, ஆசிரியர்கள்

வில்லன்களின் பிடியில் வள்ளலார் பள்ளி!

சம்பளம் உள்ளிட்ட பள்ளி நிர்வாகச் செலவு முழுதும் மூன்று ஆண்டுகள் வரை நிர்வாகமே ஏற்கவேண்டும்.

மூன்றாண்டுகள் முடிந்து, அரசு மானியம் இன்னும் கிடைக்காதது ஒருபுறம் இருக்க, இந்த மூன்று ஆண்டுக்கான சம்பளத்தையும் நிர்வாகம், ஆசிரியர்களுக்குச் சரிவரத் தராமல் டபாய்த்திருக்கிறது.

கொஞ்சம் விவரமாகப் பார்க்கலாம். வெறும் கீற்றுக் கொட்டகைகளோடு நா. சேஷாசலம் என்பவர் தொடங்கிய வள்ளலார் நடுநிலைப்பள்ளி (இப்போது உயர் நிலை) நன்கொடைகளைக் கொண்டு கட்டடங்களாகியிருக்கிறது! இது, உயர் நிலைப் பள்ளியாக்கப்பட்டதும் இரண்டு பி.டி. ஆசிரியர்கள், மூன்று செகண்டரிகிரேடு ஆசிரியர்கள், பிற ஊழியர்களுடன் மொத்தம் ஒன்பது பேர் பணியமர்த்தப் பட்டிருக்கிறார்கள்- இரண்டு பெண்கள் உட்பட.



• ருக்மணி அம்மாள்: "ஏதாவது பண்ணுங்கையா!"

அனைவரிடமும் அவரவர் 'தரத்திற்கேற்ப 25 முதல் 40 ஆயிரம் வரை நன்கொடை பெற்றிருக்கிறது நிர்வாகம்.

நிர்வாகம் தர வேண்டிய மாதச் சம்பளம் - அரசு நிர்ணயப்படி வழங்கப் பட வேண்டும். ஆனால் இல்லை. மாதம் 'சும்மா' 500 ரூபாய் தந்துவிட்டு, சொச்சத்தை "அரசு மானியம் வந்ததும் மொத்தமாக வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டார்கள்.

தவிர, பணியில் சேரும்போது ஆசிரியர்களிடம் வெற்றுத்தாள்களிலும் ஒருவரிடம் வெற்று ஸ்டாம்ப் பேப்பரிலும் கையெழுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் நிர்வாகிகள்.

ஏன்?

கேட்கக் கூடாது! தவிர இன்றுவரை யாருக்கும் அப்பாயின்ட்மென்ட் ஆர்டரும் தரப்படவில்லை. யாரும் குரல் எழுப்பினால் மிரட்டல் மூலம் பதில் வருகிறது!

'இதெல்லாம் சுயநிதிப் பள்ளிகளில் சகஜம்தான்; அரசு மானியம் வந்ததும் எல்லாம் சரியாகிவிடும்' என்று ஆசிரியர்கள் பொறுமை காக்க, அதையே சாதகமாக்கிக் கொண்டு, நிர்வாகம் தனது அடுத்தக் கட்ட 'அதி



• நம்மோடு தம் குறைகளைப் பகிரும் ஆசிரியர்கள்

ரடி'யைத் தொடங்கியது!

"இனிமேல் மானியம் வரும்வரை சம்பளமே கிடையாது" என்று சர்க்குலர்!

ஆக, வந்து கொண்டிருந்த ஐநூறு ரூபாயும் நின்றுபோக, பஸ்சார்ஜுக்குக் கூட வழியில்லாமல் சிரமப்படும் நிலையில் அப்பாவி ஆசிரியர்கள்!



• சேஷாசலம்: "நோ பைசா!"

இனி பொறுப்பதில்லை என்று ஆசிரியர்கள், விஷயத்தை ஊர் மக்களிடமும் எம்.எல்.ஏ.விடமும் சொல்லி, உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்! "சம்பளம் கூட வேண்டாம்; எங்களிடமிருந்து வாங்கின 'அன்பளிப்பை' யாவது திருப்பிக் கொடுங்கள்" என்று கெஞ்சியிருக்கிறார்கள். "அன்பளிப்பா? அப்படி எதுவும் வாங்கவில்லையே!" என்று கையை விரித்து விட்டது நிர்வாகம்.

எம்.எல்.ஏ. தலையிட்டு அந்த ஐநூறை மறுபடி கிடைக்கச் செய்திருக்கிறார்.

அதுவும் இரண்டு மாதம்தான். இப்போது மீண்டும் முருங்கை மரம் ஏறி விட்டது நிர்வாகம்!

அடிப்படை வசதிகள் இல்லாமல், ஆசிரியர்களுக்குச் சம்பளம் இல்லாமல், ஒரு தலைமை ஆசிரியர் கூட இல்லாமல் நிர்வாகத்தின் ஏக போக ராஜ்ஜியத்தில் நாளொரு புலம்பலும் பொழுதொரு சீரழிவுமாக நலிந்து வருகிறது வள்ளலார் உயர்நிலைப் பள்ளி.

நிர்வாகி சேஷாசலம் என்ன சொல்கிறார்?

"பைசா, சுத்தமாகக் கிடையாது. எப்படி சம்பளம் தர முடியும்? அரசு மானியம் வந்தால் தந்துவிட்டுப் போகிறேன். அதற்கான முயற்சிகளும் எடுத்துக் கொண்டிருக்கிறேன்!"

ஆனால் ஆசிரியர்களுக்கு, எப்பாடு பட்டாவது மானியம் சாங்ஷன் ஆகும்வரை சம்பளம் தந்தாக வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு என்பதும், அதற்காக வங்கியில் ரூபாய் ஒரு லட்சம் டெபாஸிட் செய்து, அது தீரத்தீர நிரப்பிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற அரசு ஆணை பற்றியும் மூச்சுவிட மறுக்கிறார் சேஷாசலம்.

விசாரித்தால் வங்கியில் பணம் கட்டும் 'சடங்கை' நிர்வாகம் செய்யவே இல்லை என்கிறார்கள்.

இதனிடையில், மூன்றாண்டுகளில் வரவேண்டிய மானியம் ஏன் இன்னும் வரவில்லை என்று உயரதிகாரிகளிடம் ஆசிரியர்கள் கேட்டுக் கேட்டு, முதலமைச்சரின் தனிப் பிரிவு வரைக்கும் மனு அனுப்பியிருக்கிறார்கள்.

மௌனம் சாதிக்கிறது அரசு.

"எங்கள் சோகம் ஒருபக்கம் இருப்பினும் இதனால் மாணவர்கள் பாதிக்கப்படக் கூடாதல்லவா? அதனால் வகுப்புகள் தடைபடாமல் கூடவே கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம்" என்கிறார்கள் ஆசிரியர்கள்.

"எங்களிடம் கையெழுத்து வாங்கிக் கொண்ட வெற்றுத் தாளைக் காட்டியே பயமுறுத்துகிறது நிர்வாகம். அதுமட்டும் திரும்பக் கிடைத்து விட்டால் முழு மூச்சாகப் போராடலாம். ஆனால் அதற்குத்தான் வழியில்லை!" என்று பெருமூச்சு விடுகிறார்கள்.

நடக்கும் குழப்பக்-களேபரங்கள் என்னவென்று புரியாமல் பரிதாபமாக முழிக்கிறார்கள் மாணவர்கள்.

"ஏதாவது செய்யுங்கையா, எங்க புள்ளைங்க ஒழுங்காப் படிக்க வேண்டாமா?" என்று கண்ணில் நீர்வரக் கெஞ்சுகிறார்கள் கிராமத்து மக்கள்.

"உன்னால் என்ன செய்ய முடியும்?" என்று வில்லப் பார்வை பார்க்கிறது நிர்வாகம்.

கண்டு கொள்ளாமல் மற்றொரு வில்லனாக கட்டவுட் மாயையில் மூழ்கிக் கிடக்கிறது அரசு!

- ஞானம்

படங்கள்: கேமரா திருஞானம்

நல்வாழ்த்துக்கள் ! நல்வாழ்த்துக்கள் ! நல்வாழ்த்துக்கள் ! நல்வாழ்த்துக்கள் !

ஈஸ்வரி வழங்குகிறது

24%

வைப்பு நிதி திட்டத்தில்!


- குறைந்த பட்ச டெபாசிட் தொகை ரூ. 10,000/-
- பின் தேதியிட்ட காசோலைகள் முன்னமே கொடுக்கப்படும்.

ஊக்கத்தொகை 1%

திட்டம் -1-

குமுலேடிவ் வைப்பு நிதி

குறைந்த பட்ச வைப்புதொகை	முதலீட்டுக்கான கால அளவு	முடிவில்
10,000	13, மாதங்கள்	13,000
10,000	25, மாதங்கள்	16,000
10,000	37, மாதங்கள்	20,000



திட்டம் -2-

ஈஸ்வரி பாண்ட்
(முதலீடு இரட்டிப்பு திட்டம்)

குறைந்த பட்ச முதலீடு	37வது மாத முடிவில்
ரூ. 25,000	ரூ. 50,000

ஊக்கப் பரிசு 1 கிராம் தங்க நாணயம்

திட்டம் -3-

திருமலா பாண்ட்
(முதலீடு மும்மடங்கு திட்டம்)

குறைந்த பட்ச முதலீடு	60வது மாத முடிவில்
ரூ. 50,000	ரூ. 1,50,000

ஊக்கப் பரிசு 4 கிராம் தங்க நாணயம்

ESWARI
GROUP OF COMPANIES

ஈஸ்வரி பைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

தலைமை & நிர்வாக அலுவலகம்

4, எல்டாம்ஸ் சாலை, முதல் மாடி, ஆழ்வார் பேட்டை, சென்னை - 18. போன்: 455349, 459557.

கிளை 25, முதல்மாடி, நேரு வீதி, பாண்டிச்சேரி - 1. போன்: 31830.

உங்கள் வளர்ச்சி ஈஸ்வரியுடன் வளரட்டும்

நல்வாழ்த்துக்கள் ! நல்வாழ்த்துக்கள் ! நல்வாழ்த்துக்கள் ! நல்வாழ்த்துக்கள் !

LOTUS

ஜோதிர்லதா கிரிஜா



39

"அப்பா! இன்னிக்கு பள்ளிக்கூடத்தில் போலீஸ்காரங்க வந்தாங்க. காம்பவுண்டு சுவர்ல 'வெள்ளைக்காரங்கல்லாம் கொள்ளைக்காரங்க'ன்னு எழுதி இருக்காயாரோ. அது சம்பந்தமா விசாரிக்கிறதுக்கு வந்தாங்க" என்று உற்சாகமாகச் சொல்லிக் கொண்டு வந்த மகன் ரமணியை ராமசாமி அண்ணாந்து பார்த்தார்.

"அப்புறம்?"

"ஹெட்மாஸ்டரைப் பார்த்துக் கொஞ்ச நேரம் பேசிட்டுப் போயிட்டா. பெரிய வகுப்புகளுக்கு மட்டும் ஒரு இன்ஸ்பெக்டர் வந்து, 'வெள்ளைக்காரங்களுக்கு எதிரா எழுதறது யாருன்னு தெரிய வந்தா கடுமையான நடவடிக்கை எடுப்போம், அப்புறம் எந்தப் பள்ளிக்கூடத்துலயும் சேரமுடியாதபடி பண்ணிடுவோம்'னு மிரட்டிட்டுப் போனார்."

ரமணியின் அனுபவம் பற்றி கேட்டதும் ராமசாமிக்கு கல்கத்தா ராமச்சந்திர அய்யரின் நினைவு வந்தது.

"ரமணி, 'ராமச்சந்திர அய்யர், ராமச்சந்திர அய்யர்'னு எதிர்ச் சாரியில கோடி வீட்டில ஒருத்தர் இருந்தாரே, உனக்கு ஞாபகம் இருக்கா?"

"அவருக்கு என்னப்பா?" என்று கேட்டுக் கொண்டு அப்போது கங்காதரனும் அங்கு வந்து உட்கார்ந்து கொண்டான்.

"கல்கத்தா சர்வகலா சாலைல ரொம்ப வருஷங்களுக்கு முந்தி அவர் படிச்சிட்டிருந்தப்ப நடந்த சமாசாரம், இப்ப நான் சொல்லப் போறது. ஆலிவர் ஸ்மித்னுட்டு ஒரு இங்கிலீஷ் ப்ரொபசர் இருந்தார். இந்தியர்களுக்கு இந்தியாவைப் பத்தி இழிவா என்னமோ சொல்லி இருக்கார். இந்தியர்களுக்கு இலக்கியமே தெரியாதுன்னுருக்கார். அவ்வளவுதான். வந்துதே கோபம், அந்த ராமச்சந்திரனுக்கு. நன்னா விடுவிடுன்னு விட்டான். அப்பல்லாம் - ஏன்? இப்பவும்தான் - வெள்ளைக்கார ப்ரொபசரையெல்லாம் யாரும் எதிர்த்துப் பேசமாட்டா. இவன் பேசவே, ப்ரொபசர் இவன் கன்னத்துல அடிச்சுட்டார். ராமச்சந்திரன் திருப்பி வாத்தியாரை அடிச்சுட்டான். ஆனா, 'சார்! எங்கள் தாய்நாட்டைப் பற்றித் தரக்குறைவாகப் பேசியதற்காக இந்த அடி. ஆனாலும் குரு ஸ்தானத்தில் இருப்பவரை அடித்து விட்டதற்காக இந்த நமஸ்காரம்.' அப்படின்னு சொல்லிட்டு அவர் கால்ல விழுந்து நெடுஞ்சாண்கிடையா நமஸ்காரம் பண்ணிக் கும்பிட்டு, அப்படியே கல்கத்தா சர்வகலா சாலைக்கும் பெரிசா ஒரு கும்பிடு போட்

டுட்டு வந்துட்டான். அதனாலதான் அவருக்குக் கல்கத்தா ராமச்சந்திரய்யர்னு பேரா யிடுத்து."

"இப்ப நம்ம நாட்டுக்குத் தேவையானது இந்த மாதிரி துடிப்புதாம்ப்பா. சும்மா வெள்ளைக்காரனுக்குப் பின்னால கெஞ்சிண்டு அலையறது இல்லே. நீங்க வேணாப் பாருங்கோ, இந்த காந்தி தோத்துத்தான் போகப் போறார். கடைசியில எங்கள மாதிரி தீவிரவாதிகளாலதான் நம்ம நாட்டுக்கு சுதந்திரம் வரப் போறது."

"நானெல்லாம் கூட உன்னாட்டமா பேசிண்டிருந்தவன்தாண்டா. அவர் இந்தியாவுக்கு வந்ததுலேருந்து செஞ்சுண்டு வந்திருக்கிற சில காரியங்களையும் சில வெற்றிகளையும் பார்க்கிறப்ப, அவர் வழியில போனா என்னன்னு எனக்கே தோண ஆரம்பிச்சுடுத்து."

"எதெதுலேப்பா அவருக்கு வெற்றி கிடைச்சது? என்னமோ சம்பரான், சம்பரான்கறாளே அது ஒன்னு, இல்லியா?" என்று ரமணி ஆவலுடன் விசாரித்தான்.

"ஆமாம், சம்பரான்னு பீகார்ல ஒரு இடம். அங்க, அவுரிச்செடிங்கிற

மனசிக்கொடி

நீலச் சாய உற்பத்திப் பயிர்களின் விளைச்சல், குறிப்பிட்ட அளவுக்குக் கீழே போயிடுத்துன்னா விவசாயிகள் வரி கட்டத் தேவை இல்லேன்னு ஒரு சட்டம். அந்த வருஷத்துல - 1917ல - விளைச்சல் இல்லாததுனால நாங்க வரி கட்ட மாட்டோம்னா விவசாயிகள். அதிகாரிகள் சம்மதிக்கலே. காந்திஜி இந்தப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கினார். சர்தார் வல்லபாய் படேலும் இதுல கலந்துண்டார். காந்திஜி அப்ப இந்தியாவுக்குப் புது மனுஷரா இருந்தாலும் மக்கள் அவருடைய தலைமையை விரும்பி ஏத்துண்டா. முதல்ல காந்திஜியை ஜெயில்ல வெச்ச வெள்ளைக்காரன் கடைசியில வழிக்கு வந்தான்!"

"போங்கப்பா. இதெல்லாம் சுண்டைக்காய்ப் பிரச்னைகள். இது மாதிரி சின்ன விஷயங்கள்ள விட்டுக் குடுத்து, வெள்ளைக்காரன் காந்தியை ஏமாத்திண்டிருக்கான். அது அவருக்குத் தெரியல்லே," என்று கங்காதரன் சிரித்தான்.

"அட, போடா பைத்தியக்காரா! அப்படி இல்லே. தென் ஆப்பிரிக்காவில சில போராட்டங்களை நடத்தி, அங்க இருக்கிற வெள்ளைக்கார அரசாங்கத்தைப் பணிய வெச்சாரோல்லியோ? அதே மாதிரி இங்கே இருக்கிற மக்களிடத்துலயும் அவருக்குச் செல்வாக்குப் பெருகிடுமோன்னு வெள்ளைக்காரன் வயித்துல நெருப்பைக் கட்டிண்டிருக்கானாக்கும்!"

"ரௌலட் சட்டத்துக்கு எதிராக்கூட ஒரு சத்தியாக்கிரகம் நடத்தினாரில்லேப்பா?"

"ஆமா. யாரை வேணா, எப்ப வேணா அரெஸ்ட் வாரண்ட் இல்லாமயே கைது பண்ணிண்டு போய் ஜெயில்ல வைக்கலாம்னு ஒரு காட்டுமிராண்டிச் சட்டத்தை அமுல் படுத்தறதுக்காக ரௌலட்ங்கிற வெள்ளைக்காரன் தலைமையில ஒரு கமிட்டியை வெள்ளைக்காரன் இங்கிலாந்துலேருந்து அனுப்பினான். அதை எதிர்த்து நாடு முழுக்கக் கூட்டங்கள் நடந்தது."

"முக்கியமானதை விட்டுட்டேளேப்பா? அப்படிக் கைது பண்ணப்படற ஆளுக்கு வக்கீல் வெச்சு வாதாட உரிமை கிடையாதுன்னானே!"

"ஆமாமா. காந்திஜி தன்னோட ஆட்சேபணையை எடுத்துச் சொன்னார். ஆனா அரசாங்கம் கேக்கல்லே. 1919 ஆம் வருஷம் பிப்ரவரி மாசம் அந்த ரௌலட் சட்டத்த அமுல்படுத்திட்டா. மார்ச் மாசம் காந்திஜி நாடு முழுக்கவும் ஹர்த்தால் பண்ணனும்னு கேட்டுண்டார். அவர் கட்டளைப்படி இந்தியா முழுக்கக் கடையடைப்பு நடந்தது. வெள்ளைக்காரன் அசந்துட்டான். ஆனாலும் சட்டத்தை என்னவோ அவன் வாபஸ் வாங்கிக்கல்லே. அந்த சந்தர்ப்பத்துலதான் ஜாலியன்வாலா பாக் படுகொலை நடந்தது."

அந்தக் கொடிய சம்பவம் பற்றி ஏற்கெனவே நன்கு அறிந்திருந்த விசாலம், காய் நறுக்குவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்து, "ஏம்ப்பா அந்த ராட்சசன் ஜெனரல் டையரை யாருமே தண்டிக்கலையா?" என்று கேட்டாள்.

"தண்டிக்கிறதா? அவனுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார்ல பாராட்டும் பரிசும் கொடுத்தா! ஆனா வெள்ளைக்காரான்னாலும் நல்லவா இருக்கா. பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்னு ஒரு

இக்கால அரசியலைத் தோலுரித்துக் காட்டியது!



♠ இந்திரா பார்த்தசாரதியின் "வேதபுரத்து வியாபாரிகள்" இக்கால அரசியலைத் தோலுரித்துக் காட்டியதோடு மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பு மக்களும் படித்துப் பாதுகாக்க வேண்டிய கதையாகவும் அமைந்தது.

காரைக்குடி, எஸ். குமார்.

♠ எங்கள் சொந்த ஊரான வேதபுரத்தைப் பற்றியும் எங்கள் மகாராணியைப் பற்றியும் அவரது தோழியைப் பற்றியும் விவரமாக எழுதிய இந்திரா பார்த்தசாரதிக்கு வேதபுரவாசி என்கிற முறையில் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

தஞ்சாவூர் - 7, வளர்மதி ஆசைத்தம்பி.

♠ வேதபுரம் என்ற அந்தப் பழம்பெருமை மிக்க நாட்டிற்கு, அபூர்வா என்ற அழகுமிக்க அந்நிய நாட்டுப் பெண்ணொருத்தி அரசியாகி ஆட்சி நடத்தும் விதத்தை ரசித்துப் படித்து, மருதுவின் ஓவியங்களைப் பார்த்து மகிழ்ந்து வந்த எங்களுக்கு, அபூர்வாவின் ஆட்சி இனி எப்படி நடக்கப் போகிறதோ என்று யோசிக்கச் செய்து விட்டது.

சிறுமுகை, ஜி. கதிரேசன்.

♠ "வேதபுரத்து மக்கள் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ உண்மைகளை எழுதினாலும் சொன்னாலும் அதை உதாசீனப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டவர்கள்; கடவுளைக் காண முடியாதவர்கள்; கடவுளாய் நடித்தவர்களைக் கடவுளாக மதிக்கும் வழக்கமுடையவர்கள். உப்புப் போட்டு சாப்பிடுவதையே மறந்து விட்டவர்கள்.

- "பேராசிரியர் கல்கி வாசகன்" (வேதபுரத்து மக்களின் பழக்க வழக்கங்கள் - பக். 420-421)

காடாம்பாடி, ஆர். ஷிவேல்ச்சாமி.

அறிஞர். அவர் ஜெனரல் டையரை 'ரத்த வெறி பிடிச்ச பேய்'னு வர்ணிச்சுக் கண்டிச்சார். பிரிட்டன்லயே சில பத்திரிகைகள்ள பஞ்சாப் கவர்னரைக் கண்டிச்சு எழுதினா. கர்னல் வெட்ஜ்வுட், பெதிக் லாரன்ஸ், மேஜர் கிராஹம் போல். இது மாதிரி சில பிரிட்டிஷ் பெரிய மனுஷாள்ளாம் இந்தியாவில பிரிட்டன் செய்யற கொடுமைகளை நிறையக் கண்டிச்சா. அதனால பிரிட்டிஷ் தண்டிச்சுட்டதாப் பேர் பண்ணித்து."

"இதையெல்லாம் கேக்கறப்ப கொதிக்கிறதேப்பா! உங்களைக் கூடப் பிடிச்சுண்டு போய் ரொம்ப நாளுக்கு முந்தி ஜெயில்ல வெச்சா இல்லே? ஜெயில் எப்படிப்பா இருந்தது?"

"குழந்தையும் குட்டியுமா இருக்கிற நமக்கு எதுக்குடா இந்தக் காங்கிரசும் கத்திரிக்காயும்னு தலைதலையா அடிச்சுண்டேன். உங்கப்பா கேட்டானா? கேக்கல்லியே. அதோட பலன், ரெண்டு வருஷம் ஜெயில்ல இருந்துட்டுப் பாதி உடம்பும் சிரங்கும் சீக்குமா வந்து சேர்ந்தான். அவனோட பழைய உடம்பைத் திருப்பிக் கொண்டு வரதுக்குள்ள நான் பட்ட பாடு இருக்கே.... ராமராம" என்று விசாலம் அலுத்துக் கொண்டாள்.

"உங்களை எதுக்குப்பா ஜெயில்ல வெச்சா?"

"உனக்கு வாஞ்சிநாதன் பற்றி தெரியுமோல்லியோ. அதான் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றவன். வாஞ்சிநாதன் பத்தின ரகசிய சுற்றறிக்கை ஒண்ணு சென்னைல விநியோகமாச்சு. ஒரு பிரதியை நம்மாத்துல போலீசார் தேடிக் கண்டுபிடிச்சுட்டாங்க. அதனால எனக்கு ரெண்டு வருஷ ஜெயில் வாசம் கிடைச்சுது! அப்ப நீ ரெண்டு வயசுக் குழந்தைடா, ரமணி...."

"ஒரு சின்னக் குழந்தையையும் ரெண்டுங்கெட்டான் கங்காவையும் வெச்சுண்டு உங்கப்பா திரும்பி வர்ற வரைக்கும் நான் பட்ட பாடு இருக்கே.... ஏழேழு ஜென்மத்துக்கும் போறுண்டாப்பா."

ரமணியின் நெற்றியில் சிந்தனைக் கோடுகள் படர்ந்தன.

40

கங்காதரனைப் பொறுத்த மட்டில் ஒன்றில் மட்டும் அவன் உறுதியாக இருந்தான். படிப்பை முடிக்காமல் எந்தப் போராட்டத்திலும் ஈடுபடக்கூடாது என்பதே அது. தேசம், விடுதலை, போராட்டம் என்றெல்லாம் சக நண்பர்களுடன் விவாதித்து வந்த கங்காதரன், அவர்கள் படிப்பை விட்டுக் களத்தில் குதித்த போது அவன்

எம்.ஏ.சி. அறக்கொடை

டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் பரிசுத் திட்டம்

எம்.ஏ.சி. அறக்கொடை நிறுவனத்தார் தங்களுடைய இருபத்தி ஒன்றாவது (1995) ஆண்டிற்குரிய பரிசிற்காக 1991-1994 ஆண்டுகளுக்கிடையே வெளியிடப் பெற்றுள்ள தமிழ் நூல்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். நூல்களை அனுப்பி வைக்க வேண்டிய இறுதி நாள் 28-2-1995. பரிசுத் திட்டம் குறித்த முழு விவரங்களை

செயலாளர், நிர்வாகக்குழு,
''டாக்டர் ராஜா சர் அண்ணாமலை
செட்டியார் பரிசு''
எம்.ஏ.சி.ஜி.சி.எச் பிளாக்-2,
வி.எச்.எஸ். வளாகம்,
டி.டி.டி.ஐ. அஞ்சல்,
சென்னை - 600 113.

என்ற முகவரிக்கு எழுதிப் பெறவும்.


மட்டும் அவ்வாறு செய்யாதிருந்தமைக்காக அவர்களால் கிண்டல் செய்யப்பட்டதுண்டு. ஆனால் கங்காதரன் அவர்களது கேலியைச் சட்டை செய்யவில்லை. வெள்ளைக்காரனை எதிர்ப்பதற்கு வெறும் கைவலிமை மட்டும் போதாது, கல்வி வலிமையும் வேண்டும் என்று அவன் திடமாக நம்பினான். அதனால்தான் தனது ஆவலை வெகுபாடு பட்டுக் கட்டுப் படுத்திக் கொண்டு படிப் பைத் தொடர்ந்து கொண்டிருந்தான்.

"அப்பா! படிப்பை முடிச்சுட்டு நானும் களத்துல குதிக்கலாம்னு இருக்கேன். வடக்கே போகலாம்னு நினைக்கிறேன். அங்கதான் நிறையப் புரட்சி இயக்கங்கள் இருக்கு. எங்க காலேஜுக்கெல்லாம் அடிக்கடி துண்டுப் பிரசுரங்கள் தபால்ல வருது. இன்னாருக் குன்னு பேரு போடாம, 'சீனியர் மோஸ்ட் ஸ்ட்யூடன்ட் இன் பி.ஏ. க்ளாஸ்'னோ, இல்லே, 'ஃபர்ஸ்ட் ரேங்க் ஸ்ட்யூடன்ட்'னோ அட்ரெஸ் பண்ணி வருது. வங்காளத்துல இருக்கிற சிட்டகாங்லேருந்து வருது. அங்க சூர்யாசென் என்கிற ஒரு ஸ்கூல் டீச்சர் இண்டியன் ரிபப்ளிகன் ஆர்மின்னு ஒரு புரட்சிப் படையை ஏற்படுத்தி இருக்காராம். அங்கே போய்ப் பார்த்து அதுல சேரலா மான்னுட்டு ஓர் எண்ணம். நீங்க என்னப்பா சொல்றேள்?"

ராமசாமிக்கு இதயத் துடிப்பு ஒரு முறை நின்றுவிட்டுத் துடிக்கத் தொடங்கியது. 'அப்படியானால் இவனை நான் இழக்கப் போகிறேனா? குஞ்சம்மா இன்றைய தேதி யில் உயிரோடு இருந்தால் எப்படியெல்லாம் அழுது புரண்டு ஆகாத்தியம் பண்ணி இவனைத் தடுக்கப் பார்ப்பாள்' என்று அவரது எண்ணம் ஓடியது.

"படிப்பு முடியட்டும். இதைப் பத்தி அப் புறமா யோசிச்சு ஒரு முடிவுக்கு வரலாம். நீ சொல்ற சூர்யா சென்னைப் பத்தி நானும் கேள்விப்பட்டிருக்கேன், கங்கா. 'ஒரு டீச்சரா இருந்துண்டு இவ்வளவு சாதிக்கிறார். நாமும்தான் டீச்சரா இருக்கோம். என்ன சாதிச்சோம்?' அப்படின்னு நான் நினைச்சுக் கிறதுண்டு. 'உடற்பயிற்சிக்கான க்ளப்'னு ஒரு அமைப்பை ஏற்படுத்திட்டு அதுல சின்னச் சின்னப் பசங்களுக்கெல்லாம் கத்திச் சண்டை, குத்துச் சண்டை, துப்பாக்கி சுடறது இதுலேயெல்லாம் தக்க ஆள்களை வெச்சு ட்ரெய்ன் பண்ணிண்டிருக்கார்னு கேள்வி."

"நானும் அண்ணா கூடவே கிளம்பிச் சிட்டகாங்குக்குப் போயிடறேனேப்பா? ஒரே த்ரில்லா இருக்கு, இல்லே" என்றான் ரமணி.



பெண்களைப் பாரா விரதர்!

இயற்கை எழில் கொஞ்சும் கோதையூர். தென் குமரியில் உள்ளது. எங்கள் தெருவில் ஓர் அதிசய மனிதர். இரவு, பகல், மழை, வெயில் என்று எல்லா நேரத்திலும் குடையை விரித்துத் தமது முகத்தை மறைத்துக் கொண்டுதான் செல்வார். ஆபீஸுக்கும் அப்படியே. பால்காரி, தயிர்க்காரி என்றாலும் குடையால் முகத்தை மறைத்துக் கொண்டுதான் வாங்குவார். காரணம், அவர் முகத்தை எந்தப் பெண்ணும் பார்க்கக்கூடாது; அவரும் பெண்களைப் பார்க்கக்கூடாது என்பதுதான். எனவே, என்ன முயன்றும் என்னைப் போன்ற பெண்களால் அவர் முகத்தைப் பார்க்க முடிந்ததேயில்லை. இதனாலேயே அவரைக் 'குடைச்சாமி' என்று கேலி செய்வோம். எதற்காக இப்படியொரு விரதம்? அவருடைய மனைவி ஓடிப் போய்விட்டதுதான் என்று ஊர்ப் பெரியவர்கள் சொன்னார்கள். இது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததுதான் என்றாலும் இன்றைக்கும் என்னால் மறக்க முடியவில்லை!.

பம்பாய் - 88, எஸ். விஜிபிரியா

"இதோ பாரு, ரமணி, ஒரு வீட்டுக்கு ஒருத்தர்தான் போகலாம். எல்லாரும் ஓடிட்டா அப்புறம் குடும்பத்துக்குன்னு செய்ய வேண்டிய கடமைகளை யாரு செய்யறது? எனக்கும் உங்க அத்தைக்கும் வயசாயிண்டிருக்கு. கங்கா பெரியவன். அவனே படிப்பை முடிச்சுட்டுத்தான் சேரப் போறான். நீ பாட்டுக்கு அதிகப் பிரசங்கித்தனமால்லாம் மனசை அலையவிடாதே, படிப்பைக் கவனி."

"படிப்பு முடிஞ்சதும் கௌம்பிடுவேம்ப்பா... உங்க ஆசீர்வாதத்தோட" என்றான் கங்காதரன்.

அவரது நாட்டுப் பற்று, சுதந்திர ஆர்வம், கொள்கைப் பிடிப்பு இவற்றையெல்லாம் கடந்து, ராமசாமி கண்களில் இலேசாக நீர் திரை இட்டது. அதை மகன்கள் கவனித்துவிடாதிருப்பதற்காக விழிகளைத் தாழ்த்திய படி எதிரே இருந்த புத்தகத்தை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு புரட்டினார்.

"என்னப்பா பேசாம இருக்கேள்?"

"போயிட்டு வா, கங்கா. ஜாக்கிரதையா மட்டும் இருக்கணும். உணர்ச்சிவசப்பட்டு ஆபத்துல சிக்கிக்கக் கூடாது. அநாவசியமா காயம் பட்டுக்கிறது, உயிருக்கு அபாயம் ஏற்படுத்தக்கூடிய சாகசங்கள்ள ஈடுபடறது இதெல்லாம் வேண்டாம். என்னிக்கோ ஒரு நாள் சாகத்தான் போறோம். ஆனா அநாவசியமா சாகக்கூடாது. நிறைய சாதிக்கிற வரைக்கும் உயிரோட இருக்கப் பார்க்கணும்... இதை மட்டும் எப்பவும் ஞாபகம் வெச்சுக்கோ."

"சரிப்பா."

அன்றிரவு முழுவதும் ரமணி தூங்காமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். பதினேழு வயது வாலிபத் துள்ளலிலும், அச்சமறியா நிலையிலும் சிட்டகாங்குக்குப் புறப்பட்டுப் போய் அந்தப் பள்ளிக்கூட வாத்தியார் சூர்யா சென்னை எப்படியாவது கண்டு பிடித்துச் சந்தித்து, அவரது கூட்டத்தினருள் தானும் ஒருவனாக இடம் பிடிக்க வேண்டும் எனும் பரபரப்பு அவனுள் பொங்கியது. கங்காதரனைத் தான் முந்திக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தான். கங்கா படிப்பை முடித்துவிட்டு தேச சேவையில் ஈடுபட்டு விட்டால் பிறகு தனக்கு வாய்ப்புக் கிட்டாது. அப்பா சொன்னது போல குடும்பக் கடமையைத்தான் தானே ஏற்க வேண்டியிருக்கும்!


அவன் இரவு இரண்டு மணிக்கு எழுந்து ஒரு பேனாவையும் தாளையும் தேடி எடுத்தான். மறுநாள் காலை அந்த வீட்டுக்குச் சோகம் ததும்பிய நாளாக விடிந்தது.

(தொடரும்)

டைரக்டர் : நான் எடுக்கிற ஒவ்வொரு படமும் ஒருத்தரையாவது கண்டிப்பா பாதிக்கும்.

நண்பர் : தயாரிப்பாளரைத்தானே சொல்றீங்க...?

— சீர்காழி வி. ரேவதி



எமது புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள்

We accept Fixed Deposits at the rate of 24% with incentives.

சென்னையில் உங்களுக்கென்று சொந்த வீடு வேண்டுமா?

காசி குரூப் ஹவுசிங் டெபாசிட் ஸ்கீமின் 6-வது ஆண்டின் வெற்றிகரமான 15-வது குலுக்கல் 25.02.95 அன்று காசி திரையரங்கு வளாகத்தில் பிரபல திரைப்பட நட்சத்திரங்களின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இத் திட்டத்தில் புதிதாக வழங்கப்பட்ட GIFT CARD குலுக்கல் மூலம் உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து கவர்ச்சிகரமான சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இத் திட்டத்தில் ரூ. 1,250/- முதல் ரூ. 5,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 277 முதல் 1111 சதுர அடிகள் வரை உள்ள வீடுகளைத் தேர்ந்தெடுத்து சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை சொந்த வீட்டிலிருந்து கொண்டே வாடகை போல செலுத்தலாம். இத் திட்டத்தில் சேருபவர்கள் அனைவருக்கும் ரூ.300/- முதல் ரூ. 1,000/- வரை ஒவ்வொரு கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

சுபமங்களா திட்டம் :

இத் திட்டத்தில் உடன் குடிபுகத் தயாரான நிலையில் உள்ள வீடுகளின் மொத்த தொகையில் ரூ. 10,000/- மட்டுமே செலுத்தி உடனே சொந்த வீட்டில் குடியேறலாம். மீதித் தொகைக்கு நாங்கள் கடன் உதவி ஏற்பாடு செய்து தருகிறோம். இத் திட்டத்தில் வீடு பதிவு செய்பவர்கள் அனைவருக்கும் ரூ. 1,000/- மதிப்புள்ள கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

வீடு கிடைக்கும் இடங்கள் :

சென்னை கே. கே. நகர் மேற்கு, விருகம்பாக்கம், வளசரவாக்கம், சாலிகிராமம், வடபழனி, குமரன் காலனி, கில் நகர் போன்ற இடங்களில் வீடுகள் கட்டித் தருகிறோம்.

ஒரு சதுர அடியின் விலை ரூ. 450/- மட்டுமே!

FIXED DEPOSITS :

நீங்கள் முதலீடு செய்யும் வைப்பு நிதித் தொகைக்கு 24% வட்டியுடன் 2% ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படுகிறது. மேலும் கூட்டு வட்டி வைப்பு நிதியில் நீங்கள் முதலீடு செய்யும் தொகை 3½ ஆண்டுகளில் இரட்டிப்பாகிறது.

மேலும் விவரங்களுக்கு :

காசி ஹவுசிங் & டெவலப்மென்ட் லிமிடெட்

மற்றும்

காசி பில்டர்ஸ்

காசி தியேட்டர் காம்ப்ளக்ஸ்,
91, 92 ஜவாஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை - 600 095.
போன் : 4821969, 4822206 ஞாயிறு முழு நேரம் அலுவலகம் உண்டு.
FAX : 044-4821897

எமது புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள்

நீங்கள் கேட்டவை - தராசு

● **கே. எல். ஸ்ரீதேவி, கே. எல். புனிதா, மேலகிருட்டிணன்புதூர்.**

? அமரர் கல்கி சிறை சென்றுள்ளாரா? அவரது சாதனைதான் என்னே? எங்களுடன் கொஞ்சம் பகிர்ந்து கொள்ளலாமே?

! என்ன இது! 55 வயதே வாழ்ந்து, அதில் நூறு ஆண்டு சாதனைகளை 35 ஆண்டுகளுக்குள் செய்து காட்டியதைப் பற்றி 3-4 வரிகளில் எப்படி கூற முடியும்? படித்துப் பாருங்கள், "பொன்னியின் புதல்வர்" - ஆயிரம் பக்கங்கள். பிரசுரம் : வானதி, சென்னை - 17. எழுதியவர் : சுந்தா.

● **கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.**

? "முப்பரிமாணம்" - ஓர் உதாரணம் சொல்லுங்களேன்?

! சுருதி, லயம், கற்பனை (மனோதர்மம்) என்ற மூன்று பரிமாணங்கள் பின்னிப் பிணைந்து அமையப் பெற்ற கச்சேரியைக் கூறலாம். உதாரணமாக, சமீபத்தில் அகடமியில் டி.வி. சங்கரநாராயணனின் கச்சேரி. 'பகுதாரியை இவ்வளவு விஸ்தாரமாகப் பாட முடியுமா!' என்று பிரமித்துப் போனார்கள் ரசிகர்கள். இழைத்து இழைத்து அலங்கரித்த மாளிகை.

கம்ப்யூட்டர் பாகங்கள் கடத்தலில் அ.தி.மு.க. எம்.பி. தொடர்பு..?

● **விழிமா சரவணன், சென்னை - 15.**

? 'ஏகநாதர் அழைக்கிறார்' என்பதைப் போல் 'வை.கோ. அழைக்கிறார்', 'கலைஞர் அழைக்கிறார்', 'ஜெயலலிதா அழைக்கிறார்' என்றெல்லாம் அந்தந்தக் கட்சித் தொண்டர்கள் விளம்பரம் செய்கிறார்களே?

! இது எவ்வளவோ தேவலாம், குற்றமில்லை. ஆனால் 'ஜெ'யை ராஜராஜேஸ்வரியாக்கியவர்கள் சமீப கிறிஸ்துமஸ்ஸின் போது அவரை மேரியன்னையாகவும் வர்ணித்து மகிழ்ந்திருக்கிறார்களே, அதைச் சொல்லுங்கள்!


● **ஏ. எம். பழனிச்சாமி, கோவை.**

? உலகத் தமிழ் மாநாட்டில் சில தமிழ் அறிஞர்களைப் புறக்கணித்துள்ளதாகப் புகார் எழுந்துள்ளதே?

! இவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் மட்டுமே தமிழறிஞர்கள்; மற்றவர்கள் இல்லை, என்னும் போது அங்கே சில பல தமிழறிஞர்கள் மட்டுமல்ல; தமிழே புறக்கணிக்கப்படுவதாகத்தான் அர்த்தம்!



• அசைவற்ற ஞானயோகி



• ஆணித்தர கருத்து

● **கே. நடராஜன், சிதம்பரம்.**

? பார்த்திபனும் மனைவி சீதாவும் தங்கள் கண்களையும் உடலையும் தானம் செய்வதாக அறிவித்திருக்கிறார்களே? என்ன சொல்கிறீர்கள்?

! "பாராட்டுவோம்" என்கிறேன்.

● **ச. ஜான் ரவி, கோவில்பட்டி.** ❑

? தமிழக அரசு பள்ளி மாணவ மாணவியருக்கு வழங்கும் இலவச சீருடைகள் கல்கத்தா நகர சந்தைகளில் பகிரங்கமாக விற்கப்பட்டுள்ளதாக வந்த செய்திகளின் மீது, தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கை என்னவாக இருக்கும்?

! அடுத்த முறையாவது விஷயம் அம்பலத்துக்கு வராமல் காரியத்தைக் கச்சிதமாக முடிக்கப் பார்ப்பார்களாயிருக்கும்!

● **கே. ஆர். வேலுச்சாமி, வட்டலூர்.**

? சமீபத்தில் படித்ததில் பிடித்தது?


! ஒரு புத்தகத்தைத்தான் குறிப்பிட வேண்டும் என்ற கட்டாயத்தை உங்கள் கேள்வி ஏற்படுத்தாததால், மன்மோகன்சிங்கின் சமீப அறிக்கை. "அரசியல்வாதிகள் தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசும் போது, கூடவே அதை நிறைவேற்றுவதற்கான திட்டங்களையும்



• ...வேறு எந்த ஆளுனரும்...



• வேறு எந்த முதல்வரும்...



• தாளத்துக்குப் பாராட்டு

மக்கள் மன்றத்தில் வைக்க வேண்டும்" என்ற அவரது ஆணித்தரமான கருத்து, என்.டி. ஆருக்கு மட்டுமல்ல; காங்கிரஸ் உள்ளிட்ட எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் உரியது தான். ஆனால் நடக்கப் போவது என்ன? நடந்து முடிந்த மாநிலத் தேர்தல் தோல்விகளைக் கருத்தில் கொண்டு, இனி நடக்கவிருக்கும் மாநிலத் தேர்தல்களைச் சந்திக்க, "மக்கள் நலத் திட்டங்கள்" என்ற பெயரில் கோடிக்கணக்கில் வரிப்பணம் பாழாகப் போகிறது, நிச்சயம்!

● **இ. ராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.**

? ***"சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து, மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு முதலமைச்சர் மீது இதுவரை எந்த கவர்னரும் இதுபோன்ற கண்ணியமற்ற முறையில் பேசியது இல்லை" என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளாரே?***

! சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்று வரை தமிழகத்தின் எந்த ஒரு ஆளுனரிடமும் எந்த ஒரு முதல்வரும் இந்த அளவுக்கு அலட்சியமாகவும், அவமதிப்பாகவும், கண்ணியமற்ற முறையிலும் நடந்து கொண்டதில்லை என்பதும் உண்மை தானே!



• முப்பரிமாணம்!



• பூசணியை மறைத்தார்!

● **மேலை பழ. நாகப்பன், சென்னை - 41.**

? ***கம்ப்யூட்டர் பாகங்கள் கடத்தலில் அ.தி.மு.க. எம்.பி. தொடர்பு?***

! அவர் மீது நடவடிக்கை எடுக்காமல் தப்பித்து விட பிரதமர் அலுவலகம் வரை சென்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இதுபோன்ற குற்றங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகள் உறுதியாக இருக்கவே, ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று. இந்த நிலையில் சாமர்த்தியமாக அவரைக் கட்சியிலிருந்து கழற்றி விட்டுத் தம்மைப் புனிதர் என்று காட்டிக் கொள்கிறார் ஜெ. "எல்லோருக்கும் இது பாடமாக அமையட்டும்" என்று டயலாக் வேறு! காலதாமதமே காட்டிக் கொடுக்கும் என்பது போக, திரை மறைவு முயற்சிகள் வேறு அம்பலத்துக்கு வந்து விட்டனவே!

● **லீலாராம், தக்கலை.**

? ***முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதில் கைதேர்ந்தவர் யார்?***

! சந்தேகமின்றி இன்றைய தேதியில் பேனசிர் புட்டோதான். கராச்சியில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைக்கு என்ன மெய்யான காரணங்கள் என்பதை ஆராய்ந்து, தகுந்த நடவடிக்கைகள் எடுத்து, அமைதியை நிலைநாட்டுவதற்குப் பதில், கராச்சியில் உள்ள இந்திய தூதரகத்தினர் மீது அபாண்ட பழி போட்டு, எல்லோரையும் இடத்தைக் காலி பண்ணச் சொன்னதன் மூலம், உலக அரங்கில் தமது கையாலாகாத்தனம் என்ற முழுப் பூசணியைத் திறமையாக மறைத்து விட்டார்!

● **எச். மோகன், மன்னார்குடி.**

? ***ஜெயில்சிங்?***


! ஒரு ஜனநாயகத்தில் சாமானியனும் மிக உன்னத பதவியை உழைப்பின் மூலம் அடையலாம் என்பதற்கு நிதர்சன எடுத்துக்காட்டு. குடியரசு தலைவர் என்ற முறையில் அரசின் திட்டங்கள், செயல் பாடுகள் குறித்துத் தம்மிடம் கலந்தாலோசித்தே ஆக வேண்டும் என்று ராஜீவிடம் வற்புறுத்தியதன் மூலம், பிரதமரின் வெறுப்பை சம்பாதித்துக் கொண்டாலும் நல்ல மரபுகளை நிலைநிறுத்தி, தமது அச்சமின்மையையும் நிலைநாட்டியவர். போஸ்டல் சட்டத்துக்கு கடைசி வரை அனுமதி மறுத்து, மக்களின் உரிமை காத்த ஜனநாயகவாதி. பிந்திரன்வாலே போன்றோருக்கு அவர்களது உள்நோக்கம் தெரிந்தோ தெரியாமலோ ஊக்கமளித்தது மட்டும் கரும்புள்ளி.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ச. ஜான்ரவி.
38, தெற்கு வடக்கு சந்து,
தனுஷ்கோடிபுரம் புதிய தெரு,
கோவில்பட்டி - 627 701.

● **சோ. இராமு, செம்பட்டி.**

? ***அரசு மருத்துவமனைகளில் பார்வையாளர் கட்டணம் வசூலிப்பு குறித்து?***

! அங்கு நோயாளிகளாக அனுமதிக்கப்படுவோரும் அவர்களைப் பார்க்க வருவோரும் மிகப் பெரும்பாலும் ஏழைகளே என்பதால் மனிதநேயமற்ற செயல். பார்வையாளரிடம் கண்டிப்புக் காட்டலாம். சுத்தம் - சுகாதாரம் வலியுறுத்தலாம். நோயாளிகளுக்கு வசதிகளை அதிகரிக்கலாம். இதையெல்லாம் செய்வதை விடுத்து, இந்த பிசாத்து கட்டண கலெக்ஷனில் இன்னொரு மருத்துவமனை மாளிகையா கட்டி விடப் போகிறது அரசு? ஷேம்!



காயத்ரி ஞானவாபி

இறந்தவர்களின் கர்மாக்களைச் செய்வதற்காக சகல வசதிகளுடன் கட்டப்பட்டு இதுவரை 500 க்கும் மேற்பட்ட காரியங்கள் தடங்கலின்றி நடந்துள்ளது. தற்சமயம் நான்கு முதல் ஐந்து கர்மாக்களை ஒரு நாளைக்குச் செய்ய வசதி உள்ளது. வளரும் மக்கள் தொகை மற்றும் தேவை கருதி, மேலும் விரிவுபடுத்தும் திட்டத்தில் உள்ளோம். சாஸ்திரத்தில் உள்ளது போல் ஸ்நானம் செய்ய ஒரு குளமும் இந்த ஞானவாபியில் கட்டத் திட்டமிட்டுள்ளோம். இதற்காகத் தற்சமயம் உள்ள கட்டடங்களுக்கு இடையில் உள்ள ஒரு மனையை வாங்கத் திட்டமிட்டுள்ளோம்.

ஸ்ரீ காயத்ரி டிரஸ்ட் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, திட்டமிட்டு கட்டி நிர்வகித்து வருகிறது. மேலும் தற்சமயம் உபயோகத்தில் உள்ள பிணவறை ஊர்தி (patrol) மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் இதனை மாற்றி ஒரு புதிய ஊர்தி வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டச் செலவிற்கு உங்களிடம் கையேந்தி நிற்கின்றோம். நாங்கள் இந்தத் தொண்டினைச் செய்வது பொதுமக்களாகிய உங்களிடமிருந்து பெறும் நன்கொடை மூலம்தான். இந்த நன்கொடைக்கு வருமான வரி விலக்கு 80 G உள்ளது.

உங்கள் நன்கொடையை **ஸ்ரீ காயத்ரி டிரஸ்ட், 45, லட்சுமி நகர், குரோம்பேட்டை, சென்னை - 600 044.** என்ற முகவரிக்கு அனுப்பும்படி பணிவன்புடன் வேண்டுகிறோம்.

தொலைபேசி : 402399

கிராமச் சுவை...



காத்திருக்கும் தாத்தா....

தனக்குத்தானே கல்லறை கட்டிக் கொண்டு மரணத்துக் காகக் காத்திருப்பவர் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் பெயர் ஏகதாசன். 117 வயது. (அம்மாடியோவ்!) குமரி மாவட்டத்தில் கடையாலு மூடு என்ற கிராமத்தைச் சேர்ந் தவர். எந்த வகையிலும் பிற ருக்குத் தன் மரணம் ஒரு பாரமாக இருக்கக் கூடாதென்ற காரணத்தால் பத்து வருடங்கள் முன்பே தமக்கென ஒரு கல்லறை எழுப்பி, அதில் பிறந்த தேதியும் (30-3-1877) குறிப்பிட்டு, மரணத் தேதி நிரப்பும் வேலையை மட்டும் மற்றவர்களுக்கு விட்டு, காத்திருக்கிறார் இந்த அபூர்வத் தாத்தா!

- அ. செபாஸ்டியன், கடையல்.

திண்ணைப்பள்ளி விஞ்ஞானி

வத்திராயிருப்பு, காமராசர் மாவட்டத் தில் ஒரு கிராமம். முன்காலத்தில் வைத்தி வாத்தியார் என்பவர் இங்கே ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருந் தார். அங்கு படித்த வர்தான், நம் நாட்டின் தலை சிறந்த விஞ் ஞானிகளுள் ஒரு வரான கே. எஸ். கிருஷ்ணன். சமீபத்தில் இவ்வூர்ப் பள்ளியில் நடைபெற்ற ஒரு விழாவுக்கு வந்திருந்த கிருஷ்ணன், 'வைத்தி வாத்தியார் தமது திண்ணைப் பள்ளியில் எனக்கு போதித்த வான சாஸ்திரம்தான், பிற் காலத்தில் நான் ஒரு விஞ்ஞானியாக மலர அடித்தளம் வகுத்தது' என்று பேசிய போது அவரது குருபக்தியும், மாறாத பழைய திண்ணைப்பள்ளி நினைவுகளும் எங்களுக்கு வியப்பைத் தந்தன.

- அரிஹரகிருஷ்ணமூர்த்தி, வத்ராயிருப்பு.

பலிகடா?

சரித்திரச் சிறப்புமிக்க 'செங்கோட்டை' எங்கள் ஊர் என்பதில் நிரம்பப் பெருமிதம் உண்டு எனக்கு. இசை மேதை கிட்டப்பா, கணித மேதை எஸ். எஸ். பிள்ளை, நடிகர் எஸ்.வி. சுப்பையா, சுதந்திர வீரர் வாஞ்சிநாதன் போன் றோர் பிறந்த மண் இது.

ஒரே ஒரு பெரும் குறை எங்களுக்கு! இங்குள்ள வாஞ்சி நாதன் சிலையில் "பலிநாள் - 17.6.1911" எனப் பொறித்திருக்கிறார்கள். தேச சுதந்திரத்திற் காக இன்னுயிர் ஈந்த வாஞ்சிநாதனை 'பலி கடா' என்றா குறிப்பது? வெட்கம்!

- ஏ. பொன்னியம்மாள், செங்கோட்டை.

மாவடு கிராமம்

கொடைக் கானல் மலைச் சரிவில் இயற்கைச் சூழலில் அமைந்துள்ள எங்கள் பெரிய குளம் கிராமம், சுவையான குடிநீருக் கும், சர்ரென்று உறைக்கும் மாவடுவுக்கும் பெயர் போனது. பயிர் பச்சை, விவசாயம் என வாழும் குடிமக்களுக்குப் பெருமை சேர்ப்பது மாவடு மட்டுமல்ல; பழம்பெரும் பாலசுப்ரமணிய சுவாமி கோவிலும்தான். திரைப்படக் கலைஞர்கள் எஸ்.எஸ்.ஆர்., மேஜர், கருணி, அருந்ததி போன்றவர்கள் இந்த ஊரைச் சேர்ந்தவர்கள்தான். தவிர, அக்காலத்திலேயே கூடைப் பந்தாட்ட வீரர் களை உருவாக்கிய மண் இது! இன்று கூடைப் பந்தாட்டத்தில் ஒலிம்பிக் வரை சென் றிருக்கும் அமர்நாத், எங்க ஊர்க்காரர்தாங்க!

- பெ. அ. சங்கரன், சென்னை - 5.

எகிறிய பிள்ளையார்

தோமூகிரிப்பட்டி - பெயர்க் கார ணம் தெரியுமா? ஒரு பயில்வான், ஒரு

கிராமத்திலிருந்து பிள்ளையார் சிலை ஒன்றைத் திருடிக் கொண்டு தோழுகிரிப்பட்டி வழியே வந்தானாம். அப்போது எதிர்பாராத விதமாக, அவன் தோளிலிருந்து எகிறி விழுந்த பிள்ளையார் சிலையை மறுபடி எடுக்க, அசைக்கக் கூட முடியவில்லை அவனால்! பிள்ளையார் அங்கேயே கோவில் கொண்டார்! தோள் எகிறிப்பட்டிதான் தோழுகிரிப்பட்டியானது என்கிறார்கள்!

- சரஸ்வதி பஞ்சு, திருச்சி - 20.

கின்னஸ் மனிதர்!

333 நாட்களில் 74 ஆயிரம் கி.மீ. சைக்கிள் சாதனை, நடப்பதில் சாதனை, ஓடுவதில் சாதனை, லிம்கா புக்கில் இடம்பெற்ற சாதனை என்று 56 வயதில் இது வரை 7 சாதனைகளுக்குச் சொந்தக்காரர், எம். ஏ. சுந்தரம். அருப்புக்கோட்டை அருகே புலியூரான் கிராமவாசி. இவரது அடுத்த சாதனையாக, தமது பயண அனுபவங்களை 5 கி.மீ. நீள (!) காகித ரோலில் 66, 667 வரிகளில், 2 லட்சத்து ஒரு வார்த்தைகளில் - இடையில் முற்றுப்புள்ளியே இல்லாமல் எழுதி வருகிறார், கின்னஸ் சாதனைக்காக! தவிர, கவிதை, ஓவியத் துறைகளிலும் உலக சாதனைக்காகத் தயாராகி வரும் இவர் இன்று வரை உடல் நலக் குறைவு என்று ஒரு மருந்தும் உட்கொண்டதில்லை!



- என். சந்திரன்,
அருப்புக்கோட்டை.

மரம் வளர்த்த மேதை

சிவகாசிக்கு வடக்கே, புதுப்பட்டிகூடமுடையார்கோவில் செல்லும் சாலையில் சுமார் 1½ கி.மீ. தூரம் அருமையான வேப்ப மரங்கள் சாலைக்குக் குடைபிடிக்கும். 200க்கும் மேற்பட்ட மரங்கள். எல்லாம் ஒரு தனி மனிதர் 30 ஆண்டுகள் புனிதப் பணியாகக் கருதி வளர்த்தவை. ஆறு பெண்களைப் பெற்ற அவர் ஓர் ஆண் மகவு வேண்டி அருந்தவமாய், தர்மச் செயலாய் எண்ணி, நட்டு, வளர்த்தவை. அவர் - வடபட்டி கருப்பசாமி தேவர் மகன் தங்கையா தேவர். காமராஜர் முதலமைச்சராக இருந்த போது, இவர் பணியைப் பாராட்டி, ஏதேனும் உதவ முன் வந்த போது தர்மத்துக்கு உதவி பெற மறுத்த உத்தமர். இன்று அவர் இல்லை. வறுமையின் பிடியில் அவர் பெண்கள் மட்டும்!

- குரு. தேன்மொழி,
திருச்செந்தூர்.

சிற்பம் - சிறப்பு

தேவிகாபுரம் - சம்புவராயர் மாவட்டத்தில் ஒரு கிராமம். இங்குள்ள முக்கியச் சிறப்பு ஞானகிரீஸ்வரர் மலைக் கோவிலிலுள்ள அற்புதச் சிற்பங்கள். சாம்பிளுக்கு இங்கே ஒன்று. யானை வடிவில் அமைந்துள்ள பெண்களின் மேல் அமர்ந்து வில் விடும் பிறிதொரு பெண். வேறெங்கும் பார்த்திருக்கிறீர்களா இது போல்?

- ஏ. கே. லலிதா, தேவிகாபுரம்.



கிராமம், கிராமம்தான்!

குமரி மாவட்டம் விளவன் கோடு, கல்குளம் தாலூகாக்களைப் பிரிப்பது கோதையாறு. இந்த ஆற்றைக் கடக்க மக்கள் பயன்படுத்துவது 'தெப்பம்'தான்! (மூங்கிலால் ஆன 'சங்காடம்') இரு கரைகளிலும் கயிறு கட்டி, கயிற்றை இழுக்க, காலின் விசையால் தெப்பம் நகர்கிறது! ராஜாக்கள் காலத்திலிருந்தே இதுதான் வழி!

விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறியும் கிராம வழக்கங்கள் இன்னும் அப்படியேதான் உள்ளன!

- அ. செபாஸ்டியன்,
கடையல்.

3 உட்பக்கமாய்த் தாழிடப்பட்டிருந்த கதவை, சிரமத்தின்பேரில் உடைத்துக் கொண்டு உள்ளே போக இன்ஸ்பெக்டர் அரவிந்துக்கு அரை மணி நேரம் பிடித்தது.

அகிலின் ரத்த சேதம் இப்போது அதிகமாய்த் தெரிந்தது. படுக்கை விரிப்பு, தலையணை, டீபாய், சோபா கவர் என்று பார்த்த பொருள்களிலெல்லாம் ரத்தத் தீற்றல்கள்.

அகிலின் முகம் க்ளோஸப்பில் மஹா கோரம்.

அதற்குள் விஷயத்தைக் கேள்விப்பட்டு, ஃபாரன்ஸிக் அதிகாரிகளோடு ஸ்தலம் வந்து சேர்ந்திருந்த டி.எஸ்.பி. விஜயசாரதி, இன்ஸ்பெக்டர் அரவிந்தனிடம் கடுகடுத்தார்.

"அகில்... ஒரு வெல்-நோன் ஆர்ட்டிஸ்ட். நேத்து ராத்திரியே அவரோட உயிருக்கு ரெண்டு தடவை ஆபத்து வந்திருக்கு. நீங்க உடனே அலர்ட்டாகி கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செஞ்சிருக்கணும். ஏதோ பேருக்கு ஒரு செண்ட்ரி கான்ஸ்டபிளை ஃப்ளாட் வராந்தாவில் நிக்க வெச்சுட்டா போதுமா...?"

அரவிந்தன் மென்று விழுங்கினார். "ஸார்... இதுவே ஒரு தனி பங்களாவா இருந்திருந்தா... பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகமா பண்ணியிருப்பேன். இது பல பேர் வசிக்கக் கூடிய ஒரு ஃப்ளாட். அதிகப்படியான தேவையில்லைன்னு நினைச்சேன்."

"அந்த ஆணும் பெண்ணும் எப்படி உள்ளே புகுந்து காரியத்தை முடிச்சாங்கன்னு தெரியலையே...?"

"செண்ட்ரி கான்ஸ்டபிள் வராந்தாவிலேயே இருந்திருக்கார். அகில் உட்பக்கமா கதவைத் தாழ் போட்டிருக்கார். இந்த ஃப்ளாட்டுக்குப் பின்பக்கக் கதவு எதுவும் இல்லை."

"பாத்ரூம் எங்கே...?"

"அதோ... அந்தப் பக்கம்."

போய்ப் பார்த்தார்கள்.

ஸ்லைடிங் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட ஜன்னல் பார்வைக்கு கிடைக்க, டி.எஸ்.பி. விஜயசாரதி அந்த கண்ணாடிகளை ஒவ்வொன்றாய் உருவி விட்டு வெளியே தலையை நுழைத்துப் பார்த்தார்.

அபார்ட்மெண்டின் பின்பக்கப் பகுதி அது. ஏராளமான கழிவுநீர்க் குழாய் இணைப்புகள் தெரிந்தன.

அரவிந்தனிடம் கேட்டார்.

"அந்தக் கொலையாளிகள் ட்ரெய்னேஜ் குழாய்களைப் பற்றிக் கொண்டு மேலே வந்திருக்கலாமோ...?"

"அப்படியே வந்திருந்தாலும் இந்த ஜன்னல் வழியா ஒரு ஆள் உள்ளே நுழையறது கஷ்டம் ஸார்..."

"பின்னே எப்படி கொலையாளி வந்திருக்க முடியும்... இந்த ஃப்ளாட்ல வேற ஏதாவது வெண்டிலேட்டர்ஸ் இருக்கான்னு பாருங்க..."

இருவரும் குளியலறையை விட்டு வெளியே வர, ஃபாரான்ஸிக் ஆபீஸர் ஒருவர் எதிர்ப்பட்டார். கையில் கர்ச்சீப்பால் போர்த்தப்பட்ட ரத்தம் உறைந்து போன கத்தி. ஸ்டெயின்லெஸ் ஸ்டீலினாலான ஒன்பது அங்குல கத்தி அது.

விஜயசாரதி கேட்டார்.

"கத்தி எங்கே கிடந்தது...?"


"கட்டிலுக்குக் கீழே..."


"டேக் கேர்! ப்ரஸர்வ் த ஃபிங்கர் பிரிண்ட்ஸ்..." அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, இன்னொரு ஃபாரன்ஸிக் ஆபீஸர் கையில் ஒரு கவரோடு இன்ஸ்பெக்டர் அரவிந்தனை நெருங்கினார்.

"ஸார்... இந்தக் கவர்ல உங்க பேர் எழுதியிருக்கு. கவருக்குள்ளே ஏதோ ஆர்ட் பண்ணின கார்ட்ஸ் இருக்கு."

அரவிந்தன் வாங்கிப் பிரித்தார்.

இரண்டு போஸ்ட் கார்டு சைஸ் அட்டைகளில் ஓர் இளைஞனின் முகமும் ஒரு பெண்ணின் முகமும் இண்டியன் இங்க்கால் வரையப்பட்டு





இருந்தது. அந்த ஓவியங்களை விஜயசாரதிக்குக் காட்டிக் கொண்டே அரவிந்தன் சொன்னார்.

"ஸார்...! ஆர்ட்டிஸ்ட் அகிலுக்கு ஒருத்தரை ஒரு நிமிஷம் பார்த்தாலே போதும். அவரை அப்படியே வரையக்கூடிய திறமை இருந்தது. நேத்து ராத்திரி அகில் என்கிட்ட கொலை செய்ய முயற்சி பண்ணின, அந்த இளைஞனோட முகத்தையும் பெண்ணோட முகத்தையும் வரைஞ்சு தர்றதாச் சொன்னார். சொன்னபடியே வரைஞ்சும் வெச்சிருக்கார். அதுக்கப்புறம்தான் கொலை செய்யப்பட்டிருக்கார்."

"இங்கே சென்ட்ரி இருந்தது யாரு...?"

"கான்ஸ்டபிள் நடராஜன்..."

"அவரைக் கூப்பிடுங்க..."

தகவல் போய், அறைக்கு வெளியே நின்றிருந்த சென்ட்ரி கான்ஸ்டபிள் நடராஜன் வேகவேகமாய் வந்து சல்யூட்டோடு நின்றார்.

டி.எஸ்.பி. அவரை ஏறிட்டார். "உள்ளே ஆள் கழுத்தறுபட்டு செத்துக் கிடக்கார். உனக்கு எந்தச் சத்தமும் கேட்கலையா... மேன்...?"

"கேட்கலை... ஸார்..."

"தூங்கியிருப்பே...?"

"நோ... ஸார்... ராத்திரி பூராவும் துளிக் கூட கண்ணை மூடலை..."

"இவ்வளவு பெரிய படுகொலைக்கு ஒரு அலறல் சப்தம் கூட கேட்கலைன்னா அது ஆச்சர்யம்தான்..."

இன்ஸ்பெக்டர் அரவிந்தன் குறுக்கிட்டார். "ஸார்! என்னோட அஸெம்ஷனைச் சொல்லட்டுமா...?"

"சொல்லுங்க..."

"ஆர்ட்டிஸ்ட் அகிலை மொதல்ல மயக்கத்துக்கு உட்படுத்தி, அவர் மயங்கிக் கிடக்கும் போது கழுத்தை அறுத்துக் கொலைச் செய்திருக்கலாம்..."

"அகிலுக்கு நெருங்கின ஃப்ரண்ட்ஸ் யாரு?"

"நேத்திக்கே கேட்டேன் ஸார். ஃப்ரண்ட்ஸ் யாரும் கிடையாதுன்னு சொல்லிட்டார்...."


டி.எஸ்.பி. மறுபடியும் தன் கையில் இருந்த அந்த ஆண்-பெண் ஓவியங்களின் மேல் பார்வையைச் செலுத்தினார்.

"யார் இவர்கள்? திடீரென்று அகிலை துரத்தித் துரத்திக் கொலை செய்கிற அளவுக்கு அவர்மேல் இவர்களுக்கு என்ன கோபம்...? ஒரு ஓவியனின் மேல் அப்படி

ராஜேஷ்குமார்

உலகம் மாபெரும்
முன்னேற்றமடைந்த
ஒன்றிணைந்த
ஒரே கிராமமாக
மாறிவிட்டது,
ஐ.டி.பி.ஐ. அதிலே
பத்தாவது மிகப்பெரிய
முன்னேற்ற
நிதி நிறுவனமாக
வளர்ந்துள்ளது.

“நண்பா,
உலகம் சாதனைபுரிபவர்களுக்கு
மதிப்பளிக்கிறதன்றோ!”



உலக பொருளாதாரத்துடன் இந்தியா எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் முற்றிலும் ஒன்றிணைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சர்வதேச மூலாதார தேவையும் அதிகரிக்கும்.

இச்சூழ்நிலையில் திரம்பட போட்டிப் போடுதல், தொழிற்கூடங்கள் அளவிலும், உற்பத்தித் தரத்திலும், நிர்வாக போக்கிலும் சர்வதேசமயமாக வேண்டும்.

மிகப்பெரிய வாய்ப்பு உள்ளது. மேலும் அதற்கு தேவைப்படும் நிதி மூலாதாரங்களும் திறமைகளும் மிகவும் அதிகமாகும்.

முற்போக்குக் கொள்கை யுகத்திற்கு ஐ.டி.பி.ஐ. மூலாதாரமாய்த் திகழும்

- இந்தியாவிலேயே மிகப்பெரிய முன்னேற்ற நிதி நிறுவனம். உலகிலேயே பத்தாவது மிகப்பெரிய ஒன்று.
- 30 ஆண்டுகளாக தலைமை ஸ்தானத்தில் விளங்குகிறது. பவர், பெட்ரோலியம், கட்டமைப்பு, சுற்றுலாத்துறை, செய்தித் தொடர்புத் துறை போன்ற முக்கிய துறைகளில் ஏற்பட்டுவரும் வாய்ப்புகளை சமாளிக்க ஒப்பற்றவிதம் செயல்பட உள்ளது ஐ.டி.பி.ஐ.
- ஒரு சர்வதேச கடன் இஷ்யூவிற்கு மிக அதிகப்படியான கிரிடிட் ரேட்டிங் (BBB + ஜப்பான் பாண்டு ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் மூலம்) பெற்றுள்ள இந்திய பாரோவராகும்.
- மற்ற எல்லா இந்திய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களைவிட இந்திய தொழிற் துறைக்கு, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியா நாடுகளின் மூலதன மார்க்கெட்டுகளிலிருந்து மிக அதிக அளவு ஃபோரெக்ஸ் நிதி திரட்டியுள்ளது.

மேலும் உலகிலுள்ள அனைத்து முன்னேற்ற நிதி நிறுவனங்களுள் பத்தாவது மிகப்பெரிய ஒன்றாகத் திகழும், மற்றும் போதுமான மூலதன விகிதம் 13.4% கொண்ட ஐ.டி.பி.ஐ. அதற்கு வழிகோலும். உருவாகிவரும் பொருளாதார சூழ்நிலைக்கு, இந்திய தொழில்துறை ஆதாரத்திற்கு ஐ.டி.பி.ஐ. முக்கிய பங்கு வகிக்கும்.

IDBI

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆஃப் இந்தியா
ஐ.டி.பி.ஐ. டவர், கஃபே பரேடு, பம்பாய் - 400 005.

இந்திய பொருளாதாரத்திற்கு தூணாய் விளங்குவது.

Adfactors/IDBI/295/94 C TM

யென்ன பகை? அரவிந்தன்!"

"ஸார்...?"

"அகில் ஒரு ஆர்ட் காலரி வெச்சிருக்கார் இல்லையா?"

"ஆமா ஸார்..."

"அது எங்கே இருக்கு?"

"காந்திபுரம் செவன்த் க்ராஸ் ரோட்ல ஸார்..."

"அந்த ஆர்ட் காலரியைப் பார்க்கணும்..."

காந்திபுரம் செவன்த் க்ராஸ் ரோட்டின் ஆரம்பத்திலேயே ஒரு ரெட் ரெஜியா மரத்தின் நிழலில் அகில் ஆர்ட் காலரி தெரிந்தது. அகில் வீட்டில் இருந்த ஒரு சாவிக் கொத்தை உபயோகப்படுத்தி, ஆர்ட் காலரியைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள், டி.எஸ்.பி. விஜய சாரதியும் இன்ஸ்பெக்டர் அரவிந்தனும்.

22' x 16' என்ற அளவில் இருந்த அந்த ஹாலில் நான்கு சுவர்களிலும் ஆர்ட் காட்போர்டு சதுரங்கள். அந்த சதுரங்களில் அநேகமாய் பெண் ஓவியங்கள்.

ஒருத்தி சிரித்தாள். ஒருத்தி அருவியில் குளித்தாள். தடாகத்தில் பூத்திருந்த ஒரு தாமரைப் பூவை ஒருத்தி பறித்தாள்.

விஜயசாரதி வியந்தார்.

"ஓவியம் மாதிரியே இல்லை. நேர்ல பார்க்கிற மாதிரி இருக்கு. அகில் உண்மையிலேயே ஒரு டேலண்டட் ஆர்டிஸ்ட்தான்..."

"அகிலோட கொலைக்குக் காரணம் ப்ரொஃபஷனல் ஜெலஸியாக இருக்கலாம் ஸார். அகிலை அடிக்கடி பார்க்க வர்றது யார்ன்னு தெரிஞ்சா அந்த நபர் மூலமா ஏதாவது ஹோல்டிங் கிடைக்கலாம்..."

"ஆர்ட் காலரிக்குப் பக்கத்தில் எந்தக் கடைகளும் இல்லை. எதிர்ல ஒரு ஸ்டேஷனரி மார்ட் இருக்கு. அங்கே யாராவது இருந்தா என்கொய்ரி பண்ணிப் பாருங்க அரவிந்தன்... நீங்க அங்கே என்கொய்ரியை முடிச்சுட்டு வர்றதுக்குள்ளே இந்த ஆர்ட் காலரியில் ஏதாவது தட்டுப்படுமான்னு பார்த்துடறேன்..."

"எஸ் ஸார்..." இன்ஸ்பெக்டர் அரவிந்தன் தலையசைத்து விட்டு, எதிரே இருந்த ஸ்டேஷனரி மார்ட்டை நோக்கிப் போனார். டெலிபோனில் யாரிடமோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்த அந்த நடுத்தர வயது நபர், அரவிந்தனைப் பார்வையில் வாங்கியதும் டெலிபோன் பேச்சை அவசர அவசரமாய் முடித்துக் கொண்டு எழுந்தார். காக்கி யூனிஃபார்ம் அவருடைய கண்களில் மிரட்சியை விதைத்தது.

"வா... வாங்க... ஸார்..."

"இந்த கடைக்கு நீங்கதான் ஓனரா?"

"ஆமா ஸார்..."

"பேரு...?"

"திருமலைங்க..."

"எதிர்ல ஆர்ட் காலரி இருக்கே... அதை வெச்சு நடத்தற அகிலை உங்களுக்குப் பழக்கம் இருக்கா...?"

"பெரிய பழக்கமெல்லாம் இல்லீங்க... எதிரெதிரே பார்த்துக்கிட்டா... சிரிச்சு விஷ் பண்ணிக்கிறதோடு சரி..."

"அகிலைப் பார்க்க ஆர்ட் காலரிக்கு நிறைய பேர் வருவாங்களா...?"

"ம்.. வருவாங்க. பணக்காரங்கதான் ஜாஸ்தி. ஆயிரம் ரெண்டாயிரம்ன்னு விலை குடுத்து அவரோட பெயிண்டிங்குகளை வாங்கிட்டுப் போவாங்க..."

"அவரோடு நெருங்கிப் பழகற ஆட்கள் யாரையாவது உங்களுக்குத் தெரியுமா...?"

"தெரியாது ஸார்..." உதட்டைப் பிதுக்கிய கடைக்காரர் சற்றே கலவரமாய்க் கேட்டார். "எதுக்காக ஸார்... திடீர்ன்னு வந்து அவரைப் பத்தி விசாரிக்கறீங்க...?"

"நேத்து ராத்திரி அகில் அவர் வீட்ல வெச்சுக் கொலை செய்யப்பட்டிருக்கார்."

கடைக்காரரின் கண்கள் கலவரப்பட்டன.

"கொ... கொலையா...?"

"இந்தக் கொலையில் ஒரு ஆணும் பெண்ணும் சம்பந்தப்பட்டிருக்காங்க. அகிலைப் பத்தி உங்களுக்கு ஏதாவது தகவல் தெரிஞ்சிருந்தா... அதை இப்பவே சொல்லிடறது நல்லது."

"அவரைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது ஸார்."

"ஆர்ட் காலரியில் போன் கிடையாது. அவர் யாருக்காவது போன் பண்ணணும்ன்னா உங்க கடைக்கு வருவாரா?"

"இதுவரைக்கும் வந்ததில்லை ஸார்..."

"வேற யார்கிட்டே கேட்டா அகிலைப் பத்தின தகவல்கள் கிடைக்கும்?"

"எனக்குத் தெரியாது ஸார்..."

'இந்த ஆளை விசாரிப்பதில் பிரயோஜனம் இல்லை' - அரவிந்தன் மறுபடியும் ஆர்ட் காலரிக்குப் போனார். விஜயசாரதி, ஆர்ட் காலரியை அலசி விட்டு அங்கிருந்த பாலிவினைல் நாற்காலியொன்றில் சாய்ந்திருந்தார்.

"என்ன அரவிந்தன்... ஏதாவது தகவல்?"

"ஒண்ணும் பெயரலை ஸார்..."

"சரி.. இதைப் பாருங்க கொஞ்சம்..."

● உலகில் உள்ள எருமைகளில் ஐம்பது சதவீதம், இந்திய கிராமங்களில்தான் உள்ளன. தமிழ் நாட்டு கிராமங்களில் மட்டும் நாற்பது லட்சம் எருமைகள் உள்ளன!
தகவல் : எஸ். பொன்னுசாமி

சொன்ன விஜயசாரதி ஒரு துண்டுச் சீட்டை நீட்டினார்.

அரவிந்தன் வாங்கிப் பார்த்தார். ஆங்கிலத்தில் அந்த வார்த்தை தெரிந்தது.

HALOPERIDAL - 15

"என்ன ஸார் இது...? ஹேலோபிரிடால்னு எழுதி நெம்பர் பதினஞ்சை போட்டிருக்கு. இதுக்கு என்ன அர்த்தம்...?"

"தெரியலை... அந்த மேஜை ட்ராயர்களை செக் பண்ணிப் பார்த்தப்ப இந்த வாசகம் எழுதப்பட்ட துண்டுச் சீட்டு ஒண்ணு கிடைச்சது. ஏதாவது கோட் வேர்ட்ஸா இருக்குமோன்னு எடுத்து வெச்சேன். ஊர்ல வேற யாராவது ஆர்ட்டிஸ்ட் இருந்தா இந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம்னு கேட்கணும். வேற ஆர்ட்டிஸ்ட் யாரையாவது உங்களுக்குத் தெரியுமா...?"

"விசாரிச்சு கேட்டுப் பார்க்கிறேன் ஸார்..." அந்தத் துண்டுக் காகிதத்தை பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டார் அரவிந்தன்.

டி.எஸ்.பி. விஜயசாரதி காலை டிபனை முடித்துக் கொள்ள வீடு திரும்பிய போது பத்து மணி.

டைனிங் டேபிளில் உட்கார்ந்து, இட்லியை விண்டுச் சட்டினியில் தோய்த்துக் கொண்டே இடதுகையால் காலையில் வந்த தமிழ் நாளிதழின் பக்கங்களைப் புரட்டினார். சாப்பிடும்போதே பத்திரிகையைப் படித்து விடுவது அவர் வழக்கம்.

இரண்டு பக்கச் செய்திகளை மேய்ந்து விட்டு மூன்றாவது பக்கத்துக்கு வந்தவரின் பார்வை சட்டென்று திக்கியது.

"இ... இது... இது...?"

மூன்றாவது பக்கத்தின் வலது ஓரத்தில் அந்த ஆண் - பெண் போட்டோக்கள் தெரிய கீழே வாசகங்கள்.

நீத்தார் நினைவு நாள்
சென்ற வருடம் இதே நாளில்
எங்களை விட்டுப் பிரிந்த அன்பு
தெய்வங்களுக்கு கனக்கும்
நெஞ்சோடு
எங்கள் கண்ணீர் அஞ்சலி.

இப்படிக்கு,
குடும்பத்தார்.

டி.எஸ்.பி. அந்த ஆண் - பெண் போட்டோக்களை உற்றுப் பார்த்தார். இருதயம் துரித வேகத்தில் துடித்தது.

சந்தேகமே இல்லை.

கொலை செய்யப்படும் முன், அகில் வரைந்து வைத்திருந்த அதே ஆண் - அதே பெண்!

(தொடரும்)

அழைப்பு மணி அடிக்கிறது. கதவின் கண்ணாடிக் குமிழில் கையில் பெட்டியுடன் வெளியே கணேசன் வியர்த்து நிற்கிறான். உடல் முழுவதும் பரபரப்பு கூடி தாழ்ப்பாள் விலகுகிறது. லலிதா பெட்டியை வாங்கிக் கொள்கிறாள். கழுத்து டையைத் தளர்த்தியபடி கணேசன் உள்ளே நுழைகிறான். காற்றுக்கு மேல் பட்டன் தெறிக்கிறது. களைப்பில் மூலைக்கொன்றாய் கால் பூட்ஸ்கள் அவிழ்ந்து சுவரில் மோதிக் கவிழ்கின்றன. தொப் பென்று சோபாவில் கணேசன் கண்களை மூடிக் கொள்கிறான். மேலே கரக் கரக் என்று மின்விசிறி சுழல ஆரம்பிக்கிறது.

காப்பி வாசனையில் கண்கள் திறக்கின்றன. இழுத்த இழுப்பில் லலிதா அவன் அருகே சிணுங்கி அமர்கிறாள். வரவேற்பறை சோபாவில் ஈர இதழ்கள் சந்தித்துப் பிரிகின்றன. அவன் அவளை இது போல் முத்தமிட்டுப் பதினேழு நாட்கள் ஆகின்றது.

ஒரு விற்பனையாளனின் வாழ்க்கையில்தான் எத்தனை அசௌகரி யங்கள்? கணேசனின் மொத்த வாழ்க்கையுமே ஒரு பெட்டிக்குள் அடங்கி விடுகிறது. மன்னரின் காடாறு மாதம் முடிந்து வீடாறு மாதம். பகலில் தங்கிய ஊரில் அவன் இரவில் இருந்ததில்லை. வெளியூர்ப் பேருந்துகளில் இடம் பிடிப்பதிலேயே அவன் வாழ்க்கை கழிகிறது.

வெவ்வேறு ஊர்களின் லாட்ஜ் ஜன்னல்களில் ஒரு நாள் கோவில், ஒரு நாள் தியேட்டர், ஒரு நாள் பள்ளிக்கூடம் என்று விதவிதமாய் விடிகிறது. காலையின் முதல் நினைவாய் விற்பனை இலக்கு தாக்குகிறது. லாட்ஜ் குளியலறை மூத்திர நாற்றத்தில் புத்துணர்ச்சி பெற்று, அன்றைய நாளைத் துவங்க வேண்டும். மெத்தென்று காலின் கீழ் புழுதி அடங்கும் செம்மண் தெருக்களில் அவன் தனது பெட்டிக்கடை வாடிக்கை யாளர்களைத் தேட வேண்டும்.

நடைமுறை வாழ்வில் அவன்தான் எத்தனை ஜனங்களை சந்திக் கிறான்? ஷாம்பூ, சிகைக்காய், பல் பொடி, இருமல் மருந்து, வாச னைப் பாக்கு என்று முதலாளியின் மூளையில் உதிக்கிற வித்தி திரங்களை எதிராளியின் பலஹீனத் தருணம் உணர்ந்து, வார்த்தைகளில் சரசமாடி, விற்பனை ஆர்டர் புக் வெளியே வரும். பண விஷயம் சற்று முன்னே பின்னே இருக்கும். அதனால் என்ன? அவன்தான் லேகிய டாக்டர் மாதிரி சீக்கிரமே திரும்பவும் அந்த ஊருக்கு வரப் போகிறானே?

அலுப்பில் கணேசன் பெருமூச்சு விடுகிறான். வரவேற்பறை சோபாவில் அவன் அணைப்பில் லலிதா நெளிந்து கொள்கிறாள். திருதிராஷ்டிரன் கையில் கிடைத்த பீமனின் இரும்புப் பதுமை.

உண்மையில் ஒரு விற்பனையாளனை விட, அவனுடைய மனைவியின் வாழ்க்கை சற்றே கூடுதல் கடினமாகும். சேர்ந்திருக்கும் நேரங்களில் பிரிவைப் பற்றியும், கணவனைப் பிரிந்த சமயங் களில் ஒன்றாயிருந்த தருணங்களைப் பற்றியு மாய் அல்லாததும், பொல்லாததுமாய் மனதில் ஆயிரம் கலக்கம் தோன்றும். தற்சமயம் சௌக் கியம் என்று ஒரு வரிக் கடிதம் எழுதாத கண வனை நினைத்தால் கோபம் வரும். அங்கே என்ன கஷ்டமோ என்று மனம் பதைபதைக்கும். எதுவும் நிகழ்ந்து விடாது என்று அவ்வப்போது தைரியம் கொள்ளும்.

வீட்டு வாசலில் லக்ஷ்மணன் கோடு கிழித் தாற்போல் இந்தப் பதினேழு நாட்களில் லலிதா



ம. வே. சிவகுமார்


அதிகம் வெளியே போகவில்லை. ஒருமுறை மின்சார பில் கட்டினாள். காய்கறிகள் படியேறி அவள் வாசலுக்கே வந்து விடுகின்றன. கணேசன் ஊரில் இல்லாமல் சமைப்பதும், சாப்பிடுவதும் ஒட்டாமல் போய் விடுகிறது. சமையலறை ஜன்னலில் தெரிகிற எதிர் பிளாட் குஜராத்திப் பெண் காலை வேளைகளில் தன் கடலை மாவுப் பணியாரங்களின் நடுவே தலைநிமிர்ந்து எப்போதாவது சிரிப்பாள். கண் மறைவில் பல்லி சூள் கொட்டும். மற்றபடி நாளும், கிழமையும் நகர்வது தெரியாமல் வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளே லலிதா தவமிருக்கிறாள். அதன் கடுமையின் பலனாக, வேள்வியின் நடுவே முளைத்த வேதியன் போல திடுதிப்பென்று அறிவிப்பு இன்றி அழைப்பு மணி அடித்து நின்ற கணேசனைப் பார்த்ததும் அவளுக்குள்ளே படர்ந்த சந்தோஷத்தைப் போலவே சோபாவில் கணேசன் மேல் லலிதா படர்கிறாள். ஒரு வரிக் கடிதம் எழுதாத பதினேழு நாள் கோபம் நொடியில் கரைந்து போகிறது.

"மணி என்ன?"

அரைக் கண்ணில் கணேசன் கேட்கிறான்.

"நாலரை."

பழக்கப்பட்ட ஜன்னல் வெய்யிலில் லலிதா கடிகாரம் பார்க்கவில்லை.





ஆசிரியர் : என்னய்யா இது, அந்த புரொட்யூசர் நாலு பாக்கெட் இஞ்சி முரப்பா அனுப்பியிருக்காரே, ஏன்?

உதவி ஆசிரியர் : படத்தோட கதைய ஜீரணிக்க முடியலைன்னு விமர்சனம் எழுதிட்டோமாம்!

— அம்பை தேவா

★★★★★★★★★★★★★★★★★★★

"லெட்டர் ஏதாவது உண்டா?"

பதிலுக்கு லலிதா செல்லமாய் முறைக்கிறாள். தம்பதிகள் பொருளாதாரக் காரணங்களுக்காக பிள்ளைப் பிறப்பை ஒத்திப் போட்டிருக்கிறார்கள். இந்த வருடம் விற்பனை இலக்கை எட்டி விட்டால் அடுத்த வருடம் முதல் குழந்தையைத் திட்டமிட்டு விடலாம்.

கணேசன் எழுந்து கொள்கிறான். அவனுக்குப் பிடித்த சமையலை லலிதா செய்து முடிக்கிறாள். குழாயடியில் எண்ணெய் வாணலி இரைச்சலிடுகிறது. பூனைக்கு ஜன்னல் கதவு மூடி, வரவேற்பறைக்கு அவள் வந்த போது கணேசன் குளித்து விட்டு வேட்டியில் பளிச்சென்று இருக்கிறான்.

"சாப்பாடு ரெடி."

வெந்த சோறு போல் லலிதாவின் குரல் குழைகிறது.

"கொஞ்சம் இரு."

"ஏன்?"

"செங்கல்பட்டிலே போண்டா சாப்பிட்டேன்."

"அப்புறம்?"

"அப்புறமென்ன? விழுப்புரம்தான்."

"அய்யய்யோ. திரும்பவும் கௌம்பிடப் போறேன்."

பொடிநடையாய் தம்பதிகள் மார்க்கெட் வரை போய் வரலாம் என நினைக்கிறார்கள். லலிதா ஒருக்களித்த கதவில் பச்சைப் புடைவைக்கு மாறுகிறாள். மடித்த துணிப்பையை கணேசன் எடுத்துக் கொள்கிறான்.

பிளாஸ்டிக் நாற்காலியில் ஐஸ்கிரீம் சாப்பிடுகிறார்கள். இருவரையும் சேர்ந்து பார்த்த பூக்காரி, வழியில் முழம் போட்டு ஓடி வருகிறாள். பயணப்படி மிச்சப் பணத்தில் பாத்திரச் சீட்டு கட்டுகிறார்கள். கணேசன் பிளேடு வாங்கிக் கொள்கிறான். தையல் கடையில் லலிதா அளவு ரவிக்கை கொடுக்கிறாள். வெளியே தூறல் ஆரம்பிக்கிறது. பக்கம் மூடிய ஆட்டோவில் வீடு திரும்புகிறார்கள்.

"மடையன்."

மாடிப்படி வளைவில் கணேசன் தலையில் தட்டிக் கொள்கிறான். கீழ்ப்படியில் லலிதா தலைநிமிர்கிறாள்.

"என்ன?"

"இன்னிக்குத் தேதி என்ன?"

யோசனையில் உயர்ந்து மூக்குத்தி பளிச்சிடுகிறது.

"இன்னிக்கு ஏப்ரல் பதிமூணு."

"உம்."

"நாளைக்கு ஏப்ரல் பதினாலு."

"அதுக்கென்ன?"

"அதுக்கென்னவா? நாளைக்கு வருஷப் பிறப்பில்லையா?"



'மட்டி'ப் பழத்தில் மயங்கிய கவிஞர்!

'மட்டி' என்றால் முட்டாள் என்று பொருள். குமரி மாவட்டத்திலோ மட்டி என்பது ஒரு வகை வாழைப் பழத்தின் பெயர். உருவத்தில் சிறிய பழமானாலும் சுவையில் தேன். இந்தப் பழச் சுவையில் மயங்கிய எங்களூர்க் கவிஞர் க. உமைதாணுப் பிள்ளை பாடிய கவிதை இது :

மஞ்சள் குளித்திருக்கும் மனதைக் கவர்ந்திழுக்கும்
கொஞ்சம் முதுகும் கோணலாய் வளைந்திருக்கும்
தொட்டுப் பார்த்தாலோ முத்தமிட வைக்கும்
மட்டு சொட்டும் மட்டிப்பழம்!
(மட்டு-தேன்).

தேரூர், ஆர். உமாசத்தியன்

"அட, ஆமாம்."

"அதுக்குத் தட்டு வைக்க வேண்டாமா?"

"என்ன தட்டு?"

கதவில் சாவி திரும்பியதும் பூட்டு திறந்து கொள்கிறது. லலிதா கொடியில் துண்டெடுத்து கணேசனிடம் நீட்டுகிறாள். அதை வாங்கிக் கொள்ளாமல் அவன் மேலே தொடர்கிறான்.

"என்ன தட்டுன்னு கேக்கறியே. நீ என்ன ஆப்ரிக்காவிலேயா பொறந்தே?"

கணேசனின் கோபத்தில் லலிதாவின் மலர்ச்சியான முகம் வாடி விடுகிறது. அவன் என்ன சொல்லுகிறான் என்றே புரியவில்லை. விளக்கமாய் மேலும் கேட்கவும் பயமாய் இருக்கிறது. சமையலறையில் இரவுச் சமையலை சூடு செய்கிறாள். கணேசனுக்குப் பிடிக்குமேயென்று அவள் ஆசையாய் பார்த்துச் செய்த சமையல். பதினேழு நாட்களுக்குப் பிறகு அவள் கையால் அவன் சாப்பிடப் போகிறான். அப்போது பக்குவமாய் விசாரித்துக் கொள்ளலாம். புடவைத் தலைப்பில் கையைத் துடைத்து லலிதா வரவேற்பறைக்கு வருகிறாள். கோபத்தில் கணேசன் உர்ரென்று உட்கார்ந்திருக்கிறான்.

"சாப்பிட வர்றீங்களா?"

"வேண்டாம்."

"ஏன்?"

"புது வருஷத்தில் தட்டுப் பார்க்கிற வழக்கம் உன் வீட்டில் கிடையாதா?"

"என்ன தட்டு?"

லலிதா, நாக்கைக் கடித்துக் கொள்கிறாள்.

"சனியன்."

கணேசன் படுக்கையறையின் விளக்கை அணைக்கிறான். ஜன்னலுக்கு வெளியே மழை பெய்கிறது. மேஜையில் கணேசனுக்காக அவள் ஆசையாய்த் தயார் செய்த உணவு வகைகள் சூடு ஆறிப் போகிறது. எதுவும் பிடிக்காமல் கொஞ்சம் நேரம் கழிகிறது. லலிதா படுக்கையறையில் எட்டிப் பார்க்கிறாள். கணேசனின் மெல்லிய குறட்டை ஒலி கேட்கிறது.

கடிகாரத்தில் இரவு மணி எட்டரை. கூச்சத்தை விட்டு லலிதா புறப்படுகிறாள். விவரங்கள் நிறைந்த வயதான மாமியொருத்தி எதிர் வரிசை மூலை ஃப்ளாட்டில் கடக்கிற போதெல்லாம் சிரிப்பாள். சென்ற வருடப் பிறப்பின் போது கணேசன் வெளியூர் சென்று விட்டான். கல்யாணமாகி இரண்டு வருடங்களில் இதுதான் அவள் வீட்டிலிருக்கிற முதல் வருடப் பிறப்பு.

"மாமி."

திறந்த கதவில் மாமி சிரிக்கிறாள். எதிர் பார்த்தபடி. அவளுக்கு விவரம் தெரிந்திருக்

மகாசக்தி
பெனிபிட் பண்ட் லிட்.,

நெ. 55, காந்தி ரோடு, (2-வது மாடி), வேலூர்-4.

"டிபாசிட் சேகரிப்பு மாதம்"

டிபாசிட் தொகை ரூ. 10,000/-

காலம் ஒரு வருடம் வட்டி விகிதம் 18%

பிரதி மாதந்தோறும் வட்டி வழங்கப்படும்.

சிறு வியாபாரிகளே, மாதாந்திர சம்பளம் வாங்கும் தொழிலாளிகளே, ஆசிரியப் பெருமக்களே,
மத்திய, மாநில அரசு ஊழியர்களே, மற்றும் பொதுமக்களே,

நகையின் பேரில் பணம் தேவையா?

குறைந்த வட்டியில் பணம் வழங்குகிறோம்



தங்க நகையின் மீது கிராம் 1-க்கு ரூ. 300/- வரை.
வட்டி விகிதம் ரூ. 100/- ஒரு மாதத்திற்கு ரூ. 1-80.
முன் மாத வட்டி பிடித்தம் இல்லை.
நாள் கணக்கில் வட்டி கணக்கிடப்படும்.

அப்ரைஸர் கட்டணம் இல்லை
இன்சூரன்ஸ் இல்லை
R.D. கட்ட வேண்டியது இல்லை

நகை அடகு வைக்கும் நேரம் :	நகை மீட்கும் நேரம் :
காலை 10 முதல் 1.30 மணி வரை	காலை 10 முதல் 1.30 மணி வரை
மாலை 3.30 முதல் 5 மணி வரை	மாலை 3.30 முதல் 6 மணி வரை

ஞாயிறு விடுமுறை

மேலும் விவரங்களுக்கு :

மேனேஜிங் டைரக்டர்,
மகாசக்தி பெனிபிட் பண்ட் லிட்.,
நெ. 55, காந்தி ரோடு, 2-வது மாடி, வேலூர் - 4.

குறிப்பு :
1) விரைவில் சேமிப்புத் திட்டங்கள் தெரிவிக்கப்படும்.
2) மத்திய, மாநில அரசாங்க ஊழியர்களுக்கான கடன் வசதி திட்டம் அறிவிக்கப்படும்.
3) வீடு/மனை கடன் இன்னும் சில நாட்களில் துவங்கப்படும்.

ரூ. **5/-** செலுத்தி உறுப்பினர் ஆவீர்.

லேவாதேவி உறுப்பினர்களுக்கு மட்டும்.

கிறது. பெரிய தாம்பாளமாய் எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் வெற்றிலைப் பாக்கு, பூ, பழவகைகள், ஆழாக்கு அரிசி, ஒரு ரூபாய் நாணயம், பவுன் நகை, முகம் பார்க்கிற கண்ணாடி என்று மங்கலமாய் பொருள்கள் வைத்து, புது வருடத்தில் காலை விழித்ததும் பார்க்கிற மாதிரி அமைந்தால் வருடம் முழுவதுமே சுபிட்சமாய் இருக்குமென்று ஒரு நம்பிக்கை.

"வெத்தலைப் பாக்கு, பழமெல்லாம் வேணுமே?"

லலிதா கவலையாய் ஜன்னலைப் பார்க்கிறாள். வெளியே தெரு ட்யூப் லைட் வெளிச்சத்தில் சாரல் அடிக்கிறது.

"நான் போய் வாங்கிட்டு வர்றேன்."

மாமியின் பதினோரு வயதுப் பேரன் உற்சாகமாய் சொல்லுகிறான்.

"வெளிலே மழை பெய்யுதே."

"ஜாலி. நான் ரெயின்கோட் வாங்கினப்பறம் மழையே பெய்யலே!"

புது ரெயின் கோட்டில் பேரன் புறப்படுகிறான். பூஜையறை தாம்பாளத்தில் கோலம் போட்டு, அனைத்தையும் அடுக்கி விட்டு லலிதா நகர்ந்து நின்று பார்க்கிறாள். கணேசன் சாப்பிடாமல் அவளுக்கும் சாப்பிடப் பிடிக்கவில்லை. படுக்கையறையில் கட்டில் அசங்காமல் உறங்கிப் போகிறாள்.

காலை ஐந்து மணிக்கு விழிப்பு வருகிறது. இருட்டில் மெல்ல நடந்து வரவேற்பறைக்கு வருகிறாள். பூஜையறை தாம்பாளத்தில் கணேசன் விழிக்க வேண்டும். இருளில் மேலும் நடந்து சமையலறை வருகிறது. சற்று நேரம் சுவரில் தேடி லலிதா விளக்கைப் போடுகிறாள்.

மேஜையில் எச்சில் தட்டு கண்ணில் படுகிறது. காய்ந்த விரல் தடங்கள். நடுவே கடித்துப் போட்ட முருங்கைச் சக்கை. அரிசிப் பருக்கையை எறும்பு இழுக்கிறது. கொஞ்சம் யோசனையில் விஷயம் புரிகிறது. அவள் தூங்கின பிறகு கணேசனுக்குப் பசித்திருக்க வேண்டும். அவளை எழுப்ப மனமில்லாமல் சமையலறை ஜன்னலை அவள் மூடி விட்ட பிறகு கணேசன் பூனைதான் வந்திருக்கிறது.

லலிதா மேஜையின் எச்சில் தட்டை ஆசையாய்ப் பார்க்கிறாள். புது வருடத்தில் முதன் முதலாய் அவள் கண்ணில் பட்ட கணேசனின் எச்சில் தட்டு.

மகிழ்ச்சியில் முறுவலித்து பூஜையறை தாம்பாளம் புறப்படுகிறது.

புது வருடம் நிச்சயம் வெகு சுபிட்சமாய் இருக்கும்.

வெளியே மழை சப்தம் கேட்கிறது.

தாய்ப்பால் குடித்து வளரும் பயிர்!

பூச்சி மருந்து சகட்டுமேனிக்குப் பயன்படுத்தப்படும்போது அந்தப் பயிரை உணவாக்கிக் கொள்வோரும் நாளடைவில் பாதிக்கப்படலாம். பசுந்தாள் உரத்தில் இந்த அபாயம் இல்லை.

சத்தமில்லாமல் ஒரு பசுமைப் புரட்சி நடந்து கொண்டிருக்கிறது முல்லைக்குடி கிராமத்தில்.

முல்லைக்குடி. பெயரே அழகாயில்லை?

திருச்சியில், சத்திரம் பேருந்து நிலையத்தில் இறங்கி, சலசலத்து ஓடும் காவிரி நதியோடு நாமும் ஓடினால் (ஓட முடியாதவர்கள், கல்லணை செல்லும் டவுன் பஸ்ஸிலும் வரலாம்) ஆறுகிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இம் முல்லைக்குடி.

இடது பக்கம் ஜீவநதியின் கலகல சிரிப்பு. நடுவில் பத்தடி தார் சாலை. வலது பக்கம் திரும்பினால்... ஆஹா!

கண்ணுக்கெட்டிய தொலைவு வரை பச்சைப்பசேல் வயல்வெளி. பயிர்கள் தலையசைத்து நமக்கு 'ஹலோ' சொல்லி கைகுலுக்குகிறது. இது புனித வளனார் கல்லூரிக்குச் சொந்தமான பண்ணை. (செயின்ட் ஜோசப் காலேஜ்)

பண்ணை அலுவலகத்தில் அதன் மானேஜர், ரிவெரண்ட் சகோதரர் அருளானந்தம் அவர்களைச் சந்திக்கலாம்.

"நிலத்தில் உரமிடும் முறையில் புதுமை செய்கிறீர்களாமே?'' என்று கேட்டதும், பொருளார்ந்த பதிலைச் சொன்னார், விவசாயத்தில் இருபத்தைந்து வருட அனுபவமுள்ள அவர்.

''இரசாயன உரத்தின் அளவைக் குறைத்து, பசுந்தாள் உரம் உபயோகிக்கிறோம்" என்றார் குறளின் சுருக்கமாய்.

"எப்படி?"

"நெல் பயிரிடுவதற்கு நாற்பது, ஐம்பது நாட்களுக்கு முன் நிலத்தை வீரியமாக்குகிறோம். உழுது, வரப்பு கட்டிய நிலத்தில், தக்கைப் பூண்டு, சணப்பு செடிகளின் விதைகளைப் பயிரிட்டு வளர்க்கிறோம். கிட்டத்தட்ட ஒரு ஆள் உயரம் வளரும் இச்செடிகளை அப்படியே மீண்டும் உழுகிறோம். இந்தச் செடிகளின் இலை, "வேர் முடிச்சு," தழைகள்தான் நைட்ரஜன் சத்து அதிகமுள்ள இயற்கையான பசுந்தாள் உரம்."

திருச்சி மாவட்ட விவசாயத்துறை அலுவலகத்தின் பரிந்துரையில் பேரில், சேலத்திலிருந்து விதைகளைத் தருவித்து, இம்முறையில் பயிரிடுகிறாராம்.

பொதுவாக, இரசாயன உரத்தில் NPK உள்ளது. அதாவது நைட்ரஜன் (தழைச்சத்து) பாஸ்பேட் (மணிச்சத்து), பொட்டாஷியம் (சாம்பல் சத்து) கலவை அது. பயிரைப் பொறுத்து கலவையின் சதவீதம் மாறும்.

தழைச்சத்து பயிரின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும். மற்ற இரண்டும் கதிரில் அதிகப் பதர் உண்டாகாமல் காக்கும். (ஒரு கதிரில் 120 மணிகள் விளைந்தால் மிக நல்ல மகசூல். பிராக்டிகலாய், சராசரியாய் எண்பது முதல் நூறு வரைதான் முடிகிறதாம்.)


இரசாயன உரம், மண்ணில் உள்ள சத்தை எடுத்து பயிருக்குக் கொடுக்கவே உதவுகிறது. இதனால், நாளாவட்டத்தில், மண்ணின் வீரியம் குறைந்து போய், மகசூலின் அளவும் குறைகிறது.

பசுந்தாள் உரம் உபயோகிப்பதன் மூலம், மண்ணின் வீரியம் கெடாதது மட்டுமல்ல, சத்தும் அதிகரிக்கிறது. இந்த உரம் மண்ணில்

தளர்வை உண்டாக்கி, வேர் எளிதாக உள்ளே செல்லவும் வழி வகுக்கிறது.

"தாய்ப்பால் குழந்தைக்கும், புட்டிப்பால் குழந்தைக்கும் உள்ள வித்தியாசம் போலத் தன் இதுவும்" என்றார், அவரே சுவையான உதாரணத்துடன்

அறுபது சதவீத இரசாயன உரத்தைக் குறைத்து பசுந்தாள் உரம் உபயோகிப்பதால் மண்ணின் தன்மையில் வீரியம் அதிகமாகி, நாலைந்து வருடங்களில் மகசூலும் இருபத்தைந்து விழுக்காடுக்கும் மேல் அதிகமாகிறது.



• அருளானந்தம்

இப்போது இது தடுக்கப்படுவதோடு, முக்கியமாய் சுற்றுப் புறச் சூழலும் பாது காக்கப்படுகிறது. பூச்சி மருந்து சகட்டு மேனிக்குப் பயன் படுத்தப்படும்போது அந்தப் பயிரை உணவாக்கிக் கொள்வோரும் நாளடைவில் பாதிக்கப் படலாம். பசுந்தாள் உரத்தில் இந்த அபாயம் இல்லை.



• பசுமைப் புரட்சி...

மற்றொரு முக்கியமான பயனும் இருக்கிறது.

பயிரின் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதால், பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த முடிகிறது. பூச்சிக் கொல்லி மருந்துகள் தேவைப்பட்டால் மட்டுமே உபயோ கிக்கப்படுகிறது.

பூச்சி மருந்து உபயோகிக்கும் போது, பயி ருக்குக் கெடுதல் செய்யும் பூச்சிகளான புகை யான், தண்டுப்புழு போன்றவை மட்டு மல்லாமல், பயிருக்கு நன்மை செய்யும் பூச்சி களான ஊசித்தட்டான், சில வகை வண்டு களும் கூட அழிந்து போகும்.

புஷ்டியான குழந்தை பெற வேண்டு மானால், பேறுகாலத்தில், தாய் திடமாய் நல்ல உடல் நலத்தோடு இருக்க வேண்டும்; சத்துள்ள உணவை உண்ண வேண்டும் அல் லவா? அதே போல, நிலம் சத்துள்ளதாய், வீரியமாய் இருந்தால் வளரும் பயிரும், கிடைக்கும் நெல் மற்றும் தானியங்களும் நல்ல எடையுடன், சத்துள்ளதாய் இருக்கும்.

150 ஏக்கர் பரப்பளவில், நூறு குடும் பங்களுக்கும் மேல் வாழ்வளித்து வரும் இப்பண்ணையில் நடக்கும் பசுமைப் புரட்சி, விஞ்ஞான முன்னேற்றமே அஞ்ஞானமாகி விடாமல் காத்துத் தருகிறது.

- கிருஷ்ணா

டேக் இட் ஈஸி!

●● 'அதிரடிப்படை' தயாரிப்பில் படு நஷ்டம் கண்ட ரோஜா, ரஜினியிடம் தஞ்சமடைந்து கால்ஷீட் கேட்டிருக்கிறார். இரக்கப் பிறவி அல்லவா சூப்பர் ஸ்டார்? 'பாட்ஷா', 'வாத்யாரைய்யா'வுக்குப் பிறகு ரோஜாவுக்கு கால்ஷீட் தருவதாக வாக்களித்திருக்கிறாராம்!

செல்வமணிக்கு அட்வான்ஸ் கங்கிராஜுலேஷன்ஸ்! (ஒரு பூகம்தான் சார்!)

●● "நடிகர்கள் அரசியலுக்கு வரக் கூடாது என்று ஏதும் சட்டம் இருக்கிறதா? வந்தால் என்ன தப்பு? நடிப்பு மட்டும்தானா நடிகனுக்கு வாழ்க்கை? எல்லாத் துறையிலும் பிரகாசிக்க வேண்டாமா?"

'நடிகர்கள் அரசியலுக்கு ஏன் அதிகம் வருகிறார்கள்?' என்று யாரோ கேட்கப் போய் மைக், சோடா இல்லாமல் ஒரு பிரசங்கம் நடத்தி விட்டவர் நாசர்.

ஆக...

வெல், எந்தக் கட்சிக்கு சார் அந்த பாக்கியம் கிட்டப் போகிறது?



●● "அதிரடி ஆக்ஷன் ரோலில் நடிக்கத் துடிக்கிறேன். விஜயசாந்திக்குக் கிடைக்கிற மாதிரி எனக்கொரு படம் கிடைத்தால் பின்னி விடுவேன்" என்கிறார் மோகினி.

மேடம், பேசாமல் எம்.எல்.ஏ. ஆகி விடுங்களேன்?

●● "பொழுதுபோக்கிற்காகத்தான் மக்கள் படம் பார்க்க வருகிறார்கள். அதில் கலித்தொகை, கலிங்கத்துப்பரணி பாடல்களா எழுதுவது? யார் கேட்பார்கள்? நமது இலக்கிய வெளிப்பாடுகளுக்கு சினிமாவைப் பயன்படுத்தினால் தயாரிப்பாளர்கள் பாடு அம்போதான்!"

இப்படிச் சொன்னவர் கவிஞர் வாலி.

இது கலிகாலம்.

●● சினிமாவில் பாட்டுப் பாடுகிற ஆசை ஒருத்தரையும் விடாது போலிருக்கிறது. ராஜ்கிரணின் 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் வடிவேலு இரண்டு பாடல் பாடி (கதி)கலக்கியிருக்கிறாராம் சொந்தக் குரலில். Take it easy!

- ராம்கம்பர்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

தலைவலி உங்கள் மண்டையைப் பிளக்கும்போது.

முக்கியமான வேலைகளை அலுவலகத்தில்

சரிவர செய்ய முடிவதில்லை.

தலைவலியை விரட்டுங்கள்
ஜண்டு பாம் தடவுங்கள்

விரைவில் துடிப்புடன் விளங்குங்கள்.



ஜண்டு பாம் ஜண்டு பாம் வலியை நீக்கும் பாம்
ஜலதோஷம் தலைவலி நோவுகளையும்
நொடியில் நீக்கிடுமே

பாம் ஒன்று, செயல் மூன்று.

1. ஜலதோஷம்
2. தலைவலி
3. உடம்பு வலி



30, 10 கிராம் பேக்கில்

AP/ZB/524/94/TAM/H